www.padippakam.com

www.dalithmurasu.com

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
மே 2006 Vol : 3 - Iss : 7
ரூ. 6

## கொல்லும் பசி

## கொழுக்கும் பங்குச்சந்தை



படிப்பகம்

www.padippakam.com



# உங்களுடைய உண்மையான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுங்கள் - II

நாடாளுமன்ற அவைத் தலைவர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட உறுப்பினரைக் கேள்வி கேட்க - ஒருவேளை பெருந்தன்மையாக அனுமதித்து விட்டாலும், அது அவைக் குறிப்பில் இடம் பெறுவதற்கு முன்பே - காங்கிரஸ் கட்சியின் தலைமைக் கொறடா அந்த உறுப்பினரிடம் பேசி, அக்கேள்வியைத் திரும்பப் பெற வலியுறுத்துவார். அதையும் மீறி ஒருவேளை அந்தக் கேள்வி பதிவாகிவிட்டால், அக்கட்சியின் கொறடா அந்த உறுப்பினரை அன்று மட்டும் ஊரைவிட்டே வெளியேறச் சொல்லி விடுவார். இக்கேள்விக்கான பதில் தேவைப்பட்டாலும், கேள்வி எழுப்பிய உறுப்பினர் இல்லாததால், நாடாளுமன்றத்தில் எந்த விவாதமும் நடைபெறாது. இப்பிரச்சினை அத்துடன் முடிவுக்கு வந்துவிடும்.



நாடாளுமன்றத்தில் நிதிநிலை தொடர்பான விவாதங்கள் நடைபெறும்போது, எந்த உறுப்பினர் வேண்டுமானாலும் நிதிநிலை குறித்துப் பேசலாம். தாங்கள் சார்ந்திருக்கும் சமூகத்திற்கும், கட்சிக்கும் எத்தகைய சிறப்பு உரிமைகள் வேண்டும் என்று கோரலாம். தேவையற்ற திட்டங்களுக்காக நிதியை வீணடிப்பதற்குப் பதில் முக்கியத் தேவைகளுக்கான கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுவதைச் சுட்டிக் காட்டலாம். ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளில், ஒரே ஒரு உறுப்பினர்கூட வெட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றியதை நான் பார்த்ததில்லை. இதற்கெல்லாம் காங்கிரஸ் கட்சியின் கட்டுப்பாடுகளே காரணம். கட்சி உறுப்பினர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் எனில், முன்கூட்டியே அவர்கள் கட்சிக் கொறடாவிடம் அனுமதி வாங்க வேண்டும். ஆனால், இந்த நான்கு ஆண்டுகளில் காங்கிரசில் உள்ள தாழ்த்தப்பட்ட உறுப்பினர்கள் எவரும் எந்த சட்ட வரைவையும் முன்மொழிந்ததில்லை.

தீண்டத்தகாத மக்கள், இந்தியக் கிறித்துவர்கள், ஆங்கிலோ - இந்தியர்கள் ஆகியோருக்கான சட்டரீதியான சிறப்புரிமைகளை / அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களை - அவர்களுடைய எதிரிகள் காங்கிரஸ் மூலம் ஆக்கிரமித்துக் கொண்டால் அவர்கள் எப்படி அதை அனுபவிக்க முடியும்?


ஆங்கிலேயர்கள் இந்தியாவில் இருந்தபோது நம்முடைய சமூகத்திற்கான நலத்திட்டங்களை செயல்படுத்த விரும்பியிருந்தால் செய்திருக்கலாம். ஆனால், அவர்களும் நம்மை ஏமாற்றி விட்டனர். அந்தக் காலம் கடந்து விட்டது. ஆனால், இன்றைய காலகட்டத்திலும் நாம் கவனமாக இல்லாமல், நம் கண்களை மூடிக் கொண்டிருந்தால், நாம் அழிந்து விடுவோம். இனி வரும் தலைமுறையினரும் நம்மைப்போல துன்பப்படக்கூடாது என நினைத்தால், நீங்கள் இப்பொழுது ஏதாவது செய்தாக வேண்டும்.

நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் இடஒதுக்கீடு இன்னும் 10 ஆண்டுகளுக்கு மட்டுமே இருக்கும் என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இந்தியாவில் தீண்டாமை நீடித்திருக்கும்வரை, இடஒதுக்கீடு இருக்க வேண்டும் என்று நான் வலியுறுத்தியபோது, காங்கிரஸ் சார்பில் தேர்தலில் போட்டியிட்ட நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் என்னை எதிர்த்தனர். எனவே, ஒன்றும் இல்லாமல் இருப்பதற்குப் பதில் ஏதாவது கிடைக்கட்டுமே என்ற வகையில், நான் 10 ஆண்டுகளுக்கு இடஒதுக்கீடு என்ற திட்டத்திற்கு ஒப்புக் கொண்டேன். இந்த இடஒதுக்கீடு இரண்டு தேர்தலுக்கு மட்டும்தான் இருக்கப் போகிறது. அதுவரை மட்டுமே காங்கிரஸ் போன்ற கட்சிகள், உங்களிடம் வாக்குகளுக்காகக் கையேந்தி நிற்கும்.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இந்த இடஒதுக்கீட்டை நீட்டிக்கும்படி உங்களுக்காக யாரும் கேட்கப் போவதில்லை. அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சி, நீங்கள் அவர்களின் சார்பில் தேர்தலில் நிற்க வேண்டும் என்று உங்களிடம் வேண்டுகோள் வைக்குமா? கண்டிப்பாக வைக்காது. அவர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல. அவர்கள் உங்களைத்தான் முட்டாள்களாக்குவார்கள். எனவே, நீங்கள் இப்பிரச்சினை குறித்து சிந்தித்து, எந்த வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்று முடிவு செய்யுங்கள்.

ஒவ்வொரு கட்சிக்கும் பணமோ, அதிகாரமோ இருக்க வேண்டும். நம் சமூகத்திடம் பணமோ, அதிகாரமோ இல்லை. ஆதிக்கச் சாதியினரின் கருணையால் நாம் கிராமங்களில் குறைந்த எண்ணிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பனியாக்கள் மற்றும் மார்வாரி போன்றவர்களிடமும் அதிகாரம் இல்லை; ஆனால், அவர்களிடம் பணம் இருக்கிறது. பணத்தால் எதையும் வாங்க முடியும். எனவே, நீங்கள் உங்களுக்காக எதையாவது செய்து தீர வேண்டிய தருணம் இது. நீங்கள் ஒற்றுமையாக இருந்தால், உங்கள் நலன்களைப் பாதுகாக்க நீங்கள் உங்கள் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் அனுப்பலாம். இல்லையெனில் நீங்கள் அழிந்துவிடுவீர்கள். எனவே, நீங்கள் 'பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின்' கீழ் ஒன்றிணைந்து, நம் சமூகத்தை குழப்பத்தின் பிடியில் இருந்து விடுவிக்க வேண்டும். ஒவ்வொருவரும் நம்முடைய உண்மையான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க உதவி செய்ய வேண்டும். பல்வேறு கட்சிகளும் உங்களிடம் வந்து 'எங்களுக்கு வாக்களியுங்கள்' என்று கேட்பார்கள். ஆனால், அவர்கள் காட்டும் தவறான பாதைக்கு நீங்கள் சென்றுவிடக் கூடாது.

- தொடரும்



*28.10.1951 அன்று, லூதியானாவில் ஆற்றிய உரை*

**❝ நீங்கள் காங்கிரசுக்கு வாக்களித்தால், இறுதிவரை துன்பப்பட வேண்டும். காங்கிரஸ் சார்பில் சட்டமன்றங்களுக்கும், நாடாளுமன்றத்திற்கும் செல்லும் நமது பிரதிநிதிகள் பேசவே மாட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கான ஒரே அமைப்பாக விளங்கும் 'பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு' சார்பில் நம்முடைய உண்மையான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் போதுதான் - நம்முடைய நலன்கள் பாதுகாக்கப்படும். காங்கிரசில் அளவுக்கு மீறி பணம் இருப்பதால், அவர்கள் வாக்குகளை வாங்க முயல்வார்கள். நீங்கள் இது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ❞**



படிப்பகம்

www.padippakam.com



யாழன் ஆதி

இரைதேடி தரை கிளறும்
கோழியைப் போல்
கவிழ்ந்து கிடக்கிறது தலை

வறண்ட நிலத்தின் வெடிப்புகளென
பயனற்றதாய் போய்விட்டது
மனிதர்களின் மானமும் சுயமரியாதையும்
மவுனத்தின் கரைகள்மேல் நின்று
மக்கள் பார்க்கின்றனர் கூத்துகளை

அவமானம் குறித்தோ
அடிமைத்தனம் குறித்தோ
கவலைகள் ஏதுமற்றவர்கள்
மதிநலம் மிக்க மந்திரிகள்

முன்னாள் முதல்வரெனினும்
டயரடி மண்போற்றும் தகுதிபோதும்
வீரத்தமிழக அரசியலுக்கு

கானல் நீர் பாய்ந்த
கண்ணுக்குத் தெரியாத புற்களை
மானங்கெட்டு மேயப்போயிருக்கின்றன
மயிர்நீப்பின் உயிர்நீக்கும் கவரிமான்கள்

புகைப்படம் : 'நக்கீரன்'



படிப்பகம்

www.padippakam.com


8 கொல்லும் பசி - கொழுக்கும் பங்குச்சந்தை
**அ. முத்துக்கிருஷ்ணன்**

14 சமூக விடுதலை நோக்கிய பயணம்
**'எக்ஸ்ரே' மாணிக்கம்**

16 நர்மதா பாதுகாப்பு இயக்கம் : மீண்டும் பலமடையும்
**அன்பு செல்வம்**

19 "சமூகப் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ள மறுக்கும் நீதிமன்றங்கள்"
**கே. பாலகோபால்**

22 **அண்ணல் அம்பேத்கர் வெளியிட்ட**
தேர்தல் அறிக்கை - II

28 "படுகொலைக்கு தலித் என்ற ஒற்றைக் காரணம்தான்!"
**அய். இளங்கோவன்**

32 அம்பேத்கரின் ஆசான் புத்தர்
**ஏபி. வள்ளிநாயகம்**

36 ஒரு ஜாதி ஆதிக்கம் X இடஒதுக்கீடு
**ஜி.ஆர். ரவீந்திரநாத்**

38 மீள்கோணம்
**அழகிய பெரியவன்**

41 மூர்க்கமான கருத்தியல் தேவை
**து. ராஜா**


---


- முன் அட்டைப் புகைப்படம் : Vivek Bendre - 'The Hindu'
- அட்டைப்பட வடிவமைப்பு : **யாக்கன்**
- இதழ் வடிவமைப்பு : **பிரேமா, ஜெமிமா ஆலிஸ்**
- அலுவலக ஒருங்கிணைப்பு : **ஆர். ஜோன்ஸ், மு. ரமேஷ் குமார், சி. ராமன்**






படிப்பகம்

www.padippakam.com

தலித் முரசு

Volume : 3 Issue : 7

மே, 2006

10 - 4

ஆசிரியர்

புனித பாண்டியன்

ஆசிரியர் குழு

இளங்கோவன்
அழகிய பெரியவன்
யாக்கன்
காவ்யா
விழி.பா. இதயவேந்தன்

ஆண்டுக் கட்டணம் : ரூ.100/-
நூலகக் கட்டணம் : ரூ. 200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

தொடர்பு முகவரி

203, ஜெயம் பிளாக் - சித்ரா அடுக்ககம்
9, சூளைமேடு நெடுஞ்சாலை
சென்னை - 600 094

பேசி : 2374 54 73

E-mail : ambedkar@md4.vsnl.net.in
www.dalithmurasu.com

Edited and Published by M. Punitha Pandiyan on behalf of Dr. Ambedkar Centre, 203, Jayam Block - Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai - 94. Printed by Y.S. Raj at Harijana Muzhakkam Printers, No. 46, Vizhagathottam, Saidapet, Chennai - 15

# தேர்தல் நிலைப்பாடு – III

''வெறும் அமைப்பு ஒரு கட்சியாகிவிடாது. ஒரு கட்சி என்பது, கொள்கைகளால் பிணைக்கப்பட்ட மக்களின் அமைப்பு. ஒரு கட்சி கொள்கையின்றி கட்சியாக செயல்பட முடியாது. ஏனெனில், கொள்கையைத் தவிர கட்சியின் உறுப்பினர்களைப் பிணைப்பது வேறெதுவும் இல்லை. கொள்கையற்ற கட்சி, ஒரு மாட்டுக் கொட்டகையைப் போன்றதே.''

-டாக்டர் அம்பேத்கர்

இந்த நாட்டில் மாட்டுக் கொட்டகைகள்தான் மலிந்து கிடக்கின்றன. அரசியல்வாதிகளிடமிருந்து தேர்தல் வாக்குறுதிகள் மட்டுமே வாக்கு அறுவடைக் காலம்வரை இலவசமாகக் கிடைக்கும். அதற்குப் பிறகு அடுத்த தேர்தல்வரை, ஏமாற்றங்கள் மட்டுமே எஞ்சி நிற்கும்! இத்தகைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிடும் தலித் கட்சிகள், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட முடியுமா? திராவிடக் கட்சிகளை இடையறாது விமர்சித்து வரும் தலித் கட்சிகள்; ஒவ்வொரு தேர்தலின் போதும் அவர்களுடன் கூட்டணி வைத்துக் கொள்வது, மிகப் பெரிய முரண்பாடாகவே இருக்கிறது.

'ஜனநாயக முற்போக்குக் கூட்டணி'யில் இடம்பெறக் காத்திருந்தும் வாய்ப்புகள் மறுக்கப்பட்டதால், எதிரணிக்குத் தள்ளப்பட்ட விடுதலைச் சிறுத்தைகளும், எந்தக் கூட்டணியிலும் இணைய முடியாமல் தனித்து விடப்பட்ட புதிய தமிழகமும் இணைந்து - தேர்தலைச் சந்திக்க முடியாமல் போகின்ற நிலைக்கு, வரவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தல் முடிவுகள், பாடம் புகட்டட்டும். பிற கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயல்படும் தலித் கட்சிகள், தலித் செயல் திட்டத்தை முதன்மைப்படுத்தி, தங்களுக்குள் ஓர் ஒற்றுமையைக் கட்டத் தவறினால், அரசியல் அதிகாரம் கானல் நீராகவே இனி வரும் காலங்களிலும் இருக்கும்.

தலித் மக்கள் தனித்த ஓர் அரசியல் சக்தியாக மாற வேண்டும்; வாக்கு வங்கியாகத் திரள வேண்டும் என்று தலித் இயக்கங்கள் வலியுறுத்துகின்றன. ஆனால், உண்மை நிலை கசப்பூட்டுவதாகவே இருக்கிறது. மக்கள் தொகையில் அய்ந்தில் ஒரு பங்குள்ள சிறுபான்மையினரான தலித் மக்கள், இன்றுவரை பல்வேறு கட்சிகளுக்கும் நிரந்தர வாக்கு வங்கிகளாக உள்ளனர். மதம் மற்றும் உட்சாதிகளும் அவர்களைப் பிரிக்கின்றன; பல்வேறு தலித் கட்சிகளாலும் வாக்குகள் பிளவுபடுகின்றன. இந்நிலையில் வாக்கு வங்கியாக மாறுவது எப்படிச் சாத்தியமாகும்? இந்தத் தடைகளைக் கடக்க - உறுதியான கொள்கை நிலைப்பாடுகளும், உரிமைப் போராட்டங்களும், தலித் இயக்கங்களின் ஒருங்கிணைந்த செயல்பாடுகளுமே - அரசியல் அரங்கில் நாம் எண்ணிய இலக்கை அடைய வழிவகுக்கும்.

இன்று பரந்துபட்ட அளவில் தலித் கட்சிகளின் அடையாளமாகத் திகழும் தொல். திருமாவளவன், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சிதம்பரம் நடராசன் கோயிலுக்குச் சென்று ஆசி பெற்றார்; இந்தச் சட்டமன்றத் தேர்தலிலும் மணவாள நல்லூர் கொளஞ்சியப்பன் கோயிலுக்குச் சென்று ஆசி பெற்றுள்ளார். அம்பேத்கரை முன்னிறுத்தி, ஒரு மாற்று இயக்கமாகத் திகழ வேண்டிய தலித் இயக்கங்களும் இத்தகைய அடிப்படையான கொள்கைகளில் சமரசங்களை மேற்கொள்வதால், தலித் அரசியல் கடும் பின்னடைவை சந்திக்கிறது. சமூக விடுதலைக் களத்தில் இந்துத்துவ நச்சுக் கருத்துகளை எதிர்ப்பதும், அரசியலில் அதற்கு நேர்மாறாக செயல்படுவதும் - நம்மை மாட்டுக் கொட்டகைக்குதான் கொண்டுபோய் சேர்க்கும்.

'தலித் முரசை'ப் பொறுத்தவரை, நாம் தேர்தலுக்கும், கட்சி அரசியலுக்கும் என்றுமே முக்கியத்துவம் அளித்தது இல்லை. ஒரு ஜனநாயகக் கடமையாக தேர்தலில் வாக்களிப்பதை மட்டுமே பரிந்துரைக்கிறோம். ஏனெனில், அரசியல் கட்சிகளால் தலித் மக்களுடைய நேரம், உழைப்பு, மிகச் சிறிய அளவிலான பொருள் வளம் என அனைத்தும் வீணடிக்கப்படுகிறது. ''தீண்டத்தகாத மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றவோ, சொத்துகளை அபகரிக்கவோ போராடவில்லை; தங்களுடைய மனித மாண்புகள் காக்கப்பட வேண்டும் என்றுதான் போராடுகிறார்கள்'' என்றார் அம்பேத்கர். அது, தேர்தல் அரசியல் மூலம் சாத்தியமில்லை. சாதி ஒழிப்புக்கான போராட்டத்தின் மூலமே மனித மாண்புகள் மீட்டெடுக்கப்படும். இருப்பினும், தேர்தலை தங்களுக்கான ஓர் உத்தியாகக் கையாளும் தலித் கட்சிகளை ஆதரிக்கிறோம்.

இதுவரை அனைத்துத் தளத்திலும் பறிபோன ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பிரதிநிதித்துவத்தைப் பெறவும், வன்கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கவும், அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவும், சாதி ஒழிப்பை வலியுறுத்தவும் - வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் தனித்த சின்னத்துடன் போட்டியிடும் விடுதலைச் சிறுத்தைகளையும், கூட்டணியின்றி தனித்துப் போட்டியிடும் புதிய தமிழகத்தையும் ஆதரிக்கிறோம். இவ்விரு கட்சிகளும் நேரடியாகப் போட்டியிடாத பிற இடங்களில், பார்ப்பனத் தலைமையிலான அ.தி.மு.க.வுக்கு எதிரான கூட்டணியாக இருக்கும் 'ஜனநாயக முற்போக்குக் கூட்டணி'யை ஆதரிக்கிறோம்.



படிப்பகம்


www.padippakam.com

# வாக்குமூலம்

"இடஒதுக்கீடு பல ஆயிரம் ஆண்டுகளாக இங்கே நிலைப் பெற்று வந்திருக்கிறது. சாதி அமைப்பு முறைதான் இங்கு வேரூன்றி இருக்கும் மிகவும் வலிமை வாய்ந்த இடஒதுக்கீடு முறையாகும். யார் படிக்க வேண்டும், யார் ஆள வேண்டும், யார் வாணிபம் செய்ய வேண்டும் என்பனவற்றை சாதி அமைப்புதான் முடிவு செய்கிறது. இதில் உள்ள மிகப் பெரிய குறைபாடு என்னவென்றால், சமூகத்தில் உள்ள பெரும்பான்மையான மக்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்பட்டதேயாகும். அதில் திறமை என்பது, வளர்ச்சிக்கான வாய்ப்பாக இருக்கவில்லை. மண்டல் குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிராக திட்டமிட்ட வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. உண்மையில் இத்தகு வன்முறையைத் தூண்டிவிட்டதற்கு, பத்திரிகைகளில் ஒரு பகுதியினர் நேரடியாகவே பொறுப்பானார்கள். எனவே, இடஒதுக்கீடு முதலில் பத்திரிகைகளில்தான் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நாடு முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்கள் அனைத்தும் கல்விக் கட்டணங்களைத் தொடர்ந்து உயர்த்திக் கொண்டே செல்லும்போது, பணக்காரர்களுக்கு ஆதரவான இடஒதுக்கீட்டை அது உருவாக்கவில்லையா? திறமை, தகுதி படைத்த ஏழை மாணவர்களுக்கு இது வாய்ப்பு என்ற கதவை சாத்திவிடவில்லையா? அங்கு மட்டும் எவருமே திறமையைப் பற்றி ஏன் பேச மறுக்கிறார்கள்?

வி.பி. சிங், முன்னாள் பிரதமர், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (16.4.2006) நாளேட்டுக்கு அளித்துள்ள பேட்டியில்

சுனாமி - II



'தி இந்து'

சுமார், 70 லட்சம் மாணவர்கள் அடிப்படை வசதிகளே இல்லாத பள்ளிகளில் படிக்கிறார்கள். ஒரேயொரு ஆசிரியரை மட்டுமே வைத்து இயங்குகிற அரசுப் பள்ளிகள், ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. அய்ந்து பாடங்களை ஒரே ஆசிரியர் நடத்தும் பள்ளியில் படிக்கிற மாணவனுக்கும், ஒரு பாடத்தை அய்ந்து ஆசிரியர்கள் நடத்தும் பள்ளியில் படிக்கின்ற மாணவனுக்கும் ஒரே தேர்வு முறை. இங்கே ஆரம்பிக்கிற ஏற்றத்தாழ்வு, அந்தக் குழந்தையின் வாழ்நாள் முழுவதும் ஆக்கிரமிக்கிறது. உடல் உழைப்பைக் கேவலமாகவும், மூளை உழைப்பை உயர்வாகவும் நம் கல்வி முறை மாற்றிவிட்டது. மனிதனை மேல்சாதி, கீழ் சாதி என்று கூறுபோட்ட வர்ணாசிரமத்தின் வேலையை இன்று கல்வியே செய்து கொண்டு இருக்கிறது. இந்தக் கல்வி முறை இருக்கிற வரையில், நம் நாட்டில் சாதி ஒழியாது. கல்வி அமைப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் கணிசமான குழந்தைகள் தகுதியற்றவர்கள் என முத்திரை குத்தப்பட்டு வெளியே தள்ளப்படுகிறார்கள். இவர்கள் அனைவருமே தலித்துகள், பழங்குடியினர், மிகவும் பின்தங்கியோர் மற்றும் ஏழைகள்தான்! எந்த அரசு ஆட்சியில் இருந்தாலும், இந்தக் கொடுமை மட்டும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

வே. வசந்தி தேவி, முன்னாள் துணைவேந்தர், ஆனந்த விகடனில்




உ.பி.யில் காங்கிரசை முதல் இடத்திற்கு கொண்டு வருவேன் - ராகுல் காந்தி

'தி வீக்'

சில்லறை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீடு, உலகெங்கும் பல சமூகங்களின் வாழ்வாதாரத்தை அழித்துள்ளது. இது சமூக மோதல்களை அதிகரிக்கும்; மக்களை அதிகளவில் சுரண்டும்; சில்லறை வணிகத்தில் ஈடுபட்டுள்ள நாலரை கோடி வணிகக் குடும்பங்களின் வாழ்வைத் தகர்க்கும். தமிழகத்தில் இது போன்ற முப்பது லட்சம் வணிகக் குடும்பங்களின் வாழ்வைப் பாதிக்கும்; உள்நாட்டு தொழிற்சாலைகளின் உற்பத்தியைப் பாதிக்கும்."

அந்நிய நேரடி முதலீட்டு கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள துண்டறிக்கையில்




'அவுட்லுக்'



படிப்பகம்

www.padippakam.com


## இப்போது கிடைக்கிறது...

### தெற்காசிய மொழிகளில் முதல் முறையாக

# தமிழில் உலகப் புகழ்பெற்ற அறிமுக நூல்கள்

அறிமுக நூல்கள், புதிய துறைகளை அறிந்திட ஆர்வத்தைத் தூண்டும் இலகுவான வழி; முக்கியமான விஷயங்களைக் கற்க விரும்பும் எல்லோருக்கும் தேவைப்படும் அடிப்படையான நூல்கள்; துறை வல்லுநர்களால் எழுதப்பட்டு, உலகம் முழுவதும் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போது தமிழில் கிடைக்கும் சுருக்கமான அறிமுகங்கள் :

இலக்கியக் கோட்பாடு
ஜானதன் கல்லர்
தமிழில்: ஆர். சிவகுமார்

பௌத்தம் தாமியென் கோவ்ன்
தமிழில்: சி. மணி

இந்துமதம் கிம் நாட்
தமிழில்: டி.கே. ரகுநாதன்

உலகமயமாக்கல்
மான்ஃப்ரட் பி.ஸ்டெகர்
தமிழில்: க. பூரணச்சந்திரன்

புத்தர் மைக்கேல் கே.தர்ஸ்
தமிழில்: சி. மணி

வரலாறு ஜான் எச். அர்னால்டு
தமிழில்: பிரேம்

தத்துவம் எட்வர்டு கிரெய்க்
தமிழில்: சே. கோச்சடை

ஃப்ராய்ட் அந்தோனி ஸ்டோர்
தமிழில்: சி. மணி

சமூக-பண்பாட்டு மானிடவியல்
ஜான் மோனகன், பீட்டர் ஜஸ்ட்
தமிழில்: பக்தவத்சல பாரதி

பாசிசம் கெவின் பாஸ்மோர்
தமிழில்: அ. மங்கை

அரசியல் கென்னத் மினோக்
தமிழில்: ஆனந்தராஜ்

கலைக் கோட்பாடு
சிந்தியா ஃப்ரீலேண்ட்
தமிழில்: செ. பாபு ராஜேந்திரன்

இறையியல்*
டேவிட் எஃப். ஃபர்ட்
தமிழில்: சூசைமாணிக்கம்

உளவியல்*
கில்லியன் பட்லர்,
ஃபி.தா மெக்மெனஸ்
தமிழில்: டி.ஐ. ரவீந்திரன்

பின் நவீனத்துவம்*
கிறிஸ்தோஃபர் பட்லர்
தமிழில்: பிரேம்

ஜனநாயகம்* பேனட் க்.க்
தமிழில்: த. ஜெயராமன்

பின் அமைப்பியல்*
கேதரின் பெல்ஸி
தமிழில்: அழகரசன்

பின் காலனியம்* யூங்
தமிழில்: அ. மங்கை

தொல்லியல்* பவுல் பாஹ்ன்
தமிழில்: சு. ராஜவேலு

பயங்கரவாதம்*
சார்லஸ் டவுன்செண்ட்
தமிழில்: ஞாநி

★ ஜூன் 2006 வெளியீடுகள்

**தொண்ணூறு ரூபாயில் உலகப் புகழ்பெற்ற அறிமுக நூல்கள்...**
**கையடக்கமாய்... சிறு பையடக்கமாய்... கருத்தை ஈர்க்கும் தமிழ் நடையில்...**

வெளியீடு
அடையாளம்
1205/1 கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621 310. ✆ 04332 273444 email:admin@adaiyalam.com

கிடைக்குமிடங்கள்: சென்னை: திலீப் குமார் 044 24952217, ஹிக்கின்பாதம்ஸ் 28520640, நியூ புக்லேண்ட்ஸ் 28158171, கீழைக்காற்று 28412367 கோவை: விஜயா புக்ஸ் 0422 2394614 சேலம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 0427 245081 திருச்சி: 0431 2700885 தஞ்சை: 04362 231371 மதுரை: 0452 2350271 திருநெல்வேலி: ஈகிள் புக்ஸ் 0462 2578899, நாகர்கோவில்: சுதர்சன் புக்ஸ் 04652 228445, இலங்கை: பூபால சிங்கம் புத்தக சாலை, கொழும்பு 11


படிப்பகம்

www.padippakam.com

# கொல்லும் பசி கொழுக்கும் பங்குச்சந்தை



மகாராட்டிர மாநிலத்தில் உள்ள தானே மாவட்டத்தைச் சார்ந்த சர்சுன் கிராமத்தில், போதிய சத்துணவின்றி வாழ்வதற்காகப் போராடும் இரண்டு வயது மனோஜ்

■ அ. முத்துக்கிருஷ்ணன்

பாலியல் தொழிலைப் போலவே நடன விடுதிகள், சூதாடும் விடுதிகள் எனப் பல கேளிக்கைத் தொழில்கள் முறையான உரிமத்துடன் நடைபெற்று வருகின்றன. மேற்குறிப்பிட்ட அனைத்தும் தனி மனித விருப்பம் சார்ந்தவை. இதனால் சம்பந்தப்பட்டவர்களின் உடல் நிலை, நிதி நிலை, குடும்பம் மட்டுமே பாதிப்புக்குள்ளாகும். ஆனால், மத்திய - மாநில அரசுகளே அங்கீகரித்து நடத்தும் சூதாட்டம் ஒன்றுள்ளது. அது, மும்பை சூதாட்டம். நம் நாட்டின் பொருளாதாரத்தையே நிர்ணயிக்கும் அளவுக்கு செல்வாக்குப் பெற்றுள்ளது. மும்பை சூதாட்டத்தின் லாப விகிதங்கள், குறியீட்டு எண்களாக நாள்தோறும் அறிவிக்கப்படுகின்றன. நாளேடுகள், தொலைக்காட்சிகள், ராசி பலன்கள் போல தினமும் இந்த எண்களை அச்சிடத் தவறுவதேயில்லை. சுரண்டல் லாட்டரிக்கு நிகரான சமூகத் தீமையிது. இச்சூதாட்டத்தின் குறியீட்டு எண்ணை 'சென்செக்ஸ்' என்று அழைக்கிறார்கள். இம்மாதம் இந்த எண், தன் வாழ்நாளில் முதல் முறையாக 12 ஆயிரத்தைக் கடந்தது. 10 ஆயிரத்தை 'பங்குச் சந்தை காளை' விஞ்சிய நேரத்தில், விதர்பாவில் 301 ஆவது நபர் தற்கொலை செய்து இறந்தார். தற்கொலை - விவசாயம் தொடர்புடையது; 'சென்செக்ஸ்' பங்குச் சந்தை - வர்த்தகம் தொடர்புடையது. விவசாயிகளின் தற்கொலை எண்ணிக்கைக்கும் 'சென்செக்ஸ்' குறியீட்டுக்கும் நெருங்கியத் தொடர்புள்ளது.

இந்திய பங்குச் சந்தை வர்த்தகத்தில் முதலீடு செய்திருப்பவர்களின் எண்ணிக்கை 1 கோடியே 20 லட்சம். கடந்த 2004 மே மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அப்போதைய ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சி, தனது தேர்தல் பிரச்சாரத்தை 'இந்தியா ஒளிர்கிறது' என்ற வாசகத்தை முன் வைத்து செய்தது. அவர்கள் ஆட்சிக் காலத்தில் சிவப்புக்கம்பள வரவேற்புடன் தாராளமயம் தறிகெட்டு ஆடியது. பன்னாட்டு நிறுவனங்கள் கட்டுப்பாடுகளின்றி அனுமதிக்கப்பட்டன. மாநில - மத்திய அரசுகள் இவர்களின் சேவகர்களாக மாறி, அந்தச் சேவையில் தங்கள் நேரத்தையும், அரசு கையிருப்பையும் கரைத்தன. பாரதிய ஜனதா கட்சி அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு, மிகவும் பொருத்தமான பதிலை வாக்குச் சீட்டு அளித்தது. நரியின் சாயம் வெளுத்தது.

ஆனால், நம் கதையில் ஒரு நரி போய் அடுத்த நரி வந்தது. பாரதிய ஜனதா கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிரான வாக்குகள்தான் காங்கிரஸ் கட்சியை ஆட்சியில் அமரவைத்தது. காங்கிரஸ் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தவுடன், பொருளாதாரக் கொள்கைகளில் மாற்றம் வரும் எனப் பங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களில் பலர் தற்காலிகமாகப் பின்வாங்கினர். அவ்வளவுதான் சூதாட்ட விடுதியை நடத்துபவர்களின்



படிப்பகம்

www.padippakam.com

பிழைப்பு இனி என்ன ஆவது! ஊடகங்களின் கூப்பாடு தாங்க முடியவில்லை.

பங்குச் சந்தை வீழ்ச்சி அடைந்த மே 17அய், செப்டம்பர் 11வுடன் ஒப்பிட்டு 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு தலையங்கம் தீட்டியது. அதன் முதல் பக்கத்தில் 2.34 லட்சம் கோடி ரூபாய் இழப்பு எனக் கொட்டை எழுத்துகளில் அச்சடித்தது. பங்குச்சந்தைதரைமட்டம்ஆகிவிட்டதாக தலையங்கங்கள் ஆர்ப்பரித்தன. அமெரிக்க இரட்டை கோபுரங்களைப் போல, மும்பை தலால் தெரு பங்குச் சந்தை கட்டடம் நொறுங்கி விழுவது போன்ற 'கிராபிக்ஸ்' படங்கள் வெளியிட்டன. விமானத்தைக் கடத்தி பங்குச் சந்தை மேல் மோத வைத்து இடதுசாரிகள்தான் என்பதையும் தெளிவுபடப் பேசின கட்டுரைகள். காங்கிரஸ் அரசாங்கத்தை இடதுசாரிகள் ஆதரிக்கப் போவதாக அறிவித்தவுடன் வில்லன்கள் யார் என்பது பட்டவர்த்தனமாகியது. எதிர்பார்த்தது போல் இல்லாமல் கதை திசை மாறியது. இரண்டு நாட்களில் சாய்ந்து தலைக்குப்புற விழுந்து கிடந்த பங்குச் சந்தை காளை, மீண்டும் எழுந்து நின்றுவிட்டது. 2.34 லட்சம் கோடி ரூபாய் மீட்டெடுக்கப்பட்டது.

இந்திய மக்கள் தொகையில் 1.15 சதவிகிதம் பேர் மட்டுமே பங்குச் சந்தையில் முதலீடு செய்திருக்கிறார்கள். மறுபுறம் இந்தியாவிலுள்ள 65 சதவிகித குடும்பங்களுக்கு வங்கிக் கணக்குகூட கிடையாது. இந்தியாவில் நடிகைகளின் தற்கொலைக்கு நம் ஊடகங்கள் காட்டும் பரிவும், அக்கறையும் இதுவரை நிகழ்ந்த ஆயிரக் கணக்கான விவசாயிகளின் தற்கொலைக்கு



தற்கொலைக்கு வழிகாட்டும் பங்குச் சந்தை




> **❝ இந்தியாவில் நடிகைகளின் தற்கொலைக்கு நம் ஊடகங்கள் காட்டும் பரிவும், அக்கறையும், கவனமும் - இதுவரை நிகழ்ந்த ஆயிரக் கணக்கான விவசாயிகளின் தற்கொலைக்கு கிடைத்ததில்லை. ❞**

கிடைத்ததில்லை. நடிகைகளின் வாழ்வு அவலம் நிறைந்தவைதான். நடிகையின் மரணம் அவலம் என்றால், அதைவிடக் கூடுதல் கவனம் காட்ட வேண்டிய விசயம், தினமும் கடனில் மூழ்கி பூச்சிக் கொல்லியை அருந்தும் விவசாயக் குடும்பங்களின் சாவுகள். விவசாயிகளின் தற்கொலைகளுக்கு ஊடகங்கள் முக்கியத்துவம் அளித்திருக்க வேண்டும்; விவாதங்கள் நடந்திருக்க வேண்டும். இவை மூலம் உருவாகும் நெருக்கடிகள், அரசாங்கத்திற்குப் பெரும் கேள்வியாக உருவாகியிருக்க வேண்டும். ஆனால், காலத்தின் தேவைகளை ஊடகங்கள் உணர்ந்ததில்லை.

காலனிய வீழ்ச்சிக்குப் பிறகு மென்பொருள் தொழிற்சாலை அதிகப்படியான வளர்ச்சியைக் கண்டுள்ளது. சமூகத்தில் அதிகளவு வருமானம் பெறுபவர்கள் இவர்களே. மிகவும் அதிகமாக செலவு செய்யும் வர்க்கமாகவும் இவர்கள்தான் முதலிடத்தில் இருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளில் நாம் ஆடம்பரத்தின் உச்சங்களைப் பார்த்து வருகிறோம். நகர வாழ்க்கையின் பகட்டை அறிவிக்கும் விதமாக ஆடம்பரத் திருமணங்கள் நடைபெறுகின்றன. இந்திய அளவில் மாதவ்ராவ் சிந்தியா வீட்டுத் திருமணம், தமிழ் நாட்டில் ஜெயலலிதா வளர்ப்பு மகன் திருமணம் தொடங்கி, அண்மையில் நடைபெற்ற 'சகாரா' குடும்பத் திருமணம், லட்சுமி மிட்டல் குடும்பத் திருமணம் என மனித நாகரிகம் தளைத்ததிலிருந்து இத்தனை ஆடம்பரங்களை இந்த பூமி கண்டிருக்காது. நடுத்தர குடும்பத்தின் திருமணச் செலவு கூட சாதாரணமாக சில லட்சங்களை எட்டி விட்டது. ஆடம்பர மோகம் யாரைவிட்டது.

ஆனால், கேரளாவின் வயாநாட்டில், ஆந்திராவின் அனந்தபூரில் தன் மகளின் திருமணத்தை நடத்த வேண்டிய காலகட்டம் நெருங்க, நடத்த இயலாமையில் தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஏறுமுகத்தில் உள்ளது. திருமணத்திற்காக காலமெல்லாம் சிறுகச் சிறுக சேமித்த பணத்தை பீ.டி. பருத்தியின் (B.T. Cotton) ஓராண்டு சாகுபடி விழுங்கி விட்டது. இந்திய கிராமங்கள் 'முதிர் கன்னி'களின் வெப்பம் நிறைந்த மூச்சுக் காற்றில் அலைக்கழிந்து கொண்டிருக்கின்றன. கிராமங்களே முதிர்ந்து காணப்படுகின்றன. தற்கொலைகள் கிராமங்களின் இயல்பைத் தின்று செரிக்கிறது.

இந்த அவலங்களுக்குத் தீர்வு காண பிரதமர் மன்மோகன் சிங், தேசிய விவசாயிகள் ஆணையத்தை அமைத்தார். 'பசுமைப் புரட்சி'யின் பெயரில் இந்திய விவசாயத்தை நிர்மூலமாக்கிய எம்.எஸ். சுவாமிநாதன், அதன் தலைவராக நியமிக்கப்பட்டது வேடிக்கையின் உச்சம். இந்த ஆணையத்தின் முதல் கூட்டம் நிகழ்ந்ததே நம் ஊடகங்களுக்குத் தெரியாது. நாட்டின் இன்றைய சூழலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கூட்டமிது. ஆயிரக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது என்பது ஏதோ கிராமம் சார்ந்த பிரச்சனை அல்ல. ஆயிரக்கணக்கான விவசாயிகளின் சாவு நோய் அல்ல; அது நோயின் அறிகுறி. எதிர்காலம் சந்திக்கப் போகிற மிகப் பெரும் அபாயத்தின் எச்சரிக்கை இந்தத் தற்கொலைகள். கூடிய கூட்டத்தில் ஏராளமான கருத்து மோதல்கள் நிகழ்ந்தன. எனவே, எந்த முடிவையும் எட்ட முடியவில்லை. வங்கி சார்ந்தவர்களையும் விவசாயிகளையும் நீங்கள் ஒன்றாக அமர வைத்தால், அங்கே கலவரத்தை தோற்றுவிக்கப் போகிறீர்கள் என்று பொருள்.



விவசாயிகளின் தொடரும் தற்கொலைகள்



படிப்பகம்

www.padippakam.com

# உதவி கேள்; சிறையில் அடைபடு!

மதிலெத்தி தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தார். தன்னுடைய மரணத்திற்கு முன்பு யாருக்காவது நன்மை கிடைக்கட்டும் என்று கருதிய அவர், ரத்ததானம் செய்ய செஞ்சிலுவை சங்கத்திற்குச் சென்றார். அவர்கள், ரத்தத்தை எடுத்துக் கொள்கிறோம்; ஆனால் பணம் எதுவும் தர முடியாது என்றனர். மதிலெத்திக்கு கோபம் கொப்பளித்தது. அவர்களிடம் இவர் பணம் கேட்கவேயில்லை. 11.8.2005 அன்று ரத்ததானம் செய்தார்.

மதிலெத்தி விவசாயக் கூலி அல்ல. அவர் 12 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் ஒரு குறு விவசாயி. தொடர்ந்து விவசாயம் செய்ததால், அவருக்கு மிஞ்சியது மூன்று லட்சம் கடன் மட்டுமே. மதிலெத்தி 12 ஏக்கர் நிலத்தை அடமானம் வைத்து வங்கி மூலம் கடன் வாங்கத் தயாராக இருந்தார். எனவே, ஆந்திர முதல்வரை சந்தித்து, அவர் கைப்பட மனு அளித்தார். இம்மனுவை மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைப்பதாக முதல்வர் கூறினார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் யாரை சந்தித்து விசாரிப்பதென்று தெரியவில்லை. தொடர்ந்து அலைக்கழிக்கப்பட்டார்.

தற்கொலை செய்யும் மனநிலையில் உள்ள விவசாயிகளுக்கு ஆதரவளித்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளை அளிக்கும் தொலைபேசி உதவி மய்யம் ஆந்திராவில் உள்ளது. நம்பிக்கை இழந்த மதிலெத்திக்கு தொலைபேசி உதவி மய்யத்தின் விளம்பரம் கண்ணில் பட்டது. இம்மய்யத்தைத் தொடர்புகொண்டு அதன் மண்டல வருவாய் அதிகாரியை சந்தித்தார். அவரோ வருவாய் ஆய்வாளர்தான் நிலைமையை விசாரித்து முடிவெடுப்பார் என்றார். இதில் விசாரிக்க என்ன இருக்கிறது? அவருக்கு வேண்டியது கடன். அடமான நிலப் பத்திரம் கையில் உள்ளது.

மதிலெத்தி கடனில்தான் உள்ளார் என்று வருவாய் ஆய்வாளர் சான்று வழங்கி, கடனுக்கு சிபாரிசு செய்ய மதிலெத்தியிடம் இரண்டாயிரம் ரூபாய் லஞ்சம் கேட்டனர். மதிலெத்தியிடம் லஞ்சம் கொடுக்க பணம் இல்லை. அதன் பிறகு வருவாய் ஆய்வாளர் மதிலெத்தியின் கிராமத்திற்குச் சென்று அவரது வீட்டைப் பார்வையிட்டனர். இந்த அதிகாரிகள் பார்வையிட்டதால், இனி அந்த ஊரில் யாரும் அவருக்கு கடன் கொடுக்க முன்வர மாட்டார்கள்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று மீண்டும் ஆட்சியரை சந்திக்க முயன்றார். மணிக்கணக்காகக் காத்திருந்தும் பயனில்லை. வேறுவழியின்றி பூச்சிக்கொல்லி மருந்தை குடித்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மயங்கி விழுந்தார். அங்குள்ள கடைநிலை ஊழியர்கள் அவரை உடனடியாக நிஜாம் மருத்துவ அறிவியல் கல்லூரிக்கு அழைத்துச் சென்றனர். நிலைமை மோசமானவுடன் பல உயர் அதிகாரிகள், மதிலெத்தியுடன் அன்று மருத்துவமனைக்கு நூறு கிலோ மீட்டர் தூரம் பயணித்தனர். இந்த அதிகாரிகளுக்கு பல மாதங்களாக மதிலெத்தியைச் சந்திக்க சில நிமிடங்கள் கூட கிடைக்கவில்லை. ஆனால், மருத்துவமனையில் அங்கிருந்த இரண்டு வாரத்திற்கு பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் செலவழித்தனர்.

மருத்துவம் முடிந்து வீடு திரும்பிய மதிலெத்தியை வீடு புகுந்து கைது செய்தது ஆந்திர காவல் துறை. அவர் மீது தற்கொலை முயற்சி வழக்கு போட்டது. காவல் நிலையத்தில் ஒரு நாளும், பதினைந்து நாட்கள் சிறையிலும் அடைத்தனர். ஊர்க்காரர்கள் பொது நிதி திரட்டி பிணையில் எடுத்தனர். இரண்டாயிரம் ரூபாய் லஞ்சம் கொடுத்திருந்தால், எந்தப் பிரச்சனையும் ஏற்பட்டிருக்காது என்பது சிலர் கருத்து. இன்னும் மதிலெத்தியின் விதை அறுவடை ஒப்பந்தம் நிலுவையில் உள்ளது.

– பி. சாய்நாத்,
'தி இந்து' நாளேட்டில்


மதிலெத்தி

நெருப்புப் பொறிகள் பறக்கத்தான் செய்தன. விவசாயிகள், தொழிற்சங்கங்கள், வங்கி அதிகாரிகள், இன்சூரன்ஸ் அதிகாரிகள், அரசு அதிகாரிகள், அறிவியலாளர்கள், பத்திரிகையாளர்கள் என எல்லோரும் இரண்டு செய்திகளை ஒப்புக் கொண்டனர். ஒன்று, இந்திய கிராமப்புறங்கள் கடந்த பத்தாண்டுகளில் கடும் அவலங்களை சந்தித்து வருகின்றன. இரண்டு, இந்த அவலங்கள் அனைத்தும் அரசின் கொள்கைகளால் ஏற்பட்டவை.

விவசாயத் துறையில் அரசு முதலீடு குறைந்ததே பல தளங்களில் பிரச்சனை உருவானதற்கான முதல் காரணம். கிராமப்புறங்களில் இயங்கி வந்த கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்தது. வங்கிகள் பின்வாங்கதனியார், தனிநபர் மற்றும் கந்து வட்டிக்குழுக்கள் உள்ளே நுழைந்தனர். நகரத்தில் நீங்கள் போர்டு, ஹுண்டாய், மெர்சிடஸ் கார்களை 6 சதவிகித வட்டியில் வாங்கலாம். ஆனால், கிராமத்தில் டிராக்டர் வாங்க இதுபோல் மூன்று மடங்கு அதிக வட்டி செலுத்த வேண்டும்.

இந்தியாவில் கண்களில் பூச்சி பறக்க பசியில் தவிப்பவர்களின் எண்ணிக்கை 40 கோடி. மொத்த ஆப்பிரிக்காவிலுள்ள பசித்த வயிறுகளை விட, அதிகமானவர்கள் இங்கு வறுமையின் கோரப்பிடியில் உள்ளனர். இவை எல்லாம் இங்குள்ள ஊடகங்களுக்கு முக்கியச் செய்திகள் அல்ல. ஆறுதல் அளிக்கும் செய்தியாக உச்ச நீதிமன்றம், ஆறு மாநில அரசுகளை பட்டினிச் சாவுகளைத் தடுக்கத் தவறியதாகக் குற்றம் சாட்



படிப்பகம்

www.padippakam.com

டியுள்ளது. குளிர் சாதன அறையிலமர்ந்து வம்பளக்கும் உள்துறை செயலர்கள்தான் தனிப்பட்ட முறையில் பொறுப்பு எனவும் கூறுகிறது உச்ச நீதிமன்றம். உலகில் அய்ந்து நொடிகளுக்கு ஒரு குழந்தை பசியால் துடித்து செத்துக் கொண்டிருக்கிறது. இதில் பெரும் பகுதி குழந்தைகள் இந்தியர்கள். விவசாயிகள் மட்டுமல்ல, நெசவாளர்கள், தச்சர்கள் என கிராம சமூகத்தினர் பலரும் தற்கொலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தியாவில் அதிகளவு தற்கொலை நிகழ்ந்த மாநிலத்தின் முதலமைச்சர் சந்திரபாபு (நாயுடு)வை இந்த ஊடகங்கள் தலையில் வைத்துக் கொண்டாடி, அவரை 'முன்மாதிரி முதல் வர்' என அறிவித்ததையும் மறந்துவிடக் கூடாது.

விவசாயிகளை, விவசாயக் கூலிகளை அந்த வேலைகளிலிருந்து அப்புறப்படுத்துவது திட்டமிட்டு நிகழ்த்தப்படுகிறது. கடனில் மூழ்கியவர்கள் இரவோடு இரவாக சட்டி பானைகளுடன் கிராமங்களிலிருந்து பதுங்கி வெளியேறுகிறார்கள். பல பேருந்து நிலையங்களில் கூட்டம் கூட்டமாக நீங்கள் இவர்களைக் காணலாம். இதில் முதல் முறையாகப் பேருந்தில் ஏறுபவர்கள் ஏராளம். பேருந்து நிலையங்களை ஒட்டிய தேநீர்க் கடைகள் அருகே தலையைப் பிடித்து வாந்தி எடுத்துக் கொண்டு, கைக்குழந்தைகளுக்கு வட்டையில் பால் ஆறவைக்கும் காட்சிகள் மனதில் ரணமாய்ப் பதிகிறது. பேருந்துகளும் ரயில் பெட்டிகளும் இவர்களை சுமந்து கொண்டு எங்கு செல்வது என அறியாது குழம்பிக் கிடக்கின்றன. இந்த இடப்பெயர்வுகள் மூலம் ரயில்வேயும், போக்குவரத்துத்துறையும் அதிகப்படியான லாபங்களை ஈட்டி வருகின்றன.

ஊடகங்கள் எங்கே திசைமாறின? ஊடகங்கள் பொறுப்புடன் செயல்பட்ட வரலாறு உள்ளதா? மிகவும் மங்கலான சித்திரமே மிஞ்சுகிறது. மேட்டிமைத்தனம், அலட்சியம், பேராசை மட்டுமே இன்று மந்திரங்களாக மிஞ்சியுள்ளன. எளிய குரல்களை அலட்சியப்படுத்திக் கொண்டே இருக்கிறது நம் ஊடகங்கள். சமூகத்தின் விளிம்பு எதார்த்த நிலையுடன் இயங்கத் துடிக்கும் பத்திரிகையாளர்கள்கூட நொந்து போய் உள்ளனர். சூழ்நிலையைக் கையாள முடியாது திணறுகின்றது இந்திய ஊடகங்கள். உலகமயத்துடன் பத்திரிகைகளில் ஒருவித கொண்டாட்ட மனோபாவம் தொற்றிக் கொண்டது. எல்லாம் கொண்டாட்டம் - எல்லாம் வெற்றி. அவர்களின்



> **❝ இந்தியாவில் கண்களில் பூச்சி பறக்க பசியில் தவிப்பவர்களின் எண்ணிக்கை 40 கோடி. மொத்த ஆப்பிரிக்காவிலுள்ள பசித்த வயிறுகளை விட அதிகமானவர்கள் இங்கு வறுமையின் கோரப் பிடியில் உள்ளனர். ❞**

கணிப்புப்படி எல்லா வெற்றிகளும் உலக மயத்தின் பலன், எல்லா தோல்விகளும் நம் தேசம் சார்ந்தவை. சுரண்டல் அடிமைத்தனம், ஜாதியம், அடக்குமுறை எனப் பல சொற்கள் பெரு ஊடகங்களின் அகராதிகளிலிருந்து நீக்கப்பட்டு வருகின்றன. பொதுவாக, இன்று பொதுமக்களிடையே ஒரு நம்பிக்கை திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது. திறனற்ற அரசாங்கங்கள்தான் தேசம் தறிகெட்டுப் போனதற்கு காரணம்; அதனால் அரசாங்கத்தின் பங்களிப்பு எவ்வளவு குறைகிறதோ அவ்வளவு இழப்பீடும் குறைவு. எல்லாவற்றையும் தனியார்வசம் ஒப்படைத்துவிடலாம்.

மேற்கூறிய இந்த முட்டாள்தனங்களை நீங்கள் கேள்வி கேட்க முயன்று பாருங்கள். கணப்பொழுதில் நீங்கள் ஜோல்னாகாரர், ஏழைகளின் மாபியா, காம்ரேட், பொருளாதார நிபுணர் என முத்திரை குத்தப்படுவீர்கள். இவைகளை எல்லாம் உங்கள் மூளைகள் யோசிக்காமல் நீங்கள் நாளை பன்னாட்டு நிறுவன பத்திரிகையாளர் சந்திப்புகளுக்குச் சென்று காஜு கத்லி, பெர்கர், பீசா தின்ற கையை நக்கிக் கொண்டு 'பெப்சி' குடித்துவிட்டு, அவர்கள் கொடுக்கும் அறிக்கைகளை செய்திகளாக மாற்றினால், நீங்கள் வெற்றிகரமானப் பத்திரிகையாளர்.

ஊடகங்கள் தங்கள் திசைமானிகளைத் தொலைத்துவிட்டு, திக்குத் தெரியாமல் திரிந்து கொண்டிருக்கின்றன. தொண்டாகத் தொடங்கியது தொழிலாக மாறி, தனது கோரப் பற்கள் நீண்டு நிற்கிறது. சுதந்திரத்திற்கு முந்தைய ஊடகங்களுக்கு நோக்கமிருந்தது. இன்றைய ஊடகங்களுக்கு கொண்டாட்டம், கேளிக்கை மட்டுமே மிஞ்சி நிற்கிறது. உலகமயத்திற்குப் பிறகான மாற்றங்களில் எல்லா நாளிதழ்களும், புத்தகங்களும் ஒரே மாதிரியாய் மாறிவிட்டன. ஊடகங்களுக்கு இருக்கும் கொடிய நோய் தீர்க்கப்படும் எல்லைகளுக்குள்தான் உள்ளது. பொது மக்களின் அக்கறையுடனான பங்களிப்புதான் இதனைத் தீர்வு நோக்கிச் செல்ல உதவும். மக்களின் பங்களிப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

ஊடகங்களில் விவசாயிகளின் தற்கொலை குறித்து விரிவான உரையாடல்கள் வேண்டும். சென்னையில் நடக்கும் அழகிப் போட்டிகள் மட்டுமல்ல; உலகின் பிற பகுதிகளில் நடைபெறும் அழகுப் போட்டிகளையும் இங்குள்ள பத்திரிகைகள் தலைப்புச் செய்தியாக்குகின்றன. நட்சத்திர இரவுகளின் செய்தி, சுவாசத்திற்கு ஒப்பாக வெளியிடப்படுகிறது. அச்செய்தி மொத்தத்தில் 50 ஆயிரம் வார்த்தைகளாக அச்சேறுகிறது. 500 நிமிட தொலைக்காட்சி நிகழ்வுகள், 300 மணி நேர காட்சிகளாகப் படம் பிடிக்கப்படுகின்றன. இந்தியா இவர்களுக்கு மட்டுமே ஒளிர்கிறது. பங்குச் சந்தை இவர்களின் குலதெய்வம். தடைகளற்ற சுதந்திர வர்த்தகம், பணக்காரர்களின் சோசலிசமாகக்



வயல்களை இழந்து வீதிக்கு வந்தோம் - படம் : வே. தட்சிணாமூர்த்தி



படிப்பகம்

www.padippakam.com

கருதப்படுகிறது. தொழில் தனது எல்லா அறநெறிகளையும் தொலைத்து ரத்தம் குடிக்கும் காட்டேரி போல் மாறி நிற்கிறது. நடப்பிலுள்ள மனிதத் தன்மையற்ற பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக வாக்களித்த பின்னும் - மீண்டும் உலகமயத்தை முன்னெடுத்துச் செல்லும் அடிமைத்தன அணுகுமுறைகளே கூச்சமற்றுப் பின்பற்றப்படுகின்றன. மத்திய நிதி அமைச்சர்கள், உலகவங்கி இசையின் தாளவாத்தியத்துக்கு அடி தப்பாமல் ஆடுகிறார்கள்.

விருதுநகர் மாவட்டத்தின் கமிஷன் மண்டியில் எள்ளின் விலை கிலோ எட்டு ரூபாய்; தரமான எள் கிலோ ரூபாய் பத்து. இந்த எட்டும் பத்தும்தான் இந்திய விவசாயிகள் சாவை அறிவிக்கும் எண்கள். ஆனால், அதே விருதுநகரிலிருந்து தொலைக்காட்சியில் வண்ணமயமான விளம்பரங்களில் நடிகைகள் நடனம் ஆட, அந்த நல்லெண்ணெய் விலை கிலோ 80 ரூபாய். இந்த 80 ரூபாய்தான் பங்குச்சந்தையின் பொலிவான அறிகுறி. பஞ்சாப் மாநில ராம்கர்ஹன் விவசாயி அரும்பாடு பட்டு வியர்வை சிந்தி விளைவிக்கும் உருளைக்கிழங்கை, கம்பெனி ஆட்கள் ரகம் பார்த்து - அவர்களது அறுவை எந்திரத்தில் பொருந்தக் கூடிய உருளைக் கிழங்கை மட்டும் கை பார்த்து விலைக்கு வாங்குகிறார்கள். விளைச்சலில் கால் பங்கைக் கழித்து விடுகிறார்கள். அப்படி அவர்கள் வாங்கும் விலை கிலோவுக்கு 80 பைசா முதல் 120 பைசா வரைதான்.




சைக்கிள் - ரூ. 200, பிரிட்ஜ் - ரூ. 500, டூவிலர் - ரூ. 1,800, கார் - ரூ. 28,000, கோழிக்கறி - ரூ. 5, ஆட்டுக்கறி - ரூ. 12, ரேடியோ - ரூ. 20, தொலைக்காட்சி - ரூ. 350 என அது 80 பொருட்கள் அடங்கிய பெரிய பட்டியல். சீனக்கார்கள் சென்னையில் ஓடிக் கொண்டிருப்பதாக மதுரையில் பேச்சு. சீன இரு சக்கர வாகனம் திருநெல்வேலியில் ஓடுகிறது; சீன சைக்கிளை மடக்கி வீட்டுக்குள் எடுத்துச் செல்லலாம் என விதவிதமான தகவல்கள். அந்தந்த ஊரில் பலர் சில திருமண மண்டபங்களைக் கட்டி, இதுக்கு சீனாக்காரர்கள் முன்பணம் கொடுத்து விட்டதாகவும், அவர்களைப் பார்த்ததாகவும் தகவல்களை மிகுந்த விவரிப்புடன் தெரிவித்தார்கள். விசாரித்த பொழுது, இந்தியா முழுமையிலும் இந்தத் தகவல்கள் ஒரே நேரத்தில் வலம் வருவதை உறுதிப்படுத்த முடிந்தது. அந்த நேரத்தில் கார், இரு சக்கர வாகனங்களின் விற்பனை ஏறக்குறைய நின்று போனது. பிறகு என்ன சொல்லவா வேண்டும் - படையெடுத்து விட்டார்கள் இந்திய முதலாளிகள். அப்போதைய தொழில் துறை அமைச்சரிடம் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அமைச்சர் வாக்குறுதிகள் அளித்தார். இந்திய ஊடகங்கள் முதலாளிகளுக்கு ஆதரவாக செய்திகள் மற்றும் கட்டுரைகளை மள மளவென வெளியிட்டன. இருந்தும் மக்கள் மனங்களில் படிந்திருந்த நம்பிக்கையை அழிக்க முடியவில்லை.

**❝ உலகில் அய்ந்து நொடிகளுக்கு ஒரு குழந்தை பசியால் துடித்து செத்துக் கொண்டிருக்கிறது. இதில் பெரும் பகுதி குழந்தைகள் இந்தியர்கள். விவசாயிகள் மட்டுமல்ல, நெசவாளர்கள், தச்சர்கள் என கிராம சமூகத்தின் அங்கத்தினர் பலரும் தற்கொலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ❞**

அதே கிழங்கு சிப்ஸ், கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் கொறித்துக் கொண்டு நமக்கு சாப்பிட சிபாரிசு செய்யும் பொழுது, அதன் விலை கிலோவுக்கு 500 ரூபாய். அந்த சிப்ஸ் பாக்கெட்டை 10 ரூபாய்க்கு வாங்குபவர்களிடம் அதில் எத்தனை கிராம் உள்ளது எனக் கேட்ட பொழுது யாருக்கும் தெரியவில்லை. அந்த பாக்கெட்டில் உள்ளது வெறும் 18 கிராம் மட்டுமே. வாங்கும் பொருளின் அளவுகூட தெரியாத மயக்கம்; மந்தைத்தனம்.

லண்டனில் இந்திய காப்பித்தூள்தான் விலை அதிகமானது. அங்குள்ள சாமானியர்கள் இந்திய காப்பித்தூளை வாங்க இயலாது. இங்கு கேரளாவில் காப்பித் தோட்டங்களில் பணி புரிபவர்களும், சிறு விவசாயிகளும் தற்கொலை செய்து கொள்வதற்கு நாம் சாட்சியாக இருக்கிறோம். இந்த ஒட்டு மொத்த சோகமும், அவலமும் மனிதன் உருவாக்கிக் கொண்டவையே. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னால் சீனாவிலிருந்து பல பொருட்கள் இந்திய சந்தைக்கு வர இருப்பதாக செய்திகள் வந்தன. அப்போது மக்களிடையே அதிகமான தகவல் பரிமாற்றங்களை அப்போது காண முடிந்தது. இன்டர்நெட்டில் தங்களுக்கு விலைப்பட்டியல் வந்திருப்பதாக பலர் கையில் அச்சடித்த துண்டறிக்கைகள் வைத்திருந்தார்கள். சந்தைக்கு வர இருக்கும் பொருள்கள், அதன் விலைகள் என அந்தப்பட்டியல் நடுத்தர - மற்றும் உழைக்கும் வர்க்க மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. தங்கள் வாழ்வின் ஏக்கம் நனவாகப் போவதைப் போல, மகிழ்ச்சியின் அலைகள் திசையெங்கும் பரவின.

தங்கள் தொழில் பாதிக்கப்பட்டுவிடும் என்றவுடன் அமைச்சரை முற்றுகையிட்டு, இந்திய முதலாளிகள் பேரங்கள் (Lobbying) நடத்தினார்கள். ஆனால், அதே சீனாவிலிருந்தும் மற்ற பல நாடுகளிலிருந்தும் இந்திய சந்தை விலையைவிட கிலோவுக்கு 50 காசு, 25 காசு விலை குறைந்தவுடன் பூண்டு, வெங்காயம் எனப் பல விவசாய விளைபொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இங்கு நம் மண்ணில் விளைந்த தக்காளி, வெங்காயம், பருத்தி என சந்தைக்கு ஏற்றி வந்த விளைச்சலை அப்படியே ஊருக்குள் கொட்டிவிட்டு வண்டி வாடகைக்கு கடன் வாங்க - நகரம் முழுக்க அலையும் மனிதர்கள் எதிர்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

எழவு விழாமல் வேறு என்ன விழுகும்? இதன் மூலம் ஒரு செய்தி பட்டவர்த்தனமாகிறது. இந்த விவசாயிகளுக்காக பேரங்கள் நிகழ்த்த, அவர்களுக்கான வலுவான அமைப்பு இல்லை என்பதுதான். விவசாயம் தொடர்புடைய எல்லா செய்திகளையும் அறிவுஜீவிகள் உருவாக்குகிறார்கள். நாள்தோறும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் இடம் பெயர்கிறார்கள் - சொந்த நாட்டில் அகதிகளாய். மத்தியப் பிரதேசசவரிய பானி கிராமத்தில் கடந்த ஆண்டில் - பத்து ரூபாய் கூலிக்கு 9 நாட்கள் மட்டுமே வேலை கிடைத்துள்ளது. ஆம்! இந்தியா தனது கிராமங்களில் தினம் தினம் செத்துக் கொண்டேயிருக்கிறது. பங்குச் சந்தை காளை மட்டும் கொழுத்துத் திரிகிறது.

நன்றி : Locus interrupts - *Jeremy Seabrook*, The Media - *Prem Bhatia*, Lost the Compass - *P. Sainath*



படிப்பகம்

www.padippakam.com



## பஞ்சமி நில மீட்பு - சட்ட நடைமுறை கையேடு

விலை ரூ.100

"இப்போது புது எழுச்சியுடன் பஞ்சமி நில மீட்பும், நில உரிமைக் கோரிக்கையும் பரவலாக தலித்துகளால் முன் வைக்கப்படும் சூழலில், இக்கையேடு பெரும்பங்காற்றும். குறிப்பாக, களப்போராளிகளுக்கு உதவிடும் வகையில், மாவட்ட அளவிலான பஞ்சமி நிலம் பற்றி விபரங்கள், வருவாய்ப் பதிவேடுகள் - கிராமக் கணக்குகள் பற்றிய நுட்பங்கள், மாதிரிப் படிவங்கள், நீதிமன்றம் சென்ற பல வழக்குகளின் சாரங்கள், தீர்ப்புகள், அரசின் ஆணைகள், கடிதங்கள் எனப் பலவும் முறையாகக் கோர்க்கப்பட்டு, பஞ்சமி நிலம் குறித்த சிறு வரலாற்றுடன் இணைக்கப்பட்டு இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது."



■ ஆசிரியர்கள் : ச ஆரோக்கிய மணிராஜ், ப. முருகேசன், ம. இன்பக்குமார், ■ பக்கங்கள் : 232 ■ வெளியீடு : அனித்ரா அறக்கட்டளை, 5/1, அரத்தூண் சாலை, ராயபுரம், சென்னை - 13 ■ பேசி : 94441 24446

●●

## ஊமைகளின் தலைவன்

விலை ரூ.10

"இல்லை... எனக்குத் தாயகமில்லை. சுயமரியாதையின்றி மிருகத்தைவிட இழிவாக நடத்தப்படும் தாழ்த்தப்பட்டவர்கள், எப்படி இந்த நாட்டைத் தாயகமாய் கொள்ள முடியும்? நாட்டுப்பற்று எங்களுக்கு இல்லையென்றால், அதற்கு நாங்கள் பொறுப்பல்ல. இந்த நாடுதான். இந்நாட்டிற்கு நான் ஏதேனும் தொண்டு செய்திருந்தால், அது தேசபக்தியால் அல்ல. என் மனசாட்சியால் தான். யுகம் யுகமாக, காலால் மிதித்து நசுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோரின் மனித உரிமைக்காக நான் பாடுபடும்போது, இந்த நாட்டிற்கு நான் எந்த வகையிலும் உதவவில்லையென்றால் அது பாவமாகாது."



■ ஆக்கம் : முகில் ■ பக்கங்கள் :28 ■ வெளியீடு : பூங்குயில் பதிப்பகம், 100, கோட்டைத் தெரு, வந்தவாசி - 604 408 ■ பேசி : 93826 47849

●●

## ஒப்பந்தங்களை சீர்குலைத்தது யார்?

விலை ரூ.10

"பேச்சுவார்த்தை முயற்சிகளை திட்டமிட்டுக் குலைப்பது விடுதலைப் புலிகள்தான் என்ற பிரச்சாரத்தை, மேலைநாட்டு ஊடகங்களும் இந்திய பார்ப்பன சக்திகளும் திட்டமிட்டுப் பரப்பி வருகின்றன. இந்நிலையில், அந்தப் பிரச்சாரத்தின் திட்டமிட்ட உள்நோக்கத்தையும் உண்மைகள் திரிக்கப்படுவதையும், ஒப்பந்தங்களை சீர்குலைத்தது யார்? என்பதையும் இந்நூல் ஆதாரத்துடன் சுட்டுகிறது."



■ ஆசிரியர் : விடுதலை க. ராசேந்திரன் ■ பக்கங்கள் : 64 ■ வெளியீடு : தந்தை பெரியார் திராவிடர் கழகம், 27, 2 ஆவது தளம், கே.எம்.என். வீதி, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 28 ■ பேசி : 2461 6233

## மாண்டொழிக மரண தண்டனை



விலை ரூ.100

"குற்றங்கள் நிகழாமல் தடுத்து நிறுத்துவதில் ஆயுள் சிறைத் தண்டனையைவிட, மரண தண்டனையால் ஏதும் உருப்படியாகச் செய்துவிட முடியாது. காவல் துறை அதிகாரிகளும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளும்தான் மரண தண்டனையை மிக உறுதியாக ஆதரிக்கிறார்கள். இருப்பினும், மரண தண்டனையை ஒழித்துவிட்ட சமுதாயங்களைவிட, அதைத் தக்கவைத்துக் கொண்டுள்ள சமுதாயங்களில்தான் காவல் துறையினர் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் அவ்வாறு பாதுகாப்பாக இல்லை என்பதற்கான சான்றுகள் நிறையவே உள்ளன."

■ ஆசிரியர்கள் : வி.ஆர். கிருஷ்ணய்யர், கே. பாலகோபால், பழ. நெடுமாறன், தியாகு ■ பக்கங்கள் : 248 ■ வெளியீடு : மோ. ஸ்டாலின் நினைவு நூலகம், 87, கீழை அலங்கம், தஞ்சாவூர் - 613 001 ■ பேசி : 94438 65698

●●



## ஆவேசம் - சிறுகதைத் தொகுப்பு

விலை ரூ.35

"மாற்குவின் முதல் சிறுகதைத் தொகுப்பு இது. ஏற்கனவே தமிழ் இலக்கிய உலகிற்கு நாவல்கள் படைத்து அறிமுகமானவர். பொதுவாகவே படைப்பாளிகள் சமூகத்தில் நிலவும் அவலங்களையும் வாழ்வியல் சிக்கல்களையும் தம் படைப்புகளில் எடுத்துரைப்பதுண்டு. ஆனால், மாற்கு தம் படைப்புகளில் சிக்கல்களை மட்டும் எடுத்துக் கூறுவதில்லை. அந்தச் சிக்கலுக்கானத் தீர்வு எது என்பதையும் எடுத்துரைக்கிறார். கத்தோலிக்க கிறித்துவத் திருச்சபையில் தலித்துகளுக்கு ஏற்படும் பல்வேறு சிக்கல்களை அவரின் 'யாத்திரை' காட்டியது போலவே இச்சிறுகதை இலக்கியமும் காட்டுகிறது."

■ ஆசிரியர் : மாற்கு ■ பக்கங்கள் : 94 ■ வெளியீடு : வைகறைப் பதிப்பகம், பாளையங்கோட்டை

●●



## ரெட்டமலை சீனிவாசன் வரலாறு

விலை ரூ.75

"எங்களுக்கு ஒரு பொறுப்பான அரசு தேவை என்றாலும், முதலாளிகள் மட்டும் மாறும் ஓர் அரசை நாங்கள் கோரவில்லை. நீங்கள் உருவாக்கப் போகும் ஆட்சியமைப்பு, உண்மையில் முழுப் பொறுப்பு வாய்ந்ததாக அமைய வேண்டுமானால், நீங்கள் கூட்டப்போகும் சட்டமன்றம் உண்மையில் முழுப் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும்."

■ ஆசிரியர் : வே. பிரபாகரன் ■ பக்கங்கள் : 256 ■ வெளியீடு : திருவள்ளுவர் நூலகம், ஆர். 56/11, கோட்டூர்புரம், சென்னை - 85 ■ பேசி : 2447 2652



படிப்பகம்

www.padippakam.com

# சமூக விடுதலை நோக்கிய பயணம்

■ 'எக்ஸ்ரே' மாணிக்கம்

உலகில் எங்குமே ஒரு தொழிலை, குறிப்பிட்ட சமூகப் பிரிவினர் மட்டுமே செய்ய வேண்டுமென்ற கட்டாய நிலை இல்லை. ஆனால், இந்தியாவில் சில வேலைகளை சில சாதிகள் மட்டுமே கட்டாயமாகச் செய்ய வேண்டும் என்ற நிலையிருந்தது. கால ஓட்டத்தில் குறிப்பிட்ட சாதிகள் செய்து வந்த பல வேலைகள் மாறி, பரவலாகப் பலரும் செய்யும் நிலை வந்துள்ளது. ஆனால், காலங்கள் மாறினாலும் கிராமங்களில் செட்யூல்டு மக்கள் சுடுகாட்டு வேலையை செய்தே ஆக வேண்டும் என்ற சாதிய அடக்குமுறை தொடர்ந்து கொண்டே இருக்கிறது.



**இறந்தவற்றை அடக்கம் செய்வது தவிர்க்க முடியா பொதுச் சமூகக் கடமை யாகும். அதை ஒரு சாதி மட்டும் செய்யாமல், மற்றவர்களும் செய்யும் படியான விதிமுறையை ஏற்படுத்த வேண்டும்.**

கோயில், குளம், உணவகம் மற்றும் பொது இடங்களில் செட்யூல்டு மக்களும் மற்ற சாதியினர் போன்று சமூகச் சுதந்திர உரிமைப் பெற்றிட மதம், சமூக, அரசியல் தளங்களில் போராடியது போன்று - கிராமங்களில் பிணம் மற்றும் செத்தமாடு தூக்கிப் புதைத்தல் ஆகிய வேலைகளைப் பரம்பரையாக செட்யூல்டு மக்கள் செய்தே ஆக வேண்டுமென்ற நிலையை மாற்றி, எல்லாப் பிரிவினரும் செய்யும்படியாகப் போராடிப் பொது வேலையாக்கியே தீர வேண்டும்.

கிராமத்தில், இறந்த சாதி இந்து ஒருவரை அடக்கம் செய்யும் இடுகாட்டு வேலையைச் செய்ய மறுத்திடும் செட்யூல்டு மக்களுக்கும் - அவ்வூரிலுள்ள மற்ற எல்லா சாதிகளுக்கும் இடையே உயிர்ப்பலி சண்டையே ஏற்படுகிறது. விடுதலைக்குப் போராடுவோரும் மாற்றாரும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒன்றுக்கொன்று போராடிக் கொண்டிருக்கும் நிலையை மாற்றி அமைத்திட, சமூக - அரசியல் தளங்களில் பிரச்சினையை மய்யமாக்கித் தீர்வு கண்டாக வேண்டும்.

மனித வாழ்முறை சுழற்சியில் பிறந்த குழந்தையை வீட்டிற்குக் கொண்டு வருவதும், இறந்த மனிதனை வீட்டை விட்டு வெளியேற்றுவதும் தொடர் நிகழ்ச்சியாகும். வெளியேற்றப்பட்ட மனிதனை வீதியில் போட முடியுமா? சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற மற்ற பெரு நகரங்களிலும் இடுகாட்டிற்கு எடுத்துச் சென்று இடுகாட்டு அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி, ரசீது பெற்று அடக்கம் செய்யப்படுகிறது. அவ்வேலை என்பது ஒரு சாதி சார்ந்த வேலையாய் இல்லாமல் தனி மனித வேலையாக மாறியதுடன் - இன்று நகரங்களில் பல சாதியைச் சேர்ந்தவர்களும் அவ்வேலையைச் செய்வதைப் பார்க்கலாம்.

ஆனால், நகரத்தில் நகராட்சி வேலையாக இடுகாட்டு வேலை இருப்பது போன்று, கிராமத்தில் கிராம ஊராட்சி வேலையாக ஆக்கப்படாததால் - மற்ற சாதிகளுக்கு செட்யூல்டு வகுப்பைச் சேர்ந்தவரே அவ்வேலையைச் செய்தாக வேண்டும். இது. இந்து மதம் வார்த்தெடுத்த கொடுமை நிறைந்த அடக்குமுறை அடிமைப்படுத்திய தீண்டாமை யாகும். இந்திய அரசியல் சட்டப்படி, யாரையும் கட்டாயப்படுத்தி எந்த ஒரு வேலையையும் செய்ய வைப்பது குற்றமாகும். ஆனால், நடைமுறையில் நிலைமை தலைகீழாக இருக்கிறது.

மேற்சொன்ன தீண்டாமையை செட்யூல்டு மக்கள் ஒழிக்காதவரையில், படிப்புப் பல படித்து அந்தஸ்துள்ள ஆயிரம் பதவிகள் வகித்தாலும், அரசியல் அதிகாரப் பீடத்தில் அமர்ந்தாலும், தீண்டாமையை ஒழித்த சமூகமாய் ஆகாத வரையில், மற்றவர்கள் மத்தியில் யாருக்கும் மரியாதையில்லை. இதை உணராதவர் மனிதரில்லை. வர்ணாசிரம இந்து மதம் என்று ஆதிக்கம் பெற்றதோ அன்று, முதலில் நான்கு வர்ணமாக்கி, பின்பு பல்வேறு சாதிகளாகப் பிரித்தனர். பிறகு வர்ண அடிப்படையில் தொழில் ஏற்படுத்தியபோது - அக்கோட்பாட்டை எதிர்த்துப் போராடிய இன்றைய செட்யூல்டு மக்களின் முன்னோர்களை, அன்று பார்ப்பனர்களும், அவர்களின் 'அடைகாப்பிற்குள்' சென்ற சாதி இந்துக்களும் சேர்ந்து கொண்டு, அடக்கித் தாழ்த்தி கட்டாயமாகத் திணிக்கப்பட்டவேலைகளில் ஒன்றுதான் சுடுகாட்டு வேலையாகும்.

தமிழக அளவில் மேற்சொன்ன வேலையிலிருந்து கிராம செட்யூல்டு மக்களை விடுவிக்க கடமையாற்றுவோரின் சிந்தனைக்கு இக்கருத்து கொண்டுவரப் பெற்ற போது, வெவ்வேறு இடங்களிலிருந்து உடன்பாட்டுச் சிந்தனையும், ஒத்திசைவு போன்ற தோற்றமுடைய எதிர்க்கருத்தும் வந்தன. அவற்றில் ஒன்று, எப்பொழுதும் பொருளாதார அடிப்படையிலேயே சிந்தித்துப் பழக்கப் பட்டவர்களின் கருத்திலிருந்து வந்த செய்தி:

''கிராமத்தில் இறந்த மனிதனையோ, மாட்டையோ அடக்கம் செய்வதற்கு வருமானம் கிடைக்கும் அல்லவா?''



படிப்பகம்

www.padippakam.com

என்பதாகும். அக்கருத்துடையோரின் சிந்தனையில் செட்டூல்டு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் செய்ய மறுக்கின்றார்கள் என்றால், விருப்பப்பட்ட மற்ற சாதியாரை வருமானத்திற்காகச் செய்ய வைக்கலாமே என்ற கருத்தினை முன்வைக்காமல், பரோபகார சிந்தனை முத்திரை குத்தி, வருமானம் வருமானம் என்பதா?

வருமான அடிப்படையில் அக்கருத்தினை ஆய்வு செய்துதான் பார்ப்போம். கிராமங்களில் மக்கள் தொகை குறைவாக இருப்பதால், எந்த ஒரு கிராமத்திலும் தினசரியோ, வாரம் ஒரு முறையோ, மாதம் ஒரு முறையோ, ஆண்டிற்கு ஒரு முறையோகூட மனிதர்கள் இறப்பதில்லை. ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு கிராமத்தில் மரணம் ஏற்படுகிறது. அதை அடக்கம் செய்யும் மனிதர்களுக்கு கொடுக்கப்படும் பணத்தை வாழ்நாள் வருமானம் என்று சொல்வார்களேயானால், அது வடிகட்டிய வளர்ச்சி பெறாத மனநிலையையே காட்டுவதாகும்.

பொருளாதார அடிப்படையில் பொருந்தாதக் கூற்றைப் பொருத்திக் காட்டும் தந்திரக் கலையும் பொய்த்துப் போய் விடுகிறது. ஆகவே இறந்தவற்றை அடக்கம் செய்வது தவிர்க்க முடியா பொதுச் சமூகக் கடமையாகும். அதை ஒரு சாதி மட்டும் செய்யாமல், மற்றவர்களும் செய்யும்படியான விதிமுறையை ஏற்படுத்த வேண்டும். அது எவ்வாறு?

■ நகரங்களில் சுடுகாட்டு வேலை என்பது நகராட்சி வேலையாக உள்ளது போன்று, கிராமங்களிலும் கிராம ஊராட்சி மன்ற வேலையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அப்படியானால் ஒவ்வொரு கிராமத்திற்கும் அவ்வேலையைச் செய்ய நிரந்தர மாதச் சம்பளத்தில் ஆட்கள் நியமிக்க, ஊராட்சி மன்ற நிர்வாக செலவிற்குள் முடியுமா?

■ ஒவ்வொரு கிராமத்திலும் மாதச் சம்பளத்தில் அவ்வேலையைச் செய்ய நியமிப்பது தேவையற்றது; அசாத்தியமானது, நடைமுறைக்கு வாராது. எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு கிராமத்திலும் ஆண்டிற்கு ஒருமுறைகூட இறப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை. ஏனெனில், கிராமங்களில் மக்கள் தொகை குறைவாக இருப்பதால், இறப்பு விகிதமும் குறைவாக இருக்கும். அவ்வாறான சூழ்நிலையில் ஊருக்கு ஊர் அவ்வேலையைச் செய்ய மாத சம்பளத்தில் ஆட்கள் நியமனம் செய்யத் தேவையில்லை. ஊராட்சி மன்ற நிர்வாகச் செலவு இக்குறிப்பிட்ட வேலைக்கு மிகாமலும் - நடைமுறைக்கு ஏற்ற வகையிலும் செயற்படுத்துவது எவ்வாறு?

■ மக்கள் தொகை அடிப்படையில் ஊராட்சி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஓர் ஊராட்சி மன்றத்துக்கு உட்பட்ட கிராமங்கள் சுமார் பதினைந்திலிருந்து இருப்பது வரை இருக்கலாம். ஊராட்சி மன்றம் மூலமாக ஓர் ஊராட்சி சுடுகாட்டு வேலை செய்ய முழுநேர நிரந்தரத் தொழிலாளியாக இரண்டு நபர்களை நியமனம் செய்ய வேண்டும். இப்பொழுது அந்த வேலை என்பது செட்டூல்டு மக்கள் செய்த வேலை போய் ஊராட்சி மன்ற (அரசாங்கம்) வேலையாக மாற்றப்படுகிறது. மேற்சொன்ன வேலையை செய்ய, ஊராட்சி மன்றம் பொது அறிவிப்பு செய்து, வேலை வாய்ப்பு மனு பெற்று விருப்பப்பட்ட யார் வேண்டுமானாலும் செய்யும்படியாக நியமிக்க வேண்டும். எல்லாச் சாதியினருக்கும் அவ்வேலையாட்கள் அவ்வேலைகளைச் செய்ய வேண்டும்.


'கம்யூனலிசம் காம்பட்'

■ இவ்வாறாக ஒரு கிராமத்தில் ஒருவர் இறந்தாலோ, மாடு செத்தாலோ ஊராட்சி மன்ற அலுவலகத்திற்குத் தெரிவித்து அடக்கம் செய்ய பணம் கட்டி உத்தேசமாக, இறந்த நபருக்கு ரூபாய் அய்ம்பதும், செத்த மாட்டிற்கு ரூபாய் பத்தும் உரிய ரசீது பெற்றவுடன் ஊராட்சி மன்றத் தொழிலாளி வந்து நல்லடக்கம் செய்வார். ஊராட்சி மன்ற வேலையாட்களாக உள்ள இரண்டு நபர்களுக்கும் எல்லா நாட்களிலும் சுடுகாட்டு வேலை இருக்கப் போவதில்லை. ஆகவே, ஊராட்சிமன்ற அலுவலக வேலையை அவர்களது நிலைமைக்கு ஏற்ப வழங்கலாம்.

■ இவ்வாறு ஊராட்சி மன்றம் இரண்டு நபருக்கு மாதச் சம்பளம் கொடுப்பதால், சற்று செலவு ஊராட்சி மன்றத்திற்கு அதிகம் ஆகலாம் அல்லவா? அச்செலவை ஓரளவு ஈடுசெய்யும் ஒரு வழியாக ஊராட்சி மன்றத்தால் ஆண்டிற்கு ஒரு முறை 'நற்சேவை' வரி என்று (உத்தேசமாக ரூ. 20) வீட்டுவரி வாங்கும் போது சேர்த்து வசூலிக்கலாம்.

■ இவ்வாறாக ஏற்பட்டால், கிராமங்கள் தோறும் செட்யூல்டு மக்கள் செய்து வந்த வேலையானது மாற்றப்படுவதால், செட்யூல்டு சமூகம் முழுவதும் தீண்டாமையின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட சமூகமாக மாறுதல் அடையும். இதுவரை நாம் ஆய்ந்த கருத்தின் செயலாக்கம், தமிழக சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு அதைச் சட்டமாக இயற்றி, ஊராட்சி மன்றங்கள் நிறைவேற்றும் போதுதான் செட்யூல்டு மக்களுக்கு விடுதலை கிடைக்கும்.

**அதிகம் படித்து ஆயிரம் உயர் பதவிகள் வகித்தாலும், அரசியல் அதிகாரப் பீடத்தில் அமர்ந்தாலும், தீண்டாமையை ஒழித்த சமூகமாய் ஆகாதவரை, மற்றவர்கள் மத்தியில் யாருக்கும் மரியாதை இல்லை.**

நிர்ணயித்த இலக்கை அடைய அரசியல் தீர்வு ஒன்றே வழியாகும். அத்தீர்வை வென்றடைய, தொடர் சமூக எழுச்சியும் அரசியல்வாதிகளின் ஊக்கமும் ஒன்றிணைந்து உந்து சக்தியாக செயற்பட்டால் வெற்றி நிச்சயம். இக்கருத்தினை தேர்தல் களத்தில் பிரதிபலிக்கச் செய்வது நமது கடமையன்றோ! ●



படிப்பகம்

www.padippakam.com

# நர்மதா பாதுகாப்பு இயக்கம்: மீண்டும் பலமடையும்



என். ஜெய்சிங்

"என் கண்களின் முன் இந்து மதத்தின் தொன்மையை மிஞ்சிய பழங்குடி மக்களின் பண்பாடு அமைதியாக மூழ்கக் காத்திருக் கிறது. இந்த நாட்டின் உச்சமான தர்ம சபையின் நீதியரசரின் நேர்மைமிக்க ஆணையின்படி, சர்தார் சரோவர் அணை உயரும், நீர் நிறையும். எல்லாம் நிரந்தரமாக ஜலசமாதி அடையப் போகின்றன.

பாய்ஜிபாய்! பாய்ஜிபாய்! நீங்கள் எப்போது உங்களது இந்தப் பொறுமையுடனான காத்திருப்பை, கெஞ்சலை நிறுத்தி பொங்கி எழப்போகிறீர்கள்? போதும். ஆயுதத்தை எடு என்று எப்போது புறப்படப் போகிறீர்கள்? உலகமே நடுங்க உரத்த குரலில் உங்களின் கோபத்தை எப்போது ஒலிக்கப் போகிறீர்கள்? உங்களது அப்பாவித்தனமான நம்பிக்கை களை எப்போது உடைத் தெறியப் போகிறீர்கள்?

நீங்கள் அணைகளை விரும்பி னாலும், விரும்பாவிட்டாலும், தேவை என்றாலும் - இல்லை என்றாலும் இதற்குத் தரும் விலை என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

கடன்கள் தீர்க்கப்படும்
புத்தகம் மூடப்படும்.
ஆனால், அது நமது கடன்
நமது கணக்குப் புத்தகம்
நாமே முடிப்போம் வாருங்கள்."

– அருந்ததி ராய், Greater Common Good பொது நலனுக்காக.

■ அன்பு செல்வம்

நர்மதா பச்சோவா அந்தோலன் என்கிற 'நர்மதா பாதுகாப்பு இயக் கம்' தனது 20 ஆவது ஆண்டு விழாவை அண்மையில் மும்பையில் கொண்டா டியது. நர்மதா என்கிற நதியின் குறுக்கே சிலந்தி வலைகளாய் கட்டப்படும் ஆயி ரத்துக்கும் மேற்பட்ட அணைகளுக்கு எதிராகத் தொடங்கப்பட்ட ஓர் இயக்கம் இது. இந்த நூற்றாண்டில் ஒரே பிரச்சி னைக்காகத் தொடர்ந்து 25 ஆண்டுகளுக் கும் மேலாகப் போராடிக் கொண்டிருக் கின்ற மக்கள் இயக்கம் இதுவாகத்தான் இருக்க முடியும் என்கிற பெயரை, ஆசிய நாடுகளின் சுற்றுச் சூழல் ஆர்வலர் களின் வரலாற்றில் பதிவு செய்துள்ளது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராட் டங்கள், அறவழியிலான நூதன யுக்தி கள், மக்காச்சோளம் உற்பத்தியையே பாதித்த பழங்குடியினரின் ஆற்றல் இழப்புகள், புதிய - புதிய வழக்குகள், மேற்கோள் சொல்ல முடியாத தீர்ப்பு கள், இது போக இந்திய வளர்ச்சிக் கொள்கைகளையும், திட்டங்களையும் உருவாக்குகின்ற அறிஞர்களிடம் முன் னேற்றம் - இடப்பெயர்ச்சி மற்றும் மறு வாழ்வு - மறுகுடியமர்வு தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகள்... இவைய னைத்தும் சர்தார் சரோவர் அணையை விடப் பல மடங்கு பெரிதானவை என் பதை இவ்வியக்கத்தின் போராளி மேதா பட்கர், தேசிய கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளார்.

பல மாநிலங்களில் தேர்தலை நடத்து வதற்கான வேலைகளில் கவனம் செலுத்தி வந்த ஆளுங்கட்சியையும், அரசியல் சூழலையும் திசைதிருப்பி தலைப்புச் செய்தியான மேதா பட்கரின் சாகும்வரை பட்டினிப் போராட்டம், நர்மதாவின் குறுக்கே கட்டப்படும்



படிப்பகம்

www.padippakam.com

சர்தார் சரோவரின் கதையை மீண்டும் ஒருமுறை மக்களுக்கு நினைவூட்டியது. இயற்கைப் பேரிடர் ஆணையத்தை உருவாக்கிவிட்டோம்; இனி சுனாமி வந்தாலும் பூகம்பம் வந்தாலும் ஒன்றும் ஆகாது என்று மார்தட்டி நிற்கிற இந்திய அரசின் வளர்ச்சித் திட்டத்துக்கு எதிராக, செயற்கைப் பேரிடர் நாசத்தை உருவாக்க சர்தார் சரோவர் அணை தற்போது 436 அடியை நெருங்கிக் கொண்டிருப்பதை பிரதமரும், உச்சநீதிமன்றமும், குஜராத் அரசும் கவனிக்கத் தவறியதை 21 நாள்கள் நாடே உற்று நோக்கியது.

அமர்கந்தா மலைமுகடுகளில் தொடங்கி 1,300 கிலோ மீட்டர் பரந்து விரிந்த அரபிக் கடலில் சங்கமிக்கும் நர்மதாவின் குறுக்கே கட்டப்படும் 3,000 சிறிய அணைகள், 300 நடுத்தர அணைகள், 30 பெரிய அணைகளால் மட்டும் 20 லட்சம் பழங்குடியினர் பாதிக்கப்படுகின்றனர். கரும்பு உற்பத்திக்காகவும், மின்சாரத்திற்காகவும், பாசன வசதிகளுக்காகவும், ஏன் இந்திய பொருளாதார வளர்ச்சிக்காகவும் கட்டப்படுகின்றன என்கிற அரசின் விளக்கங்கள் - பல்வேறு வடிவங்களில் விளக்கப்பட்டாலும், இதனால் பாதிக்கப்படுகின்ற லட்சக்கணக்கான பழங்குடி மக்களுக்கு மறுவாழ்வு - மறுகுடியமர்வு குறித்து அரசு இதுவரை எதையும் சரியாக செய்ததில்லை. இந்நிலையில், சர்தார் சரோவர் என்கிற அணையின் கட்டுமானத்தை உயர்த்துவதிலும், தண்ணீர் அளவை அதிகரிப்பதிலும் அரசு தன்முனைப்பு காட்டி வருவதற்கு எதிராக மீண்டும் போராட்டம் தலையெடுத்துள்ளது.

இப்போராட்டம் ஆதிக்க சாதியினருக்கும் - காவல் துறைக்கும், அரசுக்கும் எதிராகப் போராடுகின்ற தலித்துகளின் போராட்ட அனுபவத்தைப் போன்றதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், தளர்வு இல்லாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அரசுக்கு எதிராக எந்த விதத் தளர்வும், சோர்வுமின்றி இவ்வியக்கம் போராடி வருகின்றது. முன்னேற்றம் என்கிற வளர்ச்சித் திட்டங்களை அரசு உருவாக்கினால், அதனால் ஏற்படும் இடப்பெயர்ச்சியில் மறுவாழ்வு - மறுகுடியமர்வை உருவாக்க அரசிடம் எந்தவித முன்வரையறையும் இல்லை என்பதை அரசுக்கு உணர வைத்துள்ளது. இருப்பினும், இப்பிரச்சினை மகாராட்டிரா, குஜராத், மத்தியப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களுடன் தொடர்புடையதாக இருந்தாலும், இந்துத்துவ விளைச்சலுக்குப் பெயர்போன குஜராத் மட்டுமே இதன் நாட்டாமையாகத் தன்னை முன்நிறுத்தி வருகிறது. 'குஜராத் இனக்கலவரத்துக்கு எதிராக சபர்மதி ஆசிரமத்தில் போராட்டம் தொடங்கிய மேதாபட்கரை நான் எளிதாக மறந்துவிடவில்லை' என்பதை நினைவுபடுத்தி, மேதா பட்கருக்கு எதிராக நரேந்திர மோடி பட்டினி கிடக்கத் தொடங்கினார். கூடவே தன்னையும் குஜராத் மக்களின் விசுவாசியாகக் காட்டிக் கொண்டார்.

'தி இந்து'



புது டில்லியில் மக்களை கட்டாயப்படுத்தி வெளியேற்றுவதற்கு எதிராக நடத்தப்படும் இயக்கத்திற்கு - அருந்ததிராயும், மேதா பட்கரும் தங்கள் ஆதரவைத் தெரிவிக்கின்றனர்

இன்று எளிதில் மறக்க முடியாத, புறக்கணிக்கவும் முடியாத பிரச்சனையாக நர்மதா பிரச்சனை உருவெடுத்து நிற்கிறது. ஓர் அணையைக் கட்டினால் 44 ஆயிரம் பேர் இடம் பெயர்கின்றனர் என்று ஒரு புள்ளிவிவரம் குறிப்பிடுகின்றது. அப்படியானால், இந்தியாவில் உள்ள 3,600 அணைகளால் இடம் பெயர்ந்தவர்கள் எத்தனைபேர் என்பதை கணக்கெடுத்தால், ஒரு மாநிலமே இந்திய வரைபடத்திலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கின்றது.

அணைகளால் இடம் பெயர்ந்த பழங்குடியினர் மட்டுமே 55 சதவிகிதத்தினர். இதில் தலித்துகளையும் சேர்த்தால் 60 சதவிகிதத்தினர் என்கிறது இன்னொரு ஆய்வு. நகர்ப்புறப் பணக்காரர்களின் ஆடம்பர வாழ்வுக்காக பழங்குடியினரின், தலித்துகளின் நிலத்தையும், நீரையும் பிடுங்கிக் கொடுப்பதை இந்த அரசு முன்னேற்றம் என்று கூவுகின்றது. ஆனால், 20 கோடி இந்தியர்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் இல்லை; மூன்றில் இரண்டு பங்கு மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதி இல்லை. பணக்கார நாடுகளில் இதுபோன்ற மிகப் பெரிய அணைகள் கட்டும் திட்டங்களுக்கு எதிராகப் பசுமை அமைதி இயக்கம், பூவுலகின் நண்பர்கள் இயக்கம் தொடங்கிய போராட்டங்களால், அணைகள் கட்டும் திட்டம் முற்றிலும் நிறுத்தப்பட்டு விட்டன. ஆனால், உலக வங்கியின் எச்சில் காசை

> **“ ஓர் அணையைக் கட்டினால் 44 ஆயிரம் பேர் இடம் பெயர்கின்றனர் என்று ஒரு புள்ளி விவரம் குறிப்பிடுகின்றது. அப்படியானால், இந்தியாவில் உள்ள 3,600 அணைகளால் இடம் பெயர்ந்தவர்கள் எத்தனை பேர் என்பதை கணக்கெடுத்தால், ஒரு மாநிலமே இந்திய வரைபடத்திலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கின்றது. ”**

வாங்கி கூட்டணி பங்கு போட்டுப் பிரித்துக் கொள்ளவே நர்மதா அணைத் திட்டம் அரசால் படுகம்பீரமாக நிறைவேற்றப்படுகின்றது.

கடந்த 25 ஆண்டுகளில், நர்மதா பாதுகாப்பு இயக்கம் முன்னெடுத்த போராட்ட வரலாற்றின் காலச்சூழலில் நர்மதாவில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் பலர் உயிருடன் இல்லை. மக்கள் தொகைக் கணக்கெடுப்பில்கூட இடம் பெறாமல் அவர்களால் சமாதியானார்கள். இட்லரின் பாசிசக் கொடூரங்களை செய்நேர்த்தியோடு செய்துவரும் குஜராத் அரசு, 'தொல்குடியினர்' என்கிற மானுட மரபையே முற்றிலும் அழிக்கக் காரண கர்த்தாவாக இருந்து விட்டது. அரசின் தவறான வளர்ச்சித் திட்டங்களுக்கு எதிராக, உரிமையுடன் போராடும் போர்க்குணத்தை நர்மதா பள்ளத்தாக்கு பழங்குடியினர் பெற்றுள்ளனர். அவர்களை நர்மதா பாதுகாப்பு இயக்கம்தான் விழிப்பூட்டியது. இத்தனை ஆண்டு



படிப்பகம்

www.padippakam.com

களில் தங்களுக்கான உரிமைகளை இவர்கள் போராடியே பெற்று வந்துள்ளனர்.

யார் இருந்தாலும், செத்தாலும் இந்தியா பணக்காரர்களுக்காக முன்னேறிக் கொண்டே இருக்கும். இதை யாரும் தடுக்க முடியாது என்றாலும் தடுக்கவே கூடாது என உச்ச நீதிமன்றமே வக்காலத்து வாங்குகின்றது. இரண்டு லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட ஓர் இயக்கத்தையே நசுக்கத் துடிக்கின்றது. நர்மதா திட்டம் தொடர்பாக விரிவான மறு ஆய்வு வேண்டும், மறுவாழ்வு - மறு குடியமர்வு ஆகியவற்றை மறு ஆய்வு செய்து திட்டம் தயாரித்து உறுதிப்படுத்த வேண்டும். அதற்கு சாத்தியம் இல்லை என்றால், அணை கட்டும் பணி நிறுத்தப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்திடம் முறையிட்டும் அது மறுத்தது. எல்லாவற்றுக்கும் மேலாக உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடும் மக்கள் இயக்கங்களையும் அதன் தலைவர்களையும் அது கொச்சைப்படுத்தியது.



நர்மதாவாக இருந்தாலும், பழங்குடியினராக இருந்தாலும் அது போராடுகின்ற மக்கள் பிரச்சினை. போராடுகின்ற மக்களும் அதன் இயக்கமும் பலவீனமடைந்தால் உள்ளவையும், உணர்வும் பலவீனமடையும். ஒடுக்கப்படுகின்ற மக்களை உரிமையுடனும், சுய உணர்வுடனும் வாழ வலியுறுத்துவது நம் கடமை. தனது சொந்தப் பெயரை எழுதத் தெரியாதவர்கள் ஓர் இயக்கமாக அணிதிரண்டு, இந்திய வளர்ச்சித் திட்டங்களை கேள்விக்குட்படுத்தியுள்ளார்கள் என்றால், அவர்கள் ஓர் இயக்கமாக, அமைப்பாகத் திரண்டு எழுந்ததுதான் அவர்களின் வெற்றி. அந்த வெற்றியை நாமும் கொண்டாடுவதும், அதில் நம்மை அடையாளப் படுத்திக் கொள்வதும் காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது.

ஆனால், இன்றைக்கு மக்கள் இயக்கங்களுக்கும், தலித் இயக்கங்களுக்கும் பெரிய இடைவெளி இருந்து வருகின்றது. யாரும் யாரையும் போராட்டக் களத் தோழமையாகக்கூட அங்கீகரிப்பதில்லை. மக்கள் இயக்கங்கள் தலித் பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்துவதில்லை என்கிற தலித் விமர்சனங்களில் இருந்து நர்மதா பாதுகாப்பு இயக்கம் தனித்து நிற்கின்றது. பெண்களின் தலைமையில் செயல்படும் இயக்கங்கள் மீது அப்படியொரு குற்றச்சாட்டை எளிதாக வைக்க முடியாது என்பதை ஓரளவு நர்மதா பாதுகாப்பு இயக்கம் நிரூபித்து வருகின்றது.

சுற்றுச் சூழல் பாதுகாப்புக்காகவும், பழங்குடியினரின் நலனுக்காகவும் கதர் கலாச்சாரத்தில் இதுபோல் பட்டினியிருப்பது வடஇந்தியாவில் எளிதான ஒன்று. டெக்ரி அணைக்கு எதிராக சுந்தர்லால் பகுகுணா, பர்கி அணைக்கு எதிராக பாபா அம்தே - 40 நாள், 90 நாள் என்றுகூட பட்டினிப் போராட்டம் நடத்தியுள்ளனர். ஆனால், மார்ச் 27 முதல் ஏப்ரல் 17 வரை 21 நாள்கள், நர்மதா பள்ளத்தாக்குப் பழங்குடி மக்களுடன் மேதா பட்கர் மேற்கொண்ட பட்டினிப் போராட்டம், ஒட்டுமொத்த அரசியல் வட்டாரங்களில் கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளது. சோனியாவும், பிரதமரும் தலையிட வேண்டியிருந்தது. வி.பி. சிங் மேதாவை சந்தித்தார். அரசியலில் இருக்கின்ற சிலருக்கே இந்தப் பிரச்சனையைப் பற்றிய உண்மை, இதுபோன்ற சூழலில்தான் தெரிகின்றது.

ஆனால், இதே காலகட்டத்தில் மும்பையின் மிகப்பெரிய சேரியிலிருந்து 22,000 சேரிமக்களை மும்பையின் வரைபடத்திலிருந்தே தூக்கியெறிய நடந்த சதிக்கு எதிராக, கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக மேதா பட்கர் மும்பையில் போராடி வருகிறார்; பட்டினி இருந்திருக்கிறார்; கைது செய்யப்பட்டுள்ளார். இந்திய அளவில், ஏன் தமிழக அளவில் அவரின் ஆதரவாளர்கள் அதனை இங்குள்ள தலித் இடப்பெயர்ச்சிப் பிரச்சனையோடு அல்லது கிராம நகர்ப்புற குடிசைப்பகுதிகளின் இடப் பெயர்ச்சிப் பிரச்சனையோடு தொடர்புபடுத்தி - எங்கேயும் ஆர்ப்பாட்டங்களோ, போராட்டங்களோ நடத்தியதில்லை. ஒன்று அது தலித்துகளின் பிரச்சனை. அடுத்து அதில் எந்த விளம்பரமும் கிடைக்காது.

தலித் இயக்கங்கள், மக்கள் இயக்கங்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய விசயங்கள் ஏராளம் இருந்தாலும், முதலில் மக்கள் இயக்கங்கள் தலித் பிரச்சினைகளில் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும். நர்மதா

**“ பழங்குடியினரின், தலித்துகளின் நிலத்தையும், நீரையும் பிடுங்கிக் கொடுப்பதை இந்த அரசு முன்னேற்றம் என்று கூவுகின்றது. ஆனால், 20 கோடி இந்தியர்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் இல்லை; மூன்றில் இரண்டு பங்கு மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதி இல்லை. ”**

பாதுகாப்பு இயக்கமும், மேதா பட்கரும் தலித் பிரச்சனைகளில் கவனம் செலுத்தக்கூடிய வகையில் தங்கள் இயக்கங்களை வழிநடத்துகிறார்கள். ஆனால், இங்குள்ள விவசாய இயக்கங்களும், சுற்றுச் சூழல் இயக்கங்களும், மனித உரிமை இயக்கங்களும் - தலித் பிரச்சனைகளுக்காகத் தங்களை வருத்திக் கொள்ள மாட்டார்கள்; தலித் இயக்கங்களுடன் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளவும் மாட்டார்கள்.

தமிழகத்தில் மக்கள் இயக்கங்களை வழிநடத்துகின்றவர்கள், நர்மதா பாதுகாப்பு இயக்கத்திடமிருந்து நிறைய படிப்பினைகளைப் பெற வேண்டியதை, இன்றைய சூழலில் நினைவுபடுத்த வேண்டியுள்ளது. போராட்டத் தோழமையில் ஓர் இணைந்த நட்புறவு தேவை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. ●



படிப்பகம்

www.padippakam.com

கடந்த இரு இதழ்களில் வெளிவந்த டாக்டர் கே. பாலகோபால் அவர்களுடைய நேர்காணல், இவ்விதழில் நிறைவடைகிறது.

**தலித் இயக்கங்கள் அரசியல் அதிகாரத்திற்கு முன்னுரிமை அளிப்பது ஏன்?**

ஆந்திராவில் உள்ள தலித் சிந்தனையாளர்களில் மிகப் பெரும்பாலானோர் முன்னாள் மார்க்சிஸ்டுகளாக இருந்தவர்கள். அதனால்தான் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி, சாதியையும் வர்ணாசிரம தர்மத்தையும் எளிதில் ஒழித்துவிடலாம் என்ற கருத்தின்பால் ஈர்க்கப்படுகின்றனர். இன்றைய பரவலான நிலை என்னவெனில், கிராம அளவில் தங்கள் போராட்டத்தை நடத்திவரும் உள்ளூர் அம்பேத்கர் சங்கங்களும், அதற்கடுத்த அனைத்து நிலைகளிலும் அதிகாரத்தைக் கைப்பற்றத் துடிக்கும் தலித் தலைவர்களும் பெருகியிருக்கின்றனர். தலித் அரசியலை முதன்மைப்படுத்தி செயல்படுபவர்கள் வெகுசிலரே. இதனால் விளைந்த ஒரு நன்மை என்னவெனில், தற்பொழுது சாதிப்பாகுபாடுகள் பற்றியும், சாதி ஆதிக்கத்தைப் பற்றியும் யாரும் ரகசியமாகப் பேசுவதில்லை. பார்ப்பனியத்தை அதன் சரியான பெயர் சொல்லி குறிப்பது, அதிசயமாக இல்லை.

வாய்ப்புகள் மறுக்கப்பட்ட தலித் சமூகத்திற்குள்ளேயே 'மாதிகா'வினர், தாங்கள் சமமாக நடத்தப்படவில்லை என்ற பிரச்சினையை எழுப்பி, பட்டியல் சாதியினர் ஒதுக்கீட்டிலேயே உள் ஒதுக்கீடு (வேலைவாய்ப்புகளிலும் கல்லூரிப் படிப்புகளிலும்) வேண்டும் என்று போராடிய போது, தலித் இயக்கம் பெரியதொரு நெருக்கடியைச் சந்தித்தது. இத்தகைய நெருக்கடிகளிலிருந்து மீண்டும் தலித் இயக்கம் மக்களிடையே நம்பகத் தன்மையைப் பெற்றது என்று நேர்மையாக யாரும் ஒப்புக் கொள்ள முடியாது. பட்டியல் சாதியினரிடையே நிலவும் ஏற்றத்தாழ்வை யாரும் தீவிரமாக மறுக்கவில்லை. ஆனால், தலித்துகளிலேயே முன்னேறிய பிரிவினர் குறிப்பாக, மாலா மற்றும் ஆதி ஆந்திரா சமூகத்தினர், மாதிகாவினரின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கவில்லை. இவர்கள் தலித் சமூகத்தில் நிலவும் சமமற்ற தன்மையைப் புரிந்து கொண்டு, பட்டியல் சாதியினர் இட ஒதுக்கீட்டில் மாதிகா பிரிவினர் முன்வைக்கும் இடஒதுக்கீடு போராட்டத்தை பெருந்தன்மையோடு ஆதரித்திருந்தால், தலித் சமூகத்தையும், தலித் இயக்கத்தையும் நெருக்கடியிலிருந்து காப்பாற்றி இருக்கலாம். ஆனால், அவர்கள் சூழலின் தன்மை புரிந்து செயல்படவில்லை.

**உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் சூழலில், மனித உரிமைப் போராளிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றி சொல்லுங்கள்.**

உலகமயமாக்கலும் தாராளமயமாக்கலும் தவிர்க்க முடியாதவை என்பதைப் போன்ற தோற்றத்தைத் தருகின்றன. தங்கள் பேராசைகளை நியாயப்படுத்துவதற்கான காரணத்தைத் தேடி அலையும் உயர் தட்டு மக்கள், அவர்களின் குற்ற உணர்ச்சிக்கான (அப்படி ஒன்று இருக்குமாயின்) வடிகாலாக மனித உரிமை அமைப்புகளை நடத்துகின்றனர். மனித உரிமை அமைப்புகள் ஒடுக்கப்பட்டவர்களின் குரலை எதிரொலித்தாலும், ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களுக்காகப் போராடுவதாகக் கூறினாலும், இவர்களுடைய செயல்பாடுகள் அனைத்தும் அதிகார வர்க்கத்தை நோக்கியே அமைந்திருக்கின்றன. உண்மையில் மனித உரிமைகளைப் பொருத்தவரையில், உலகமயமாக்கலும் தாராளமயமாக்கலும் ஒரு பெருந்தடையாகவே இருக்கின்றன. வாழ்வியல் உரிமைகள், கல்வி உரிமைகள், சுகாதார உரிமைகள் மற்றும் அது தொடர்பான பிற உரிமைகள் மீதான நேரடித் தாக்குதலை அது நடத்துவதோடு, உலக அளவில் மனித உரிமைகளின் அடிப்படைத் தேவையாகக்கூட அது ஏற்றுக் கொள்வதில்லை. இக்காலத்தில் மனித உரிமைகளுக்கானப் போராட்டத்தை உலகமயமாக்கல், தாராளமயமாக்கல்

> **“முஸ்லிம்கள் பிற்படுத்தப்பட்ட நிலையிலிருந்து மீண்டுவர, அரசு உதவி செய்யத் தொடங்கிய அடுத்த கணமே, ஒட்டுமொத்த இந்து சமூகமும் திரண்டு - முஸ்லிம்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் அல்ல என்று கூக்குரலிட்டது.”**



## “சமூகப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள மறுக்கும் நீதிமன்றங்கள்”



படிப்பகம்

www.padippakam.com

**❝ சட்டப்படி வணிகம் என்பது, கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதே. பொது மக்களின் நலன்களின் அடிப்படையில் அது வரம்பிற்குட்பட்டதே. அந்தக் கருத்தே அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை நிர்ணயிப்பதாக உள்ளது. அனைத்து தொழிலாளர் நலச் சட்டங்களும், இந்த அடிப்படையில்தான் முன்னிறுத்தப்படுகின்றன. இதே தர்க்கம் ஏன் இடஒதுக்கீட்டுக்கும் பொருந்தவில்லை? ❞**

கடுமையான சிக்கல்களுக்குள்ளாக்குகின்றன. மனித உரிமைகளுக்காகப் போராடுகிறவர்கள், பல முனைகளிலும் போராட வேண்டியிருக்கிறது.

**ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள முஸ்லிம்களுக்கும் தலித்துகளுக்கும் இடஒதுக்கீடு அளிப்பதில், நீதிமன்றத்தின் தலையீடு பற்றி தங்கள் கருத்தென்ன?**

நம் நாட்டில் உள்ள நீதிமன்றங்கள், சமூகப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதில் பெருமளவு பிற்போக்குத்தனமாக உள்ளன. எழுபதுகளின் இறுதியிலும், எண்பதுகளின் தொடக்கத்திலும் நீதிமன்றங்களின் மனோபாவம் ஆக்கப்பூர்வமான மாறுதல்களைப் பெற்றது என்ற கருத்து நிலைப்பெற்றிருந்த காலத்தில்



கூட, அது ஒரு சில நீதிபதிகளிடமே ஏற்பட்ட மாற்றங்களாகும். மேலும், இந்த மனோபாவம் நிலையாக இருந்தது என்றும் சொல்ல முடியாது. தற்பொழுது நீதிமன்றம் நவீன தாராளமயத்திற்கு ஆதரவாகிவிட்டது. உச்ச நீதிமன்ற நீதிபதியான சத்யபிரதா சின்கா போன்ற நீதிபதிகள், சட்டத்தை உருவாக்கியவர்களுக்கு ஒரு ஏற்புடைய அரசுக்கொள்கையின் உள்ளடக்கங்கள் குறித்து என்ன நோக்கம் இருந்திருப்பினும், காலத்தின் மாறுதல்களுக்கு ஏற்ப நீதிமன்றங்களும் தங்களுடைய அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று வெளிப்படையாகவே கூறுகின்றனர்.

இடஒதுக்கீடு குறித்த நீதிமன்றங்களின் அணுகுமுறை இதற்கு ஒரு சான்று. காலத்திற்கேற்ப மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற வேகத்தில், கடந்த 50 ஆண்டுகளாக அவர்களே சொன்னதற்கு முரண்பாடான வகையிலேயே தீர்ப்புகளை வழங்கி வருகின்றனர். தனியார் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு அளிப்பது குறித்து உச்சநீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் அடங்கிய 'பெஞ்ச்' தீர்ப்பின் சாரம், கல்லூரி நிறுவனத்தின் மிகச் சாதாரணமாக அனைவராலும் சொல்லப்படும் வாதம்தான். அரசு நிதி உதவி பெறாத கல்வி நிறுவனத்தின் உரிமையாளர், நிதிக்காக அரசை சார்ந்திராதபோது, அரசு பரிந்துரைக்கும் மாணவர்களுக்கு அல்லது குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டும் அவர் ஏன் இடங்களை அளிக்க வேண்டும்? இதற்கு முன்பும் இதேபோல வாதிடப்பட்டது. ஒரு தனியார் தொழிற்சாலையின் உரிமையாளர், நிதிக்கென அரசை சார்ந்திராத பட்சத்தில், தனியார் நியமித்திருக்கும் ஊழியர்களுக்கு, அரசின் விருப்பத்திற்கு ஏற்ப லாபத்தில் ஏன் பங்கு கொடுக்க வேண்டும்? தனது ஊழியர்களை நீக்குவதற்கு ஏன் அரசின் அனுமதி பெற வேண்டும்?

தொழிலாளர்களின் நலன் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் இத்தகு வணிக ரீதியான தர்க்க விவாதங்களை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது. ஒரு தனியார் நிறுவனம், வெறும் வணிக ரீதியான தர்க்கத்துடன் கேள்விகள் கேட்க முடியாது; மாறாக சட்டத்தின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட வேண்டும் என்று நீதிமன்றம் கூறியது. சட்டப்படி, வணிகம் என்பது கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதே. பொது மக்களின் நலன்களின் அடிப்படையில் அது வரம்பிற்குட்பட்டதே. அந்தக் கருத்தே அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை நிர்ணயிப்பதாக உள்ளது. அனைத்து தொழிலாளர் நலச் சட்டங்களும் இந்த அடிப்படையில்தான் முன்னிறுத்தப்படுகின்றன. இதே தர்க்கம் ஏன் இடஒதுக்கீட்டுக்கும் பொருந்தவில்லை?

ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக அறிவிக்கப்பட்ட இடஒதுக்கீட்டுக்கு எதிரான வழக்கின் சாரம் இதுதான். பொதுவாக இரண்டு இந்துக்கள் எங்கே சந்தித்துப் பேசினாலும் அவர்கள் விதிவிலக்கின்றி, முஸ்லிம்கள் விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கும் பிற்போக்குத்தனத்தைக் குறித்தும் - குறிப்பாக அவர்கள் தங்கள் குழந்தைகளை நவீன பள்ளிகளுக்கு அனுப்புவதற்கு பதில் 'மதராசாக்'களுக்கு அனுப்புகின்றனர்; தங்கள் வீட்டுப் பெண்களை தனிமைப்படுத்தி வீட்டுக்குள் சிறைவைக்கின்றனர்; எல்லாவற்றுக்கும் 'ஷரியத்'தின் அடிப்படையிலேயே தீர்வு காண்கின்றனர்; அறிவியலாளர்களின் கருத்துகளுக்குப் பதில் 'முல்லா'க்களின் கருத்துகளுக்கே முன்னுரிமை அளிக்கின்றனர் என்று பேசுகின்றனர்.

ஆனால், முஸ்லிம்கள் பிற்படுத்தப்பட்ட நிலையிலிருந்து மீண்டுவர அரசு உதவி செய்யத் தொடங்கிய அடுத்த கணமே, ஒட்டுமொத்த இந்து சமூகமும் திரண்டு - முஸ்லிம்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் அல்ல என்று கூக்குரலிட்டது. அதிலும், வழக்கை விசாரித்த 5 நீதிபதிகளில் இருவர் ஏதோ பிற்படுத்தப்பட்ட தன்மை என்பது, நீதித் துறையால் நிர்ணயிக்கப்படுவதுபோல, இஸ்லாமியர்கள் ஒரு சமூகமாக பிற்படுத்தப்பட்டவர்கள் அல்ல என்று அறிவித்தனர்.

**நீங்கள் நடத்திய சில முக்கிய வழக்குகள் பற்றிச் சொல்லுங்கள்.**

பட்டியல் சாதியினரின் உள்இடஒதுக்கீட்டுக்காக உயர்நீதி




படிப்பகம்

www.padippakam.com

மன்றத்தில் வாதாடினேன். அனைத்து தலித் சமூகத்திற்கும் சமமான வாய்ப்புகளை உருவாக்கித் தருவதே என்னுடைய நோக்கமாக இருந்தது. முஸ்லிம்களின் இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாகவும் வாதாடினேன். முதல் வழக்கில் வெற்றியும் பெற்றேன். ஆனால், உச்ச நீதிமன்றத்தின் 'பெஞ்ச்' உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை தலைகீழாக மாற்றிவிட்டது. அந்தத் தீர்ப்பை நான் விமர்சித்து 'எக்னாமிக் அண்டு பொலிடிக்கல் வீக்லி' என்ற ஆங்கில வார ஏட்டில் எழுதினேன். இத்தீர்ப்பு வழக்கத்திற்கு மாறாக மோசமாக எழுதப்பட்ட தீர்ப்பாகும். இரண்டாவது வழக்கிலும் நான் தோல்வி அடைந்தேன். இருப்பினும் இந்த இரு வழக்குகளிலும் வாதாடிய பலரில் நானும் ஒருவன்.

ஆனால், நான் தனியொருவனாக வாதாடி வெற்றிபெற்ற வழக்கு ஒன்றைச் சொல்ல முடியும். அதன் மூலம் நான் தனிப்பட்ட அளவிலும் தொழில் ரீதியாகவும் முழு நிறைவடைந்தேன். ஆந்திரப் பிரதேசத்தில் கணிசமான அளவிற்குப் பட்டியல்படுத்தப்பட்ட பகுதிகள் (அரசமைப்புச் சட்டத்தின் அய்ந்தாவது பிரிவின்படி) உண்டு. எண்பதுகளின் இறுதியில் மாநில அரசு (சொல்லப்போனால் ஆளுநர்), பட்டியல்



**“ நம் நாட்டில் உள்ள நீதிமன்றங்கள், சமூகப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதில் பெருமளவு பிற்போக்குத்தனமாக உள்ளன. தற்பொழுது நீதிமன்றம் நவீன தாராளமயத்திற்கு ஆதரவாகி விட்டது. ”**

படுத்தப்பட்ட பகுதிகளில் அனைத்துத் துறைகளிலும் உள்ள கடைநிலைப் பணிகளை உள்ளூரில் உள்ள பழங்குடியினருக்கு வழங்கியது. பழங்குடி மக்களின் நலன்களுக்காக வேலை செய்வதற்குப் பழங்குடி அல்லாத மக்களைப் பணிக்கு அமர்த்தினால், அவர்கள் பழங்குடியினர் மீது அதிக அக்கறை எடுத்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியாது என்பதால்தான் இந்த இடஒதுக்கீடு நடைமுறைக்கு வந்தது. இந்த பட்டியல்படுத்தப்பட்ட பகுதிகளில் 100 சதவிகித ஆசிரியர் பணியிடங்கள், அனைத்துப் பள்ளிகளிலும் உள்ளூர் பழங்குடியினருக்கே ஒதுக்கப்பட்டன. இந்த இடஒதுக்கீட்டிற்கு எதிராகப் பழங்குடியினர் அல்லாத ஆசிரியர்கள், மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்திலிருந்து உச்சநீதிமன்றம் வரை சென்று 15 ஆண்டு காலம் இதற்கு முட்டுக்கட்டைப் போட்டனர். இறுதியில் உயர் நீதிமன்றத்தின் முழு 'பெஞ்ச்' இதற்கு முற்றுப் புள்ளி வைத்தது. மாநில அரசு தன்னுடைய அரசாணைக்கு ஆதரவாக அக்கறையுடன் செயல்படவில்லை. என்னுடைய வாதமே அன்று முக்கியத்துவம் பெற்றது. ●

நேர்காணல் : **கோ. சுகுமாரன்**

## மும்மொழிகளில் அம்பேத்கர் மலர்

Periyar Era என்ற ஆங்கில மாத ஏட்டின் வெளியீடாக அண்ணல் அம்பேத்கரின் 116 ஆவது பிறந்த நாள் மலரை வே. ஆனைமுத்து அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். 200 பக்கங்கள் கொண்ட இந்நூலில் தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் - அம்பேத்கர் மற்றும் தலித் இயக்கங்கள் குறித்த சிறப்பான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அம்பேத்கரின் முக்கியப் புகைப்படங்களும் இடம் பெற்றுள்ள இந்நூலின் விலை : ரூ. 150

வெளியீடு : 'பெரியார் ஊழி', 19, முருகப்பா தெரு, சென்னை - 5

பேசி : 2852 2862




## ஆதாரங்களின் அணிவகுப்பு




**நூல் :** உருவாகாத இந்தியத் தேசியமும் உருவான இந்து பாசிசமும்

**ஆசிரியர் :** பழ. நெடுமாறன்

**வெளியீடு :** தமிழ்க் குலம் பதிப்பாலயம், 33, நரசிம்மபுரம், மயிலை, சென்னை - 4

பேசி : 2464 0575

*பக் :* 800 ● *விலை :* ரூ. 350

இந்தியத் தேசியமும், இந்து தேசியமும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகும். இந்தியத் தேசியத்தை உருவாக்க முனைந்த தலைவர்கள் பலரும், இந்து (ஜாதி) பண்பாட்டைதான் இந்தியப் பண்பாடு எனப் பிரச்சாரம் செய்தனர். இந்து பண்பாடு என்பது, மிகச் சிறுபான்மையினராக இருக்கும் பார்ப்பனர்களின் பண்பாடுதான். ஆனால், இந்நாட்டின் பெரும்பான்மை மக்களான - தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களை 'இந்துக்கள்' என்று நம்ப வைப்பதில் பார்ப்பனியம் இன்றளவும் வெற்றி பெற்று வருகிறது. இதன் மூலம் சிறுபான்மை மக்களையும் 'இந்து பெரும்பான்மை' (பயங்கரவாதம்) என்ற மாயை மூலம் அச்சுறுத்துகிறது. எனவே, பெரும்பான்மை மக்களுக்கு எதிரான 'இந்து பண்பாட்டை' வேரறுக்க, எண்ணற்ற ஆதாரங்களின் அணிவகுப்புடன் அனைவரையும் போராட்டத்திற்கு அழைக்கிறது இந்நூல்.



படிப்பகம்

www.padippakam.com



நீதிபதி ஆர்.ஆர். போலே, போலே, என். சிவராஜ், டாக்டர் அம்பேத்கர்,
டி.ஜி. ஜாதவ் - தலைவர், மக்கள் கல்விக் கழகம் மற்றும் ரயில்வே உயர் அதிகாரிகள்

அண்ணல் அம்பேத்கர் வெளியிட்ட

# தேர்தல் அறிக்கை

வாக்களிப்பதற்கு முன் சிந்திக்க வேண்டும் என்று எண்ணும் - இந்தியாவின் அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும். தன் நலனைவிட, பொதுநலனே முக்கியம் என்பதை நம்பும் - இந்தியாவின் அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும்.

பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு (Scheduled Castes Federation), பட்டியல் சாதியினருக்காக நிறுவப்பட்ட அகில இந்திய அரசியல் கட்சியாகும். இனி வரும் பக்கங்களில் அதன் கோட்பாடுகள், கொள்கை, செயல் திட்டங்கள், பிற அரசியல் கட்சிகளுடனான ஒருங்கிணைப்பு குறித்த அடிப்படைகள் ஆகியவற்றை விளக்க முற்பட்டிருக்கிறோம்.

சென்ற இதழின் தொடர்ச்சி

### II புதிய பிரச்சினைகள்

20. இதுவரை, ஆங்கிலேயர் இந்திய வில் விட்டுச்சென்ற பழைய பிரச்சினை களை எப்படிக் கையாளுவது என்பது குறித்துப் பட்டியல் சாதியினர் கூட்டமைப் பின் நிலைப்பாட்டைக் கண்டோம். சுதந் திரத்திற்குப் பிறகு புதிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன. அவை இரண்டு வகை யானவை :

(அ) உள்ளாட்சி நிர்வாகப் பிரச்சினை கள் மற்றும்

(ஆ) வெளிநாட்டு உறவுகள் குறித்த பிரச்சினைகள்

**அ - உள்ளாட்சி நிர்வாகப் பிரச்சினைகள்**

21. உள்ளாட்சி நிர்வாகப் பிரச்சினை களில் முக்கியமானவை :

(1) மொழிவழி மாகாணங்களின் பிரச்சினை

(2) நிர்வாகத்தில் தூய்மை குறித்த பிரச்சினை

(3) கறுப்புச் சந்தை மற்றும் கட்டுப் பாடு பிரச்சினைகள்

(4) பணவீக்கம் மற்றும் விலைவாசி உயர்வால் ஏற்படும் தொய்வி னால் ஏற்படும் பிரச்சினைகள்

22. மொழிவழி மாகாணங்களின் பிரச் சினை, மிகுந்த அவசரத் தன்மையுடையது. சென்னை, மத்தியப் பிரதேசம், பம்பாய் ஆகிய இடங்களில் மொழிவழி குழுக்களி டையே நடைபெறும் மோதல்கள், ஜன நாயகத்தையே செயல்பட விடாமல் முடக்கிவிட்டன. முற்றிலும் அரசியல் முக்கியத்துவங்களுக்காக நமது அரசியல் சட்டம் செயல்பட வேண்டுமெனில் மொழிவழி குழுக்களிடையே சமூக அமைதி நிலவ வேண்டும். இதற்கு மொழி வழி மாநிலங்களை ஏற்படுத்துவதே ஒரே தீர்வாக இருக்க முடியும். மொழிவழி மாநிலங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதைக் கூட்டமைப்பு வலியுறுத்தும்.



படிப்பகம்

www.padippakam.com

23. நிர்வாகத்தில் காங்கிரஸ்தான் ஊழலை உருவாக்கியது எனப் பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு நம்புகிறது. ஊழல்வாதிகளைத் தண்டிப்பதில் காங்கிரசுக்கு உடன்பாடு இல்லை. ஒரு மாநிலத்தில் அல்ல, பல மாநிலங்களில் உள்ள காங்கிரஸ் அமைச்சர்களின் ஊழல்கள் குறித்து, காங்கிரஸ் உறுப்பினர்களே குற்றச்சாட்டுகளை எழுப்பியுள்ளனர். இதன் மீது ஒரு விசாரணையை மேற்கொள்வதைக்கூட காங்கிரஸ் மேலிடம் அவசியமாகக் கருதவில்லை. இந்த குற்றச்சாட்டுகள் மீது விசாரணை நடத்தி தவறு செய்தவர்களைத் தண்டிப்பதை விட்டுவிட்டு, காங்கிரஸ் மேலிடம் அக்குற்றச்சாட்டுகளை எழுப்பியவர்களை அடக்கி, அதன் மூலம் தவறு செய்தவர்களுக்கும், நேர்மையற்றவர்களுக்கும் வெளிப்படையாகவே பாதுகாப்பு அளிக்கிறது. மேலே உள்ள அமைச்சர்களே ஊழல் செய்யும்போது, அவர்களுக்கு கீழே உள்ள அதிகாரிகள் எவ்வாறு ஊழலற்றவர்களாக இருக்க முடியும்? ஊழலில் ஈடுபடும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக, கூட்டமைப்பு உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ளும். அதன் மூலம், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்ட நிர்வாகத் தரத்தை மேம்படுத்தும்.

24. காங்கிரசுக்கும் பெரு முதலாளிகளுக்கும் உள்ள நெருக்கமான தொடர்பே, பொருட்கள் கட்டுப்பாடு மற்றும் கறுப்புச் சந்தை பிரச்சினைக்குக் காரணமாகும். காங்கிரசின் தொடக்க காலம் முதல் அதற்குப் பெரு முதலாளிகளே நிதியுதவி அளித்து வந்தனர். அத்தகு பெருமுதலாளிகளின் ஆதரவிலேயே காங்கிரஸ் வளர்ந்து வந்துள்ளது. அண்மையில் உத்தரப் பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளின் மூலம், காங்கிரசிற்கும் பெருமுதலாளிகளுக்கும் இடையிலான அந்தத் தொடர்பு தொடரும் எனத் தெரிகிறது. தேர்தல் நிதிக்காக பெரு முதலாளிகளுக்கு அதிகாரத்தை வழங்க காங்கிரஸ் தயாராக உள்ளது. காங்கிரஸ் தேர்தலை சந்திக்க பெரு முதலாளிகள் உதவுவதன் மூலம் அதிகாரத்தை விலை கொடுத்து வாங்கத் தயாராக உள்ளனர்.

இதற்கானத் தீர்வு வாக்காளர்களின் கைகளில் உள்ளது. வாக்காளர்கள் பெரு முதலாளிகளின் பின்புலத்தில் உள்ள வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிக்கப் போவதில்லை என முடிவெடுத்தால், இந்தப் பிரச்சினை தீர அது பெரிதும் உதவும். பெரு முதலாளிகளிடமிருந்து வெகுவாக விலகி நிற்கும் கூட்டமைப்பு, நாட்டின் அரசாங்கத்தைப் பெரு முதலாளிகளின் கையில் ஒப்படைத்து விடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கும்.

25. பணவீக்கப் பிரச்சினை நிரந்தரமாகிவிட்டதாகத் தோன்றுகிறது. அது மக்களின் வாழ்வை நாசப்படுத்துகிறது. அதற்கு அளிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் தரப்படவில்லை. இதற்கான உடனடித் தீர்வை கூட்டமைப்பு வலியுறுத்தும்.

### ஆ - வெளிநாட்டு உறவுகள் குறித்த பிரச்சினைகள்

26. இந்தியா விடுதலை பெற்ற அன்று, அனைத்து நாடுகளும் இந்தியாவிற்கு நண்பர்களாக இருந்து இந்தியாவிற்கு வாழ்த்து தெரிவித்தன. ஆனால், இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. இந்தியாவிற்கு நண்பர்களே இல்லை. எதிரிகளாக இல்லாவிட்டாலும் எல்லா நாடுகளும் இந்தியாவிற்கு எதிர் நிலையிலேயே உள்ளன. இந்த நேர் எதிரான மாற்றத்திற்கு காங்கிரஸ் அரசின் வெளியுறவுக் கொள்கையே காரணமாகும். காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாடு; கம்யூனிச சீனாவை அய்க்கிய நாடுகள் அவையில் இடம்பெறச் செய்வது; கொரியப் போர் ஆகியவற்றில் இந்தியாவின் நிலைப்பாடுகளாலேயே கடந்த மூன்று ஆண்டுகளில் வெளிநாடுகளின் கண்ணோட்டம் மாறியிருக்கிறது.

27. காஷ்மீர் பிரச்சனையில் காங்கிரஸ் அரசு கடைப்பிடிக்கும் கொள்கையில், பட்டியல் சாதியினர் கூட்டமைப்பிற்கு உடன்பாடு இல்லை. இந்தக் கொள்கை தொடரும் எனில், இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையே நிரந்தரப் பகைமை ஏற்படுவதோடு, இரு நாடுகளுக்குமிடையே போர் மூளவும் கூடும். பட்டியல் சாதியினர் கூட்டமைப்பைப் பொறுத்த வரையில், இரு நாடுகளின் நன்மைக்காக இரு நாடுகளும் நல்ல, நட்பான அண்டை நாடுகளாக விளங்க வேண்டும் எனக் கருதுகிறது. இந்த நோக்கத்திற்காக, பாகிஸ்தான் குறித்த கொள்கை என்பது இரண்டு அடிப்படைகளைக் கவனத்தில் கொள்வதாக இருக்க வேண்டும்.

(1) பிரிவினை குறித்த எந்த ஒரு பேச்சும் இருக்கக் கூடாது. பிரிவினை முடிந்து போன ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அப்பிரச்சனை மீண்டும் விவாதிக்கப்படாமல், இரு நாடுகளும் இரண்டு தனியான குடியரசுகளாகக் கருதப்பட வேண்டும் (2) காஷ்மீர் பிரிக்கப்பட்டு - இசுலாமியப் பகுதி பாகிஸ்தானுக்குப் போக வேண்டும். (இது பள்ளத்தாக்கில் வாழும் காஷ்மீரிகளின் விருப்பத்தின் பேரில் செயல்படுத்தப்பட வேண்டும்). இந்தியாவிற்கு இசுலாமியர்கள் அல்லாதவர்கள் வாழும் ஜம்மு மற்றும் லடாக் பகுதிகள் வர வேண்டும்.

28. இந்தக் கொள்கை இரு நாடுகளுக்கிடையே ஒரு நட்புறவை ஏற்படுத்த சிறந்த வாய்ப்பை அளிக்கும். அதனால், பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு இதனை ஒப்புக் கொள்ள வலியுறுத்தும்.

> காஷ்மீர் பிரச்சனையில் காங்கிரஸ் அரசு கடைப்பிடிக்கும் கொள்கையில், பட்டியல் சாதியினர் கூட்டமைப்பிற்கு உடன்பாடு இல்லை. இந்தக் கொள்கை தொடரும் எனில், இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையே நிரந்தரப் பகைமை ஏற்படுவதோடு, இரு நாடுகளுக்குமிடையே போர் மூளவும் கூடும்.

29. நமது வெளிநாட்டுக் கொள்கையில் பிற நாடுகள் நம்மை எதிரியாகக் கருத காரணமான மற்றொரு பிரச்சினை சீனா பற்றியதாகும். அய்க்கிய நாடுகள் அவையின் நிரந்தர உறுப்பினராக சீனா ஆவதற்கு இந்தியா போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இது ஒரு அசாதாரணமான செயலாகும். தனக்கானப் போராட்டத்தை நடத்தும் வலிமை சீனாவிற்கே இருக்கும் போது, இந்தியா ஏன் சீனாவிற்காகப் போராட வேண்டும்? கம்யூனிச சீனாவிற்காக இந்தியா எடுத்திருக்கும் இந்த நிலைப்



படிப்பகம்

www.padippakam.com

பாடே, அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையே ஏற்பட்டுள்ள பிளவிற்குக் காரணம். இதனால் அமெரிக்காவிடமிருந்து இந்தியா எவ்விதப் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவிகளையும் பெற இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

30. நாம் ஆங்கிலேயே ஆட்சிக்கு உட்பட்ட அரசதிகாரத்தை மறுத்தோம். நாம் சுதந்திர நாடாகி விட்டோம். தொடர்ந்து, பிரித்தானிய காமன் வெல்த் நாடுகளின் கூட்டமைப்பில் உறுப்பினராக இருக்க ஒப்புக் கொண்டோம். இருப்பினும், பிற நாடுகளுடனான நமது உறவு, நட்பு முறையில் இல்லை.

31. நம்முடைய வெளிநாட்டுக் கொள்கையில், முதலாளித்துவத்திற்கும் நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கும் இடையே வேறுபாடுகளைக் காண நம்மால் இயலவில்லை. முதலாளித்துவத்தை விரும்பாதிருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால்,

இந்திய அரசின் மொத்த வருமானம் 350 கோடி ரூபாய். இதில் கிட்டத்தட்ட 50 சதவிகிதத்தை அல்லது ஆண்டுக்கு ஏறத்தாழ 180 கோடி ரூபாய் ராணுவத்திற்காக செலவிடப் படுகிறது. பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும் மக்களைக் கொண்ட ஒரு நாட்டில், ராணுவத்தின் மீதான இந்த செலவு மிகவும் ஆடம்பரமானதாகும்.

நாடாளுமன்ற ஜனநாயகம் பலவீனமடைந்து சர்வாதிகாரம் வளர உதவிடும் சூழல் ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்ளவும் வேண்டும். இல்லை எனில், ஆற்றில் மூழ்கும் குழந்தையைக் காப்பதற்காக, அதை எடுத்து சேற்றில் எறிவது போலாகி விடும்.

32. இந்தியாவின் முதல் கடமை தனக்கு உண்மையாக இருப்பதே. அய்க்கிய நாடுகள் அவையில் கம்யூனிச சீனாவை நிரந்தர உறுப்பினராக்கப் போராடுவதற்கு பதில், அய்க்கிய நாடுகள் அவையின் நிரந்தர உறுப்பினராகத் தான் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்தியா போராட வேண்டும். அதற்குப் பதிலாக சியாங்காய் ஷேக்கிற்கு எதிராக மாவோ நடத்தும் போராட்டத்தை இந்தியா நடத்துகிறது. எல்லோருக்கும் நல்லவராக இருந்து உலகை காக்க நினைக்கும் இந்தக் கொள்கை, இந்தியாவை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லப் போகிறது. இந்த தற்கொலை கொள்கை, கூடிய விரைவிலேயே இந்தியா மீது எதிர் விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது. ஆசிய நாடுகளின் வளர்ச்சிக்குப் போராடும் முன், இந்தியா தனது ஒவ்வொரு நரம்பிலும், ஒவ்வொரு செயலிலும், தன்னை வலிமையாக்கிக் கொள்ள வேண்டிய உதவிகளை முதலில் பெறப் போராட வேண்டும். பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு வலியுறுத்தும் வெளிநாட்டுக் கொள்கை இதுவாகத்தான் இருக்கும்.

### III வளங்கள் குறித்த கேள்விகள்

33. திட்டமிடுதல் என்பது வெறும் வார்த்தைகளோ, சிந்தனைகளோ மட்டும் அல்ல. திட்டங்களை செயல்படுத்த வேண்டுமெனில், அதற்கான பொருளாதார வழிமுறைகளைக் காண வேண்டும். செயல்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான நிதி ஆதாரங்களைக் காட்டாமல் கட்சியின் செயல் திட்டங்களை யாரும் பொருட்படுத்த மாட்டார்கள்.

34. கூட்டமைப்பின் திட்டங்களை செயல்படுத்துவதற்குத் தேவையான தொகை குறைந்தது அல்ல என்ற போதும் சமாளிக்க முடியாதது அல்ல. பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு, நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்க கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பரிந்துரைக்கிறது :

(1) ராணுவ செலவினங்களைக் குறைத்தல்

(2) உப்பு மீது மீண்டும் வரி விதித்தல்

(3) மதுவிலக்கு ஒழிக்கப்படுவதன் மூலம் கலால் வருமானத்தை அதிகரித்தல்

(4) காப்பீடு தொழிலை தேசியமயமாக்குதல்

35. இந்திய அரசின் மொத்த வருமானம் 350 கோடி ரூபாய். இதில் கிட்டத்தட்ட 50 சதவிகிதத்தை அல்லது ஆண்டுக்கு ஏறத்தாழ 180 கோடி ரூபாய் ராணுவத்திற்காக செலவிடப்படுகிறது. பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும் மக்களைக் கொண்ட ஒரு நாட்டில், ராணுவத்தின் மீதான இந்த செலவு மிகவும் ஆடம்பரமானதாகும். இந்த அறிக்கையில் பரிந்துரைத்தபடி காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி, அதன் மூலம் வெளிநாடுகளுடன் நட்புறவை வளர்த்துக் கொண்டால், ராணுவ செலவுகளை ஆண்டுக்கு 50 கோடி வரையில் குறைப்பதில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.

36. உப்பு வரி மீண்டும் விதிக்கப்படாததற்கு எந்தக் காரணமும் இல்லை. உப்பு வரி நீக்கப்பட்டது வெறும் உணர்ச்சி வசப்பட்ட முடிவாகும். அது உப்பின் விலையைக் குறைக்கவில்லை. மாறாக, உப்பு மிகவும் அரிதான பொருளாகி விட்டது. இதனால் விளைந்த ஒரே பலன், ஆண்டுக்கு ஏறத்தாழ 11 கோடி ரூபாய்கள் பெற்றுத் தந்த ஒரு நிதி ஆதாரத்தை அரசு இழந்து விட்டது. இது, நாட்டின் வளர்ச்சியைப் பெருமளவில் முடக்கி இருக்கிறது. ஆண்டுக்கு



நாசிக்கில் உள்ள காலராம் கோயில் நுழைவுக்காக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது - கெய்க்வாட் மற்றும் டாக்டர் அம்பேத்கர்



படிப்பகம்

www.padippakam.com

30 கோடி ரூபாய் ஈட்டித் தரும் அளவிற்கு வரி விதித்தால்கூட, அதனால் மக்களுக்கு எந்தவித பாதிப்பும் இருக்காது.

37. மதுவிலக்கு முட்டாள்தன மானது. அது உடனடியாக ஒழிக் கப்பட வேண்டும். ஏனெனில், அது தடுக்க நினைத்த கேடுகளை விட, அதனால் விளைந்த கேடுகளே அதிகம். சாராயம் காய்ச்சுதல் ஒரு குடிசைத் தொழிலாகி விட்டது. முன்பு ஆண்கள் மட்டுமே மது அருந்தினர். தற்போது பெண்களும் குழந்தைகளும்கூட மது அருந்துகின்றனர். ஏனெனில், அது அவர்கள் கண் முன்பு வீடுகளில் தயாரிக்கப்படுகிறது. அடித்தட்டு மக்களிடையே பண்பாட்டுச் சீரழிவையும், கூடுதலான குற்றச் செயல் களையும் இது ஏற்படுத்தியுள்ளது.

நம்முடைய வெளிநாட்டுக் கொள்கையில் முதலாளித்துவத்திற்கும், நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கும் இடையே வேறுபாடுகளைக் காண இயலவில்லை. முதலாளித்துவத்தை விரும்பாதிருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், நாடாளுமன்ற ஜனநாயகம் பலவீனமடைந்து, சர்வாதிகாரம் வளர உதவிடும் சூழல் ஏற்பட்டுவிடக் கூடாது.

38. அரசின் வளங்களைப் பாதுகாப்பது என்ற நோக்கில் இது பெரும் வீண் ஆகும். பகுதி 'அ' மாநிலங்களில் 1945-46 ஆண்டில் கிடைத்த கலால் வரி வரவு 51.67 கோடி ரூபாய். 1950-51இல் 25.23 கோடி. 1951-52 இல் 24.95 கோடி எதிர் பார்க்கப்படுகிறது. 1945-46 ஆம் ஆண்டிற்கான தொகை, பிரிக்கப்படாத பஞ்சாப் மற்றும் வங்காளத்தை உள்ளடக் கியது. பகுதி 'அ' மாநிலங்களில் மதுவிலக்கினால் ஏற்பட்ட இழப்பு, ஆண்டுக்கு 25 கோடி ரூபாய் ஆகும். இது, மது விலக்கு ஒழிக்கப்பட்டால் கிடைத்திருக்கக் கூடிய வரு மானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாத நிலையில் ஆகும்.

39. பம்பாய்க்கு 1946-47இல் கிடைத்த கலால் வரு மானம் 9.74 கோடி ரூபாய். 1950-51இல் 1.20 கோடி மற்றும் 1951-52-க்கான எதிர்பார்ப்பு 1.05 கோடி. ஆக, கலால் வரு மானத்தில் இழப்பு ஏறத்தாழ ஆண்டிற்கு 8.7 கோடி ரூபாய்.

40. சென்னைக்கு 1945-46இல் கிடைத்த கலால் வரு மானம் 16.80 கோடி ரூபாய். 1951-51இல் அது 50 லட்சமாக குறைந்தது. 1951-52-க்கான எதிர்பார்ப்பு 36 லட்சம். ஆக, மதுவிலக்கினால் ஏற்பட்ட இழப்பு 16 கோடி ரூபாய்.

41. உத்திரப் பிரதேசத்தில் 1947-48 இல் 7.06 கோடி ரூபாய் கலால் வருமானம். 1950-51இல் அது 5.93 கோடியாக இருந்தது. 1951-52-க்கான எதிர்பார்ப்பு 5.84 கோடி. இழப்பு 1.2 கோடி.

42. மத்தியப் பிரதேசம், பஞ்சாப் மற்றும் வங்காளத் திலும் கலால் வருமானத்தில் சரிவு காணப்படுகிறது.

43. மும்பை மற்றும் சென்னையில் மட்டும் கலால் வருமானத்தில் ஏற்பட்டிருக்கும் இழப்பு, ஏறத்தாழ 25 கோடி ரூபாயாகும். ஏறத்தாழ அதே அளவுதான் பகுதி 'அ' மாநிலங் களின் ஒட்டுமொத்த கலால் வருமான இழப்பாகும்.

44. இந்தப் புள்ளி விவரங்கள் முழுமையானவை அல்ல. இவற்றில் பகுதி 'ஆ' மாநிலங்களைப் பற்றிய தகவல்கள் இல்லை. ஏனெனில், அவ்வை கிடைக்கவில்லை. மேலும் மது விலக்கை நடைமுறைப்படுத்து வதற்காக செய்யப்படும் செல வினங்கள் குறித்தும் எந்தத் தக வலும் இல்லை.

45. சமபங்கு என்ற நோக்கி லும் மதுவிலக்கு நியாயமற்றதே யாகும். மதுவிலக்கிற்கான செல வினங்கள் பொது மக்கள் மீதே விழுகின்றன. ஒன்று அல்லது இரண்டு லட்சம் திருத்தப்பட இயலாத குடிகாரர்களைத் திருத்து வதற்கான செலவை, ஏன் பொது மக்கள் ஏற்க வேண்டும்? மக்களின் பிற தேவைகளான கல்வி, குடியிருப்பு, சுகாதாரம் போன்றவற்றிற்கு வழி இல் லாத நிலையில், ஏன் பொது மக்கள் மதுவிலக்கிற்கான செலவை ஏற்க வேண்டும்? ஏன் அந்தப் பணத்தை வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது? யாருக்கு கூடுதல் முக்கியத்துவம் - குடிகாரருக்கா? பசியால் வாடுபவருக்கா? சிந்திக்க வேண்டிய கேள்விகள் பல உள்ளன. ஆனால், அவற்றிற்கு வறட்டுப் பிடிவாதத்தைத் தவிர வேறு எந்த பதிலும் இல்லை. என்ன நடந்தாலும் மது விலக்கு கொள்கை மாற்றப்பட வேண்டும். மக்கள் பணம் இப்படித் தேவையற்று செலவிடப்படுவது நிறுத்தப்பட வேண்டும். அதற்குப் பயன்படுத்தப்படும் வளங்கள், பொது நலனை மேம்படுத்தப் பயன்படுத்தப்பட வேண்டும்.

46. காப்பீடு தொழிலை தேசியமயமாக்குதல் என்பதில், கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் மூலம் அதுதான் மிகுந்த வரு மானத்தை ஈட்டக்கூடிய தொழில் என்பதைக் காணலாம்.

| | |
|---|---|
| 1950 ஆம் அண்டு காப்பீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்பீட்டாளர்கள் | 339 |
| 1949 ஆம் ஆண்டில் மொத்த ஆயுள் காப்பீடு செய்து கொண்டவர்கள் | 33,03,000 |
| காப்பீட்டுத் தொகை | 7,39,49,00,000 |
| 'பிரிமியம்' மூலம் ஆண்டு வருமானம் | 37,18,00,000 |
| அரசு பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டத் தொகை | 8,64,16,000 |
| நிர்வாக செலவினங்கள் 'பிரிமியம்' வருமானத்தில் | 29.2 சதவிகிதம் |

47. மேற்கண்ட தகவல்களின் மூலம் ஓராண்டில் காப் பீட்டு நிறுவனங்களிடம் உள்ள தொகை 37 கோடி என்பது தெரிகிறது. வங்கி வைப்பைப் போல, இது கேட்டால் கிடைக் கும் வைப்பு நிதி அல்ல. அதனால் அவை நீண்டகால வளர்ச் சித் திட்டங்களில் முதலீடு செய்யப்படலாம். காப்பீட்டு நிறுவனங்கள் அரசு பத்திரங்களில் தங்கள் பணத்தை முதலீடு செய்கின்றன என்பது உண்மைதான். அந்த அடிப் படையில் இறுதியில் காப்பீட்டு நிதி அரசுக்கே வந்து சேர் கிறது என்று கூறலாம். ஆனால், காப்பீட்டு நிறுவனங்களை தேசியமயமாக்குவதற்கு இது சரியான பதில் அல்ல.



படிப்பகம்

www.padippakam.com



1950 ஆம் ஆண்டு நடைபெற்ற டாக்டர் அம்பேத்கரின் பிறந்த நாள் விழா

ஏனெனில், அரசு பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கும் தொகை மிகவும் குறைவானது : 37 கோடியில் வெறும் 9 கோடி மட்டுமே. இரண்டாவதாக, இந்த பத்திரங்களுக்கு அரசு வட்டி செலுத்த வேண்டும். அது வரி செலுத்துபவர்கள் மீதான தேவையற்ற கூடுதல் சுமையாகும். மூன்றாவதாக, பிரிமியம் வருமானத்தில் ஏறத்தாழ 29 சதவிகிதத்தை காப்பீட்டு நிறுவனங்கள் விழுங்கி விடுகின்றன. 1949 இல் இது 37 கோடியில் 11 கோடியாகும். இது, ஏற்றுக்கொள்ள முடியாத பண விரயமாகும். இவை அனைத்தையும் தேசியமயமாக்குதல் மூலம் தடுக்கலாம்.

48. பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு, காப்பீட்டுத் தொழிலை தேசியமயமாக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதோடு, அனைத்து அரசு மற்றும் தனியார் ஊழியர்களுக்கு காப்பீட்டை கட்டாயமாக்கும். கட்டாய காப்பீடு தனி நபர்களுக்கு பாதுகாப்பைத் தருவதோடு, அரசு நிதியைப் பெருக்கி, வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

49. சுருக்கமாக, கூட்டமைப்பின் திட்டப்படி நாட்டின் வளர்ச்சிக்கான நிதி ஆதாரங்கள் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | ராணுவ செலவினத்திலிருந்து | ரூ. 50 கோடி |
| 2. | உப்பு வரியிலிருந்து | ரூ. 30 கோடி |
| 3. | கலால் வரியிலிருந்து | ரூ. 25 கோடி |
| 4. | ஆயுள் காப்பீட்டிலிருந்து | தகவல் இல்லை |
| 5. | அரசு மற்றும் தனியார் ஊழியர்களுக்கு கட்டாயக் காப்பீட்டிலிருந்து | தகவல் இல்லை |

50. மேலே குறிப்பிடப்பட்ட நிதி ஆதாரங்கள், நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான நிதியைத் தரும் என்பதை உறுதியாக நம்பலாம்.

### IV பட்டியல் சாதியினர் கூட்டமைப்பிற்கும் பிற அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு

51. வெறும் அமைப்பு ஒரு கட்சியாகி விடாது. ஒரு கட்சி என்பது, கொள்கைகளால் பிணைக்கப்பட்ட மக்களின் அமைப்பு. ஒரு கட்சி, கொள்கையின்றி கட்சியாக செயல்பட இயலாது. ஏனெனில், கட்சியின் உறுப்பினர்களைப் பிணைப்பது கொள்கையைத் தவிர, வேறு எதுவும் இல்லை. கொள்கையற்ற கட்சி, ஒரு மாட்டுக் கொட்டகைப் போன்றதே. ஆகையால், தனது கொள்கைகளை வரையறுக்காத, அக்கொள்கை வழி நிற்கும் உறுதிமொழியை தனது உறுப்பினர்களிடம் பெறாத, கூட்டமைப்பின் கொள்கைகளுடன் முரண்படும் கொள்கைகள் உடைய - எந்தக் கட்சியுடனும் பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு இணைந்து செயல்படாது.

52. அரசியல் கொள்கைகள் மட்டும் போதாது. அக்கொள்கைகளின் வெற்றிதான் முக்கியம். அப்படியான கொள்கை வெற்றி என்பது, ஒரு கட்டுப்பாடான கட்சியின் மூலம்தான் சாத்தியமே ஒழிய, தனி மனிதர்களால் அல்ல. இந்தக் காரணங்களால் கூட்டமைப்பு தனித்துவமான காரணங்கள் இருந்தால் ஒழிய, எந்தக் கட்சியையும் சாராத சுயேச்சை வேட்பாளர்களை ஆதரிக்காது.

> பிற்படுத்தப்பட்டோர் விரும்பினால், 'பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு' தனது பெயரை 'பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் கூட்டமைப்பு' என மாற்றி, அதன் மூலம் இரு வகுப்பினரும் ஒரே பொது அமைப்பில் இணைந்து செயலாற்ற வழி வகுக்கத் தயாராக உள்ளது.

53. இரண்டாவதாக, பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருடன் இணைந்து செயல்பட விரும்புகிறது. ஏனெனில், அவர்களும் ஏறத்தாழ பட்டியல் சாதியினரின் நிலையிலேயே இருக்கின்றனர். கடந்த 20 ஆண்டுகளாக, பட்டியல் சாதியினர் கூட்டமைப்பினரின் அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகளால், பட்டியல் சாதிகள் பெற்றிருக்கக் கூடிய அரசியல் விழிப்புணர்வை, இந்த வகுப்பினர் போதுமான அளவு பெறவில்லை என்பது வருந்தத்தக்கதாகும்.

சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், பட்டியல் சாதியினர் ஆகியோரை நாட்டில் பெரும் அதிகாரம் படைத்தவர்களாக ஆக்கியிருக்கிறது. இதுவரையில், சிறுபான்மையினராக இருந்த சாதி இந்துக்கள், தங்களை நாட்டை ஆள்பவர்களாக ஆக்கியிருந்தனர். போதுமான விழிப்புணர்வு இல்லாத காரணத்தால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் பழங்குடியினரும், சிறுபான்மை சாதி இந்துக்களின் சதி வலையில் விழுந்து, அதனால் தாங்கள் அதிகாரம் படைத்தவர்களாக ஆவதற்குப் பதிலாக, அவர்களின் அடிமைகளாகத் தொடர்ந்து விடுவார்களோ என்பதுதான் - பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின் கவலையாகும்.

பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின் முதல் அக்கறை, இந்த வகுப்பினரை அவர்கள் சொந்தக் காலில் நிற்க



படிப்பகம்

www.padippakam.com

## ஈடு இணையற்ற தேர்தல் அறிக்கை!

அகில இந்திய பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின் (All India Scheduled Castes Federation) செயற்குழுக் கூட்டம், புது தில்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கரின் வீட்டில் 6.10.1951 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், தேர்தல் அறிக்கையைத் தயாரிக்க முடிவு செய்யப்பட்டது. இந்து மகா சபா, ஆர்.எஸ்.எஸ்., ஜன் சங் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் கூட்டணி வைத்துக் கொள்ளக் கூடாது என இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. பிற அரசியல் கட்சிகளுடன் கூட்டணி வைத்துக் கொள்வது குறித்து முடிவெடுக்க, டாக்டர் அம்பேத்கர், என். சிவராஜ் மற்றும் பாபுசாகேப் ராஜ்போஜ் ஆகியோர் அடங்கிய சிறப்புக் குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. மேலும், இச்சிறப்புக் குழுவே முறைப்படி அனைத்து முடிவுகளையும் மேற்கொள்ளும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டமைப்பு தயாரித்த இத்தேர்தல் அறிக்கை, ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. 7.10.1951 அன்று வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையை, இந்திய, மேற்கத்திய ஏடுகள் வரவேற்றன. இவ்வறிக்கை தனித்தன்மை வாய்ந்ததாகவும், ஈடு இணையற்ற ஒன்றாக இருப்பதாகவும், மிகவும் வெளிப்படையாக அமைந்திருப்பதாகவும் அவை குறிப்பிட்டிருந்தன.

*- பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு : 17, பகுதி : 1 பக்கங்கள் : 385 - 403*

வைப்பதேயாகும். அவர்கள் விரும்பினால், 'பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு' - தனது பெயரை 'பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் கூட்டமைப்பு' என மாற்றி அதன் மூலம் இரு வகுப்பினரும் ஒரே பொது அமைப்பில் இணைந்து செயலாற்ற வழி வகுக்கத் தயாராக உள்ளது. இதற்கு வாய்ப்பில்லை எனில், பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு அத்தகு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படத் தயாராக உள்ளது.

54. பிற அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில், பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின் நிலை எளிதாக வரையறுக்கத்தக்கது. பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு, இந்து மகாசபை அல்லது ஆர்.எஸ்.எஸ். போன்ற எத்தகைய பழமைவாதக் கட்சிகளுடனும் எந்த உறவும் வைத்துக் கொள்ளாது.

55. தனிமனித சுதந்திரம், நாடாளுமன்ற ஜனநாயகம் ஆகியவற்றை அழித்து, அந்த இடத்தில் சர்வாதிகாரத்தை நிலை நிறுத்துவதை தனது கொள்கையாகக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகள் போன்ற கட்சிகளுடன் - பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு, எந்த உறவும் வைத்துக் கொள்ளாது.

56. பட்டியல் சாதியினர் கூட்டமைப்பிற்கு மய்ய அதிகாரக் குவிப்பில் (Totalitarianism) நம்பிக்கை இல்லை. அதனால் ஏற்கனவே மய்ய அதிகாரக் குவிப்பை கொண்டிருக்கக் கூடிய பிற அரசியல் கட்சிகளை வளர விடாத எந்த அரசியல் கட்சியோடும் இணைந்து செயல்படாது.

57. அதே நேரத்தில் பல அரசியல் கட்சிகள் உருவாவதையும் பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு எதிர்க்கிறது. பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின் திட்டம், இரு கட்சிகள் அமைப்பே. அது மட்டுமே நிலையான தன்மையையும் தனி மனித சுதந்திரத்தையும் அளிக்க இயலும். இரு கட்சிகள் ஜனநாயக முறையை அமைக்க, கூட்டமைப்பு பாடுபடும். இருப்பினும், இந்தத் திட்டம் வரும் தேர்தலுக்கு முன் இருக்கக் கூடிய இந்தக் குறைந்த காலஅளவில் நிறைவேற்றக் கூடியது அல்ல. அதனால் தற்போதைக்கு தனிமனிதர்கள் அல்லாமல், ஒரே விதமான அடிப்படை அரசியல் கொள்கைகளைக் கொண்ட, பொதுவான அரசியல் நெறிமுறைகளைக் கொண்ட, ஆனால் தனது உள்ளாட்சியில் சுயாட்சியுடைய, பல அரசியல் கட்சிகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஓர் அகில இந்திய கட்சியை அமைத்து, ஒரு குழுவின் ஒப்புதலுடன் ஒரு பொதுவான ஒப்பந்தத்தில் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்து, கடமைப்பாட்டுடன் ஒருவருக்கொருவர் வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டும். சுருக்கமாக, கூட்டதிகாரக் கட்சியான பிரிட்டிஷ் தொழிலாளர் கட்சியைப் போன்றதாக அது இருக்க வேண்டும்.

58. கே.எம்.பி. கட்சி, சோசலிச கட்சி, நீதிக் கட்சி போன்ற கட்சிகளை உள்ளடக்கிய அத்தகு கூட்டதிகாரக் கட்சியின் உறுப்பினராக இருக்க, பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு தயாராக உள்ளது. அந்த கூட்டதிகாரக் கட்சியின் உறுப்புக் கட்சிகள், கீழ்க் காணும் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும் :

(1) அத்தகு கூட்டணிக்கு உட்பட்ட ஒவ்வொரு கட்சியும் அதனுடைய கொள்கைகளைத் தெளிவாக வரையறுத்திருக்க வேண்டும்.

(2) அந்தக் கட்சிகளின் கொள்கைகள் பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின் கொள்கைகளுக்கு முரண்பட்டதாக இருக்கக் கூடாது.

(3) கூட்டணியைக் கோரும் கட்சிகள் பட்டியல் சாதியினரின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு உதவ உறுதியளிக்க வேண்டும்.

(4) பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின் உள்கட்சி விவகாரங்களில் கூட்டமைப்பு சுதந்திரமாக செயல்பட அந்தக்கட்சி ஒப்புக்கொள்ள வேண்டும்.

(5) கூட்டதிகாரக் கட்சியின் உறுப்பினராக அங்கீகரிக்கப்படாத எந்த ஒரு கட்சியுடனும் உறுப்பினர் கட்சி எந்த உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது.

59. தேர்தலில் பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின் ஆதரவை நாடும் தனி நபர்கள், கூட்டமைப்பின் நட்பு உறுப்பினர்களாக ஆக வேண்டும். மேலும், கொள்கைகள், திட்டங்கள், நெறிமுறைகளை ஒத்துக் கொண்டு உறுதிமொழி அளிக்க வேண்டும்.

- முற்றும்

தமிழில் : **பூங்குழலி**

மதுவிலக்கு முட்டாள்தனமானது.
அது உடனடியாக
ஒழிக்கப்பட வேண்டும்.
ஏனெனில், அது தடுக்க நினைத்த
கேடுகளைவிட அதனால்
விளைந்த கேடுகளே அதிகம்.



படிப்பகம்

www.padippakam.com

# படுகொலைக்கு தலித் என்ற ஒற்றைக் காரணம்தான்!



## மேலவளவு வழக்கில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு

■ அய். இளங்கோவன்

கீழ்வெண்மணி, உஞ்சனை, விழுப்புரம் படுகொலைகளைப் போலவே மேலவளவு படுகொலையும் நமது நினைவுகளிலிருந்து மெல்ல மறையத் தொடங்கிவிட்டது. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடி, சாதிவெறியர்களின் கொடூரத் தாக்குதலுக்குப் பலியான மேலவளவு போராளிகள் சிந்திய ரத்தம், இப்போதும்கூட காய்ந்து விடவில்லை. பத்தாண்டுகள் உருண்டோடிவிட்டன. 'திமிறி எழுவோம், திருப்பி அடிப்போம்' என்றெல்லாம் முழக்கமிடும் தலித் அமைப்புகள் - கண்டன ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்தியதோடு நின்றுவிட்டன; வழக்கை நடத்தி, குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தருவதில் முனைப்புக் காட்டவில்லை.

மனித உரிமைகளுக்காகப் போராடி வரும் வழக்குரைஞர் ரத்தினம் மற்றும் அவரது தோழமை வழக்குரைஞர்கள் நீதிமன்றங்களில் போராடி, குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தந்துள்ளனர். கொலை நடந்த விதமும், வழக்கு நடந்த விதமும் திகிலூட்டக் கூடியதாக இருந்தது. சாட்சிகள் மிரட்டப் பட்டார்கள்; வழக்குரைஞர்களுக்கு கொலை மிரட்டல்கள் விடப்பட்டன. ஆட்சியாளர்களும் ஆதிக்க சாதி அரசு அலுவலர்களும் கொலையாளிகளைத் தப்புவிக்க நடத்திய முயற்சிகள், நாட்டின் நீதி முறையையே கேலிக்கூத்தாக்கின. இவற்றையெல்லாம் கடந்து, 18.4.2006 அன்று சென்னை உயர் நீதிமன்றம், கொலையாளிகள் 17 பேருக்கு ஆயுள் சிறை தண்டனையை உறுதி செய்தது.

புகைப்படங்கள்: பாலா



படிப்பகம்

www.padippakam.com

தேர்தல் பரபரப்புகளுக்கிடையிலும், கருத்துக் கணிப்பு களுக்கிடையிலும் கரைந்துபோன சென்னை உயர் நீதிமன்றத்தின் மேலவளவு படுகொலை தொடர்பான மேல் முறையீட்டின் மீதான மறுசீராய்வு மனுவின் மீதான தீர்ப்பு (18.4.2006) பற்றி தலித் தலைவர்களோ, தலித் வாக்குகளை அறுவடை செய்யத் துடிக்கும் திராவிடக் கட்சிகளோ, அதன் கூட்டணிக் கட்சிகளோ கிஞ்சித்தும் அக்கறை கொள்ள வில்லை.

மேலவளவு படுகொலையை விசாரித்த சேலம் அமர்வு நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்ட 40 பேரில் 17 பேருக்கு இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 302 மற்றும் 34இன் கீழ் ஆயுள் தண்டனை விதித்து, எஞ்சியுள்ள 23 பேரை விடுதலை செய்தது. மேலவளவு படுகொலையை விசாரித்த சேலம் அமர்வு நீதிமன்றம் கொலையுண்ட அறுவரும் தலித்துகள், காயமுற்ற மூவரும் தலித்துகள், எதிரிகள் 40 பேரும் சாதி இந்துக்கள்; குறிப்பாக, இருவரைத் தவிர 38 பேர் கள்ளர் சாதியைச் சார்ந்தவர்கள் என தனது தீர்ப்புரையில் குறிப்பிட்டி ருந்தும், எதிரிகள் அனைவர் மீதும் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989 பிரிவு 3 (2) (V) மற்றும் 3 (1) (x) இன் கீழ் குற்றச்சாட்டு கள் பதிவு செய்யப்பட்டிருந்தும், எவரும் சேலம் அமர்வு நீதி மன்றத்தால் இப்பிரிவுகளின் கீழும் தண்டிக்கப்படவில்லை என்பது, மிகவும் கவலை தருவதாகும்.

மேலும், விசாரணை நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றச் செயல் புரிவதற்காகச் சதித்திட்டம் தீட்டி னார்கள் என்றோ, குற்றம் புரிவதற்கான உள்நோக்கம் (Motive) மற்றும் எண்ணம் (Intention) அவர்களுக்கு இருந்தது என்றோ சொல்வதற்கில்லை எனவும் முடிவிற்கு வந்துள்ளது.

தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் 17 பேரும் தண்டனையை ரத்து செய்யக் கோரி குற்றவாளிகள் மேல்முறையீடும், இவ்வழக்கில் விடுதலை செய்யப்பட்ட 23 பேரின் விடுதலையை எதிர்த்து மீளவும், இவ்வெதிரிகள் மீது தொடக்கத் திலிருந்து விசாரணை செய்து தண்டனை வழங்க வேண்டுமெனக் கோரி காயம் பட்ட அரசுத் தரப்புச் சாட்சிகளான குமார், பெரியவர் மற்றும் மாயவர் ஆகியோரும் மறுசீராய்வு மனு தாக்கல் செய்திருந் தனர். சீராய்வு மனுதாக்கல் செய்தவர்கள் சார்பாக மூத்த வழக்குரைஞர் கோபிநாத்தும், வழக்குரைஞர் ரத்தினமும் வாதாடினார்கள்.

மேலவளவு படுகொலைக்குக் காரணம் என்ன? இதற்கு சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்புரையே தெளிவான காரணங்களைக் குறிப்பிட்டுள்ளது :

"குற்றமுறையிடுவோர் பட்டியல் சாதியினர். குற்றம் சுமத்தப் பட்டவர்கள் அம்பலக்காரர் சாதியைச் சார்ந்தவர்கள். அடிக்கடி இவ்விரு பிரிவினருக்கிடையே சிறு சிறு விஷயத்திற்குக்கூட சிறு சண்டைகளும் தகராறும் நடந்து வந்துள்ளன. இவ்வாறு சச்சரவுக் குள்ளான ஒரு பொருள் 1996இல் தமிழக அரசு மேலவளவை தனித் தொகுதியாக அறிவித்ததும், மேலவளவு கிராம ஊராட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவதுமாகும். இதனால் ஆத்திர மடைந்த அம்பலக்கார சாதியினர், எந்த ஒரு பட்டியல் சாதியினரும் / தலித்தும் ஊராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்று எச்சரிக்கை விடுத்தனர். 1996 வரை எதிரி 1 (அழகர் சாமி) இந்த ஊராட்சியின் தலைவராக இருந்துள்ளார். இத்தொகுதி தனித் தொகுதி யானவுடன் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டபோது, அம்பலக் காரர்களிடமிருந்து எதிர்ப்பு வருமென அஞ்சிய பட்டியல் சாதி யினர் எவரும் வேட்பு மனு தாக்கல் செய்யவில்லை" (பத்தி 12).

"இரண்டாவது முறையாகத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. பட்டியல் சாதி வேட்பாளர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப் படும் என்று அரசு கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில், முரு கேசன் (டி1) கிராமத் தலைவர் பதவிக்கு மனு தாக்கல் செய்தார். இச் செயலால் ஆத்திரமடைந்த சில விஷக்கிருமிகள், பட்டியல் சாதி யினர் சிலரின் வீடுகளுக்குத் தீயிட்டதால், மீண்டும் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது. அதன் பிறகு மூன்றாவது முறையாக தேர்தல் அறி விக்கப்பட்டது. இந்த முறையும் (இறந்துபோன நபர்) முருகேசன் மனு தாக்கல் செய்தார். அவருக்குப் போதிய பாதுகாப்பும் வழங்கப் பட்டது. தொடக்கத்தில் தேர்தல் அமைதியாகவே நடந்தது.

ஆனால், பின்னர் அம்பலக்கார மற்றும் கள்ளர் சாதியைச் சார்ந் தவர்கள் வாக்குப் பெட்டிகளைக் கைப்பற்றியதால் நிலைமை மோசமாகி, வாக்கு எண்ணிக்கை நடைபெற முடியாமல் போனதால் தேர்தல் ரத்து செய்யப் பட்டது. அதன் பின்னர் நான்காவது முறையாக சாதி ஆதிக்கமுள்ள இக்கிராமத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்டது. இம்முறையும்கூட (இறந்துபோன நபர்) முருகேசன் மனு தாக்கல் செய்து தேர்தலிலும் வெற்றி பெற்றார். அவர் பதவிப் பிரமாணம் எடுத்தபோதிலும் பட்டி யல் சாதியினர் தவிர்த்து பிற சாதியினரின் கடும் எதிர்ப்பு காரணமாக, அப்பதவியில் அமர முடியவில்லை. வாக்குப் பெட்டிகளைக் கைப்பற்றிய குற்றத்திற்காக ஏற்கெனவே எதிரிகள் பொன்னையா (எ3) செல்வம் (எ21) தண்டனை பெற்றிருந்ததால் அவர்கள் கோபமாய் இருந்தனர்" (பத்தி 12).

"விசாரணை நீதிமன்றம் எதிரிகளுக்கு குற்றச்செயல் புரிவதற்கு உள்நோக்கம், குற்றம் புரிய வேண்டுமென்ற எண்ணம் ஏதுமில்லை என்ற முடிவிற்கு வந்தது. ஆனால், அரசுத் தரப்பில் சொல்லப்பட்ட சாட்சி யங்கள் மூலம் இது முறியடிக்கப்படுகிறது" (பத்தி 13).

"மேலவளவு அக்கிரகாரம் கள்ளுக்கடைக்குப் பேருந்து வந்தவுடன் இரண்டாம் எதிரி துரைபாண்டி (எ2) பேருந்து ஓட்டு நரிடம் பேருந்தை நிறுத்தச் சொல்லி கூச்சலிட்டுள்ளார். பேருந்து நின்றவுடன் ஆயுதம் தாங்கிய எதிரிகள் அனைவரும் நாற்பதாவது எதிரி ராமர் (எ40) தலைமையில் பேருந்தைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் தலைவர் (டி1), துணைத் தலைவர் (டி2), இறந்து போன பிறர் மற்றும் காயமுற்ற சாட்சிகளைத் தாக்கியுள்ளனர். மேலே சொல்லப்பட்டுள்ள தொடர் நிகழ்வுகள் அனைத்தும் பலியாக்கப் பட்ட நிராயுத பாணிகள் மீது எதிரிகள் திட்டமிட்டே (Preplanned),

இந்த திட்டமிட்ட தாக்கு தலும், கொலையின் கொடூரத்தன்மையும் பட்டியல் சாதி மக்களை அச்சுறுத்தவே என்பதைத் தெளிவுபடுத்துவதுடன் அவர்கள் எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தால், என்ன விளைவுகள் ஏற்படும் என்ப தைப் பாடமாகக் காட்டவே என்பதும் புலனாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

முன்யோசனையோடு (Premeditated) தாக்கியுள்ளது அய்யத்திற்கிடமின்றி நிரூபிக்கின்றன" (பத்தி 13).

நாற்பது எதிரிகளில் எ5, எ6, எ19, எ25, எ26, எ28, எ30 மற்றும் எ40 ஆகியோர் பக்கத்து கிராமங்களிலிருந்து வந்த அம்பலக்கார சாதியினர். பிற எதிரிகளைப் போன்றே இவர்களும் ஆயுதம் வைத்திருந்துள்ளனர். இதிலிருந்து, பட்டியல் சாதியினருக்காகவே ஊராட்சி 'ரிசர்வ்' செய்யப்பட்டதன் விளைவாகவே இந்த நிகழ்ச்சி நடந்துள்ளது மட்டுமின்றி, தேர்தலில் போட்டியிடும் பட்டியல் சாதியினருக்கும் பிறசாதியினருக்கும் உள்ள பகைமை, மேலவளவு கிராமத்திற்குள் மட்டும் இல்லை என்பதும் தெளிவாகிறது" (பத்தி 13).

"சுத்துப்பத்து கிராமங்களில் இருந்து நிறைய எதிரிகள் ஆயுதம் தாங்கி வந்து பட்டியல் சாதியைச் சேர்ந்த தலைவரையும், வயது வந்தவர்களையும் குறிவைத்துத் தாக்கியுள்ள ஒட்டுமொத்த தாக்குதல், பட்டியல் சாதியினர் மீது திட்டமிட்ட, முன்யோசனையோடு குறிவைக்கப்பட்ட ஒன்று என்பது மிகத் தெளிவாகிறது. இந்தப் பேருந்து மிக நீண்ட தொலைவு பயணிக்கின்ற ஒன்று. ..... இரண்டாம் எதிரியின் மிரட்டலின் பேரில் வழக்கத்திற்கு மாறான இடத்தில் (மேலவளவு அக்கிரகாரம் கள்ளுக்கடை) நிறுத்தப்படுகிறது. பேருந்து நின்றவுடன் ஆயுதம் தாங்கிய எதிரிகள் பேருந்தைச் சூழ்ந்து கொள்கின்றனர். தெளிவான இத்தொடர் நிகழ்வுகளேதவறுக்கிடமின்றி திட்டமிட்டத்தாக்குதலிது எனக் காட்டுகின்றன" (பத்தி 13).

"கிடைக்கக் கூடிய அபரிமிதமான ஆதாரங்களின் அடிப்படையில் கற்றறிந்த அமர்வு நீதிபதி அவர்களின் முடிவுடன் ஒத்துப்போக முடியாத நாங்கள், அரசுத் தரப்பில் குற்ற நிகழ்வுக்கான உள்நோக்கத்தை (Motive) நிரூபித்துள்ளார்கள் என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது" (பத்தி 13).

"பட்டியல் சாதியினர், பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டப் பிரிவு 3 (2) (v) குற்றவாளிகள்பால் ஈர்க்கப்படுவதை அரசு தரப்பால் மிகத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் எந்தப் பின்னணியில் நடந்துள்ளது எனப் பார்க்க முடிகிறது. வழக்கமாக மேலவளவு ஊராட்சி பொதுத் தொகுதியாக இருந்துள்ளது. 1996இல் இந்த ஊராட்சி தனித் தொகுதியாக அறிவிக்கப்பட்டது. 1996-க்கு முன்னர் எ1 இந்த ஊராட்சியின் தலைவராக இருந்துள்ளார். இவ்வறிவிப்பு அம்பலக்கார சாதியினரால் விரும்பப்படவில்லை. அவர்கள் பட்டியல் சாதியைச் சார்ந்த ஒருவர் ஊராட்சித் தலைவராவதை விரும்பவில்லை. ஊராட்சித் தலைவராக ஒரு பட்டியல் சாதிக்காரர் ஆவதைத் தடுக்கவும் மீண்டும் இத்தொகுதியை பொதுத் தொகுதியாக ஆக்கவும் இவர்கள் முயன்றனர்.

> குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும், பாதிப்புக்குள்ளானவர்களுக்கும் தனிப்பட்ட பகைமை ஏதுமில்லை. எனவே, பாதிப்புக்குள்ளானவர்கள் தாக்கப்பட்டதற்கான ஒரே காரணம், அவர்கள் பட்டியல் சாதியைச் சார்ந்தவர்கள் என்பதைத் தவிர வேறெந்தக் காரணமுமில்லை.

மேலவளவு தொகுதியின் தன்மை மாற்றப்பட்டதையொட்டி, அய்ந்து பட்டியல் சாதியினர் கொலை செய்யப்பட்டது மற்றும் முருகேசன் கொடூரமாகவும் கோரமாகவும் கொலை செய்யப்பட்டது வரை நடந்த நிகழ்வுகளை எ1, 47, 48 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர். அவர்கள் அளித்த சாட்சியத்திலிருந்து, முதலில் இவ்வூராட்சிக்கு ஒரு பட்டியல் சாதியைச் சேர்ந்தவரைக் கொண்டு தலைவர் பதவியை நிரப்ப தேர்தல் விண்ணப்பங்கள் முடிவின்படி, எந்த ஒரு தலித்தும் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்று விடுக்கப்பட்ட அச்சுறுத்தலால், தலித்துகள் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்துள்ளனர்" (பத்தி 39).

"அரசுத் தரப்பு முதல் சாட்சியின் கூற்றுப்படி, அரசு அலுவலர்களின் ஆலோசனையின் பேரில் தலித்துகள் 9.10.1996 அன்று நடைபெறவிருந்த தேர்தலில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்ய ஊக்குவிக்கப்பட்டனர். அதன் பிறகு இறந்து போன டி1 முருகேசன், டி2 பூபதி, வையக் கருப்பன் உட்பட சில தலித்துகள் முடிவு செய்தவுடன் - இறந்துபோன டி3 சேவுகமூர்த்தி, அரசு சாட்சி 12 கஞ்சிவனம், பாண்டியம்மாள் ஆகியோருடைய வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அச்சத்தால் தலித் வேட்பாளர்கள் தங்களது வேட்பு மனுக்களை திரும்பப் பெற்றுக் கொண்டனர். இதனால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. தனித் தொகுதியான பிறகு 10.12.1996 அன்று ஊராட்சித் தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டன. டி1, டி3 மற்றும் கருப்பன் ஆகியோர் தங்களது வேட்பு மனுக்களைத் திரும்பப் பெற்றனர். அதனால் தேர்தல் ரத்து செய்யப்பட்டது.

28.12.1996 அன்று இரண்டாவது முறையாக தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டன. டி1 மற்றும் ஏழு நபர்கள் தலைவர்



தலித் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக மாவீரன் மேலவளவு முருகேசன் தன்னையே பணயம் வைத்தபோது



படிப்பகம்

www.padippakam.com

பதவிக்காக வேட்பு மனு தாக்கல் செய்தனர். அதே நாளில் நான்கு இடங்களில் அம்பலக்காரர் மற்றும் கள்ளர் சாதியினரால் வாக்குச் சாவடியைக் கைப்பற்றுதலும் கலவரமும் நடந்தது. இதில் ஈடுபட்ட எ3 மற்றும் எ21 ஆகியோர் குற்றம் புரிந்ததாகக் காணப்பட்டு தண்டிக்கப்பட்டனர். அதன் பிறகு தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் 31.12.1996 அன்று நடக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. அதே நாளில் நடந்த தேர்தலில் டி1 மற்றும் ஏழு நபர்கள் தேர்தலில் போட்டியிட்டனர்.

இறந்துபோன முருகேசன் தேர்ந்தெடுக்கப்பட்டார். டி2 மூக்கன் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இறந்து போன முருகேசன் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட பிறகு அலுவலகத்தில் நுழைய தடை செய்யப்பட்டதுமின்றி, தலைவருக்கான அலுவலகக் கடமைகளைச் செய்ய அம்பலக்காரர் சாதியினரால் அனுமதிக்கப்படவில்லை. இந்த சாதிக் கசப்பும் பகைமையும் நிறைந்த, வன்முறை ஊறிய வரலாற்றுப் பின்னணியில் டி1 தலை துண்டிக்கப்பட்ட, அய்வர் கொலை செய்யப்பட்ட சம்பவம் நடந்துள்ளது'' (பத்தி 40).

''தலித் சமூகத்தைச் சார்ந்தவர்களை அச்சுறுத்தவும், அவர்கள் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்கவும் குற்றம் சாட்டப்பட்ட குழுவால் இவர்கள் தாக்கப்பட்டுள்ளனர் - அதுவும் அவர்கள் ஒரு குறிப்பிட்ட சாதியைச் சார்ந்தவர்கள் என்பதால். இங்கே எதற்கு அழுத்தம் தரவேண்டியது என்றால், ஊராட்சித் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் தனியாக குறிவைக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளதே. கூடுதலாக இறந்துபோன ஏனையோரும் பட்டியல் சாதியைச் சார்ந்தவர்களே. அதைத் தவிர்த்து, காயமுற்றவர்களும் இதே சாதியைச் சார்ந்தவர்கள். அவர்கள் தலித்துகள் என்பதாலும், பட்டியல் சாதியினர் என்பதாலுமே குறிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த திட்டமிட்ட தாக்குதலும், கொலையின் கொடூரத் தன்மையும் பட்டியல் சாதி மக்களை அச்சுறுத்தவே என்பதைத் தெளிவுபடுத்துவதுடன் அவர்கள் எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தால், என்ன விளைவுகள் ஏற்படும் என்பதைப் பாடமாகக் காட்டவே என்பதும் புலனாகிறது. எனவே, எதை அம்பலக்காரர்கள் சட்டப்படி செய்ய முடியாதோ, அதைச் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு, வன்முறையில் ஈடுபடுவதன் மூலம் செய்ய முனைந்துள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் பாதிப்புக்குள்ளானவர்களுக்கும் தனிப்பட்ட பகைமை ஏதுமில்லை. எனவே, பாதிப்புக்குள்ளானவர்கள் தாக்கப்பட்டதற்கான ஒரே காரணம், அவர்கள் பட்டியல் சாதியைச் சார்ந்தவர்கள் என்பதைத் தவிர வேறெந்தக் காரணமுமில்லை என்பது, குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தரப்பிலிருந்தே தெரிய வருகிறது. இந்த வழக்கில் பட்டியல் சாதியினர் மீது தொடுக்கப்பட்டுள்ள வன்கொடுமைகள்பால் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989 பிரிவு 3 (2) (v) ஈர்க்கும். விசாரணை நீதிமன்றம் ஆவணங்களிலுள்ள நம்பக்கூடிய சாட்சியங்களையும் வாக்குமூலங்களையும் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களின் செயலானது இறந்துபோனவர்களைக் கொல்லமட்டுமின்றி, ஊராட்சித் தேர்தலில் போட்டியிடத் துணிந்தமைக்காக ஒட்டுமொத்த பட்டியல் சாதியினரை அச்சுறுத்தவும்கூட'' (பத்தி 41).



''அரசு தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டவர்களின் திட்டமிட்ட சதி நிரூபணமாகியுள்ளது என்று சொல்லியுள்ளோம். இக்குற்றச் செயலுக்கான உள்நோக்கத்தையும் அரசுத் தரப்பில் நிரூபித்துள்ளனர் என்ற முடிவிற்கு வந்துள்ளோம். கற்றறிந்த விசாரணை நீதிபதி மேற்சொல்லப்பட்டவற்றை ஏற்க மறுத்திருந்தாலும், அரசுத் தரப்பில் எந்தவித அய்யத்திற்கும் இடமின்றி 'சதி' (Conspiracy) மற்றும் உள்நோக்கம் நிரூபிக்கப்பட்டுள்ளது'' (பத்தி 51).

''குற்றம் சாட்டப்பட்டுள்ள அனைவர் மீதும் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989 பிரிவு 3 (1) (v) இன் கீழான குற்றம் புரிந்ததற்கான போதுமான ஆதாரங்கள் உள்ளன. ஆனால் கெடுவாய்ப்பாக, குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து (மாநில) அரசு மேல்முறையீடு செய்யவில்லை. அரசு தரப்புச் சாட்சிகள் 2, 5 மற்றும் 9 ஆகியோர் மட்டுமே மறுசீராய்வு (Criminal Revision) மனு தாக்கல் செய்துள்ளனர்'' (பத்தி 52).

''ஆயுள்தண்டனைபெற்றவர்கள்தங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து மேல்முறையீடும், இவ்வழக்கில் 23 நபர்கள் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து காயமடைந்த சாட்சிகள் மறுசீராய்வு (Criminal Revision) மனுவும் தாக்கல் செய்துள்ளனர். எனினும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து (மாநில) அரசு மேல்முறையீடு செய்யவில்லை.'' (பத்தி 6). ●

> குற்றம் சாட்டப்பட்டுள்ள அனைவர் மீதும் குற்றம் புரிந்ததற்கானப் போதுமான ஆதாரங்கள் உள்ளன. கெடுவாய்ப்பாக, குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப் பட்டதை எதிர்த்து (மாநில) அரசு மேல்முறையீடு செய்யவில்லை.

*- அடுத்த இதழிலும்*



படிப்பகம்

www.padippakam.com



# அம்பேத்கரின் ஆசான் புத்தர்

■ ஏபி. வள்ளிநாயகம்

III

சித்தார்த்தர் குடும்பம் மற்றும் இனக்குழுவின் பிடியிலிருந்து பிரிந்து, தன்னை ஒரு சமூக மனிதராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இது இத்துணைக்கண்ட வரலாற்றில் மானுடத்திற்கான மாபெரும் திருப்புமுனை ஆகும். சகமனிதர்களுக்கான சிந்தனை ஒளியே அவருடைய துறவற வாழ்வின் மீட்சியானது. அவர் மனித இன வாழ்வை சுதந்திரமாக - சமத்துவமாக - சகோதரத்துவமாக அமைப்பதற்கான மன எழுச்சியை இயற்கையிலிருந்தும், மனிதவாழ்வின் நேர்குண - எதிர்குண எல்லாவற்றிலிருந்தும் கற்றுக் கொண்டார். சித்தார்த்தரின் தனிப்பெரும் மனம் இயற்கை, மானுடம், உயிரினம் பற்றிய உணர்வுடன் செயல்பட்டதால்தான், அவர் சகமனிதர்களிலிருந்து தனித்துவமாகி நின்றார். அவர் ஒட்டுமொத்த மானுடத்தையும் தனது மனதிற்குள் நிரப்பிக் கொண்டு புதிய வெளியைக் கண்டறிந்தார்.

உடல், மனம், சிந்தனை, தீர்க்கம் ஆகியவை ஒரே புள்ளியிலிருந்து வேறுபடாதபடி பிணையும் விவேகத்தை அடைந்த அவர், தனிமனித வாழ்வுக்கும் - சமூக வாழ்வுக்கும் உருமாற்றம் செய்யும் மானுட மேன்மைக்கான நூதனப் பாங்கினைப் பெற்றார். புத்தர் தன் சமூக வாழ்விற்கானப் பயிற்சிகளையும் உத்திகளையும் தனிமனித - சமூக வாழ்வு இரண்டிற்கும் வழிவிடும் பாலமாக ஆக்கினார். அவருடைய மனம் ஒவ்வொரு வாழ் கணத்திலும் 'நான்' என்று பாவிக்கும் அகங்காரத்தை மறுதலித்து 'நாம்' என்று கருதும் சமூகப் பிராணிக்கான சுய அடையாளத்தை நிறுவ எத்தனித்தது.

சித்தார்த்தர், சிந்தனை உருவாக்கத்திற்கும் செயல்பாட்டிற்கும் முன் நிபந்தனையாக சுய விவாதங்களை மேற்கொண்டார். சுய விவாதங்களின் மூலம் தன்னை சிந்தனை ரீதியாகக் கற்பித்துக் கொண்ட அவர், புறகற்பித்தலுக்கு முன் நிபந்தனையாக சுய கற்பித்தல் மூலம் தன்னை வளர்த்தெடுத்துக் கொண்டார். சமூகத்தை நேசிப்போர் அடிப்படையாகக் கொள்ள வேண்டிய கட்டுமானச் சிந்தனை கைக்கூடிய பிறகுதான், சகமனிதருக்கு கற்பிக்க அவர் அணியமானார். சித்தார்த்தர், வேறுபடுத்துதல்களுக்கும் ஒதுக்கல்களுக்கும் ஒடுக்குதல்களுக்கும் அப்பாற்பட்ட சிந்தனை முறுக்கேறியவராய் மானுடத்திற்கு வரவானார்.

சித்தார்த்தரின் சிந்தனை அடர்த்தி நடைமுறைவீரியத்தைக் கொண்டிருந்தது. அவர் தன்னுடைய சிந்தனையின் வேர் ஆதாரத்தை மனிதர்களின் முரண்பாடுகளைத் தீர்க்கவே கொண்டிருந்தார். மானுடத் தேவைகளை மய்யமாகக் கொண்டுதான் அவருடைய சிந்தனைத் திரட்சி இருந்தது. மேலும், அவரது சிந்தனைகள் மானுடத் தேவைகளை மறு ஆய்வு செய்வதாகவும், சமூகத்தைப் புனரமைப்பு செய்வதாகவும் ஆனது. அது, சகமனிதர்கள் காதுகளில் கேட்டுக்கொள்வதற்கான ஒரு செய்தியாக மட்டுமல்ல; மாறாக செயல்படுவதற்கான வகையில் உயிரோட்டம் உள்ளதானது.

குறிக்கோளை எய்தியவர் எனப் பொருள்கொண்ட பெயரினைக் கொண்ட சித்தார்த்தர், முழுமையாய் விழிப்பு பெற்றவர் எனும் பொருளில் புத்தரானார். போதி சத்துவராகி, 'இவ்வாறு வந்து இவ்வழியே சென்றவர்' எனப் பொருள்படும் 'ததாகத'ரான புத்தர், இயற்கைக்கு அடித்தளமாக உள்ள விதிகளையே தம் அறிவுரைகளில்

விடுதலை இயக்க வேர்களும் விழுதுகளும் - 35



படிப்பகம்

www.padippakam.com

உள்ளடக்கினார்; மனிதர் ஒழுகுவதற்குரிய பாதைகளாக விரிந்தார். விழிப்படையும் நோக்கத்துடன் மனதை மானுடத்திற்காக ஒருங்குவிக்கும் முயற்சியில் வெற்றி பெற்றார். விழிப்படைவதற்குரிய வழியைப் பொருத்தமட்டில் - எல்லாவற்றையும் ஒடுக்கிய கடுந்தவம், எல்லாவற்றையும் விரும்பும் வாழ்க்கை என்ற இரு எல்லைகளுக்கும் பதிலாக, புத்தர்தனது பாதையை நடுநிலைப்பாதையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

புத்தர், வெறுப்பற்று வாழும் சுய நெறியாளுமைக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டார். கருணையால் இப்பிரபஞ்சத்தைத் தழுவினார். மற்றதன் இருப்புகளையெல்லாம் மனதார ஏற்றார். பார்ப்பனியம் கடவுளை மய்யப்படுத்தியதில், புத்தர் அறத்தை மய்யப்படுத்தினார். மனித வாழ்க்கைக்கு பிரபஞ்சம் எப்படியானதோ அப்படியானார் புத்தர். புத்தர் எண்ணங்களில் கவனமாகயிருந்து வார்த்தைகளை வெளியிட்டார். வார்த்தைகளில் கவனமாகயிருந்து செயல்களை உருவாக்கினார்; பழக்க வழக்கமாக்கினார். பழக்க வழக்கங்களில் கவனமாகயிருந்து அவைகளையே அறமாக்கினார். அறத்தில் கவனமாகயிருந்து மக்களுக்கான வாழ்க்கையை உருவாக்கினார். அறங்களே வாழ்க்கையை உருவாக்குகிறது என்பதில் முடிந்துபோனார்.

பிரபஞ்சம் என்பது ஒன்றோடொன்று உறவிலுள்ள பல்வேறு கூறுகளின் கூட்டு சராசரியன்றி வேறல்ல. முடிவற்றுப் பாய்ந்து செல்லும் ஆற்றல்களும் தோற்றங்களும் ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவமாய் மாறிக் கொண்டே உள்ளன. இத்தகைய பல்வேறு வாழ்வுகளின் தொகுப்பே இப்பிரபஞ்சம் என்பது புத்தருக்கு விளங்கியது. அவர் மாறாத சாரம் கொண்ட நிலையற்ற பொருளாக எதையும் பாவிக்கவில்லை. அனைத்தும் தோன்றிக் கொண்டும் உருப்பெற்றுக் கொண்டும் மாறிக் கொண்டுமே இருக்கும் என்பதை புத்தர் அறிவித்தார். மாற்றம் மட்டுமே மாறாதது என்பதே அவர் சிந்தனையின் உச்சமாகும்.

புத்தரின் சொந்த அனுபவத்தின் மூலம், சூழ்நிலைமைகள் மூலம் அவரறிந்த எண்ண ஓட்டங்களே 'தம்மம்' ஆனது. தம்மம் என்பது, மக்களின் சிந்தனைக்கான பொருளாகும். தம்மத்தைச் சார்ந்து இருத்தல், மானுட வாழ்க்கை நிமிர - உயர அதை நெம்பு கோலாக்குதல்,

**“ புத்தர் ஒளிபெற்ற அனுபவம் என்பது, கடவுளுடன் கட்டுண்டு பெற்றதல்ல. மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஆற்றல் ஏதுமின்றி, முழுக்க முழுக்க மனித முயற்சிகளால் கிட்டிய பேரனுபவம் ஆகும். ”**


தம்மத்தைச் சிந்தித்தல், தம்மத்தோடு சிந்தித்தல், தம்மத்தைக் கடந்து சிந்தித்தல் என்று பவுத்தம் பரிணாமம் பெறக் கூடியதாகும்.

புத்தர் தத்துவஞானி என்றோ, அறிஞர் என்றோ பீற்றிக் கொண்டதில்லை. தன் அனுபவங்களின் அடிப்படையில் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கான வழியைச் சொன்ன அவர், தன்னை சக தோழராகப் பாவிக்குமாறு கேட்டுக் கொண்டார். இறை அம்சம் அல்லது இறைத்தூதர் ஒருவர் மூலம் நடந்து வந்த மானுட மீட்பின் நம்பிக்கையை அகற்றி வைத்த புத்தர், தனது சொந்த முயற்சிகளின் அடிப்படையிலேயே மனித வாழ்க்கையை வெற்றியாக்க வேண்டும் என்றார். பகையையும், போரையும், வெறுப்பையும் துரத்தியடித்த புத்தர் அன்பாலும், உயிர்வதையை விலக்குவதாலும் உலகை வெல்ல இயலும் எனும் நம்பிக்கையை ஊட்டினார்.

கி.மு. 544 மே மாத வைசாகப் பவுர்ணமி முழு நிலவில் சித்தார்த்த கோதமர் பேரொளியடைந்தது, மனித இன வரலாற்றின் மாபெரும் திருப்புமுனை ஆகும். புத்தர் ஒளிபெற்ற அனுபவம் என்பது, கடவுளுடன் கட்டுண்டு பெற்றதல்ல; மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஆற்றல் ஏதுமின்றி, முழுக்க முழுக்க மனித முயற்சிகளால் கிட்டிய பேரனுபவம் ஆகும். தனது மனதையும் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவே ஒருவர் தனக்கான அமைதியையும் துன்பமற்ற நிலையையும் அடைய முடியும் என்பதே புத்தர் சொல்லும் செய்தியின் உள்ளடக்கமாகும்.

புத்தர் ஒளிபெற்ற அனுபவம் அல்லது எல்லை என்பது, கடவுளுக்கு அடங்கி

## “சொந்த மக்களுடனேயே போராடியவர்”



“இதோ இங்கே ஒரு சாக்கிய இளைஞர், பாரம்பரியப் பெருமை வாய்ந்தவர், உன்னதமான பெற்றோர் வாய்க்கப் பெற்றவர், செல்வ வளம் கொண்டவர், ஆரோக்கியமான தேகமும், உள்ளமும் உடையவர். இம்மண்ணில் அமைதியை நிலைநாட்டவும், மனிதர்களுக்கு நன்மை செய்வதற்காகவும் தம் சொந்த மக்களுடனேயே போராடினார். இந்த சாக்கிய இளைஞர், தம்மக்களின் வாக்குகளாலேயே தோற்கடிக்கப்பட்ட பிறகும் பணிய மறுத்து அதற்கான தண்டனையை தாமே வலிய ஏற்று நிற்கிறார்.

அத்தண்டனையில் அவர் செல்வத்துக்கு மாறாக வறுமையையும், வசதிகளுக்கு மாறாகப் பிச்சையையும், இல்லற நிழலுக்கு மாறாக இல்லறம் துறப்பதையும் ஏற்றிருக்கிறார். இதனால், இவர் தன்னைப் பேணவும் யாருமின்றி, தன்னுடையது என உரிமை கொண்டாடவும் ஏதுமின்றி அனைத்தையும் துறந்து செல்கிறார். இவருடைய இச்செயலானது, அவரே மனமுவந்து செய்த மிகப் பெரிய தியாகமாகும். இது மிகவும் துணிச்சலான, தீரமிக்கச் செயலாகும். உலக வரலாற்றில் இத்தியாகத்திற்கு இணையானது வேறெதுவுமில்லை. இவர் 'சாக்கிய முனி' என்றோ 'சாக்கியச் சிங்கம்' என்றோ அழைக்கப்படத் தகுதி வாய்ந்தவர்.

*- சித்தார்த்தர் துறவறம் நோக்கி விடைபெற்றபோது மக்கள் வியந்து கூறியது.*

*ஆதாரம் : 'புத்தா' - புத்த தம்மத்தின் சாரமும் அதன் நடைமுறையும்: ஆனந்த ; பக்கம் : 18 , வெளியீடு : சமருத்பாரத் வெளியீடு, மும்பை*



படிப்பகம்

www.padippakam.com

நடந்திராத ஒன்று. கடவுள் என்பது நீண்ட கால வதந்தி! வதந்திகளை நம்பாதீர்! வதந்திகளைப் பரப்பாதீர்! என்றே புத்தர் மக்களுக்கு தன்னுணர்வினை ஊட்டினார். நேரடியான அனுபவம், அதன்மூலம் விழிப்புணர்வு பெறுதல் என்பதற்கு முதன்மை அளித்தார். வேதங்களிலும் உபநிடதங்களிலும் மறைந்து கிடக்கும் உண்மையை (?) அறிவது என்கிற பார்ப்பனிய நெறியை அவர் மறுத்தார். வேதங்களோ, வேறெந்த இறைவாக்குகளோ எவருக்கும் வழிகாட்ட முடியாது என்றுரைத்த புத்தர், மனிதரை கடவுள் கைப்பிடித்து அழைத்துச் செல்லும் கருத்தியலை - காரியங்களை அடியோடு மறுத்து, 'உனக்கு நீயே ஒளி விளக்கு' என்றார். இது, பார்ப்பனியத்தோடு மட்டுமல்ல, முதலாளித்துவக் குழந்தைகளின் தொட்டில்களான எல்லா மதங்களிலிருந்தும் புத்தர் விடுபட்டு மாறுபட்டு நிற்கும் முக்கியப் புள்ளியாகும்.

# விடுதலை வேர்



ஏபி. வள்ளிநாயகம்

தலித் மக்களின் மறைக்கப்பட்ட வரலாற்றையும், மறுக்கப்பட்ட அடையாளங்களையும் வெளிக்கொணரும் அரசியல் அரங்கமாகவும், தலித் மக்களின் சமூக, மார்க்க, பொருளாதார, அரசியல் விடுதலைக்கான வேர்களைப் பண்பாட்டு வடிவங்களில் மீட்டெடுக்கும் கலை - இலக்கியத் தளமாக விளங்கும் 'தலித் கலை விழா', மதுரையில் பதினோரு ஆண்டுகளாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

தலித் கலை விழாவை நிகழ்த்தும் 'தலித் ஆதார மய்யம்' தலித் விடுதலைக்கான சித்தாந்தங்களை, தத்துவங்களை, வரலாறுகளை எழுத்துகள் வழியே படைத்தளித்து வரும் மூத்த தலித் எழுத்தாளர் ஒருவருக்கு 'விடுதலை வேர்' என்ற விருது வழங்கி மரியாதை செய்து வருகிறது. அந்த வகையில், இந்த ஆண்டின் விடுதலை வேராக சமநீதி எழுத்தாளர் ஏபி. வள்ளிநாயகத்தைத் தெரிவு செய்து, 18.3.2006 அன்று மதுரையில் நடைபெற்ற தலித் கலை விழாவில் - 'விடுதலை வேர்' விருதை வழங்கியுள்ளது. •

புத்தர், பார்ப்பனிய சாராம்சம் எதையும் ஏற்கவில்லை. சுயதர்மம் என்கிற பார்ப்பனிய ஆச்சார அனுஷ்டானங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த புத்தர், அதை ஏற்க மறுத்து அவை பிறவிச் சூழலிலிருந்து விடுதலை அளிக்க வழி வகுக்காதவை என்று எடுத்துரைத்தார். சுயதர்மம் என்பது மற்ற வர்ணத்தாருக்குப் பணிந்து ஏவல் செய்வது. ஒன்றின் சுயதர்மமே அதன் சுய கடமையாகவும் இருந்தது. நால் வர்ண அமைப்பிற்கு சுயதர்மங்களே நிறைவேற்றிக் காட்டும் கடமைகளாக்கப்பட்டது. இந்தச் சுயதர்மங்களை நிறைவேற்றுவதன் மூலம் செய்யும் கர்மங்களே தூய்மையானவை. இவற்றிலிருந்து வழுவும் போது நிகழும் கர்மங்களே பாபமானவை; தீட்டானவை. புத்தர் சுயதர்மம், பாபம், தீட்டு இவைகளைத் தூக்கியெறிந்தார். புத்தர், பவுத்தத்தையும் பார்ப்பனியத்தையும் எதிரெதிர் புள்ளியில் வைத்தார். புத்தர் மனிதருக்கு மனிதரை இணையாக வைத்தது மட்டுமின்றி, மரஞ் செடி கொடிகள், இயற்கை, பிற உயிரினங்கள் எல்லாவற்றையும் மானுட நம்பிக்கையில் இணையாக வைத்துப் போற்றப்படுவதை ஏற்படுத்தினார்.

பிறப்பால் யாருக்கும் உயர்வு தாழ்வுகள் தீர்மானிக்கப்படுவதில்லை. ஒவ்வொருவரும் இப்பிறவியில் செய்யும் செயல்களின் மூலமும், அச்செயல்களுக்குப் பின்னணியாக உள்ள நோக்கங்களின் மூலமே பிரிவுபட நேரிடும் என்றார் புத்தர். மனிதர்களை வெவ்வேறானவர்கள்; ஆனால் சமமானவர்களே என்று பிரகடனம் செய்தார். ஆனால், பார்ப்பனியப் பிரபஞ்சம் ஓடு மூடுண்ட - எல்லைக்குட்பட்ட - தங்கள் வசதிக்குட்பட்ட பிரபஞ்சமாகி நின்றது. ஆனால், பவுத்த பிரபஞ்சமோ எல்லையற்ற சமவெளியாய்த் திகழ்ந்தது. அது பார்ப்பனியத்தின் வீச்சுகளையும் மீறி விம்மிப் புடைத்தது.

பார்ப்பன - உபநிடதத்துவம் முன்வைக்கும் பிரபஞ்ச நிலைக் கோட்பாடான நன்மையும் தீமையும், இப்பிரபஞ்சத்தில் சம நிலையில் இருக்கிறது எனும் தகிடுதத்தத்தைப் பவுத்தம் மறுத்தது. மேலும், இந்தச் சமநிலை தவறும் போது அவதாரப் புருஷர்கள் அவதரிப்பதாகச் சொல்லும் கட்டுக்கதையினையும் தவிடு பொடி ஆக்கியது. பார்ப்பனியத்தின் பிரபஞ்சக் கோட்பாட்டிற்குப் பதிலாக பவுத்தம், நற்செயல்களுக்கு நற்பலன்கள்; தீய செயல்களுக்கு தீயபலன்கள் என்று அறிவித்தது. எனவே, அறச்சம நிலை என்பது, தனிநபர்களின் செயல்களைப் பொறுத்ததே. அவரவர் செயல்களுக்கு அவரவர் பொறுப்பு என்பதே பவுத்தத்தின் முடிந்த முடிவாகும். பிரபஞ்சத்திற்கு பார்ப்பனியம் இறைமயப்படுத்தியதை, பவுத்தம் அறமயப்படுத்தியதே புத்தரின் மூலச் சிறப்பாகும்.

புத்தர் நடைமுறை சார்ந்து இயங்கியவர். அவரைப் பொறுத்தமட்டில் பார்ப்பனியம் கேலிக்குரியதே. வர்ணக்குணம், வர்ணக்கடமை, சாதிப்புத்தி எதையும் புத்தர் ஏற்றுக் கொள்ளவில்லை. குணங்களின் அடிப்படையில் சதுர்வர்ணம் பிரிக்கப்படுவதை முற்றாக மறுத்து நின்றார். சுயதர்மம் (சாதிக்கடமை) பேணுவதன் அடிப்படையில் தூயவை, தீட்டானவை எனப் பிரிக்கப்பட எதுவுமில்லை என்றார். வர்ண அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகளை நியாயப்படுத்துதலை புத்தர் முழுமையாக எதிர்த்தார். பிறவி அடிப்படையில் சாராம் சமான பண்புகளையுடைய வர்ண தர்மத்தை பவுத்தம் மறுத்தது மட்டுமின்றி, சமருக்கும் ஆயத்தமானது வரலாற்றின் படைப்புப் புள்ளிக்கும் ஆதாரமானது குறிப்பிடத்தக்கது. •

- தொடரும்

> “ வேதங்களோ, வேறெந்த இறைவாக்குகளோ எவருக்கும் வழிகாட்ட முடியாது என்றுரைத்த புத்தர், மனிதரை கடவுள் கைப்பிடித்து அழைத்துச் செல்லும் கருத்தியலை - காரியங்களை அடியோடு மறுத்து, 'உனக்கு நீயே ஒளி விளக்கு' என்றார். இது, பார்ப்பனியத்தோடு மட்டுமல்ல, முதலாளித்துவக் குழந்தைகளின் தொட்டில்களான - எல்லா மதங்களிலிருந்தும் புத்தர் விடுபட்டு, மாறுபட்டு நிற்கும் முக்கியப் புள்ளியாகும். ”



படிப்பகம்

www.padippakam.com

## தலித் பிரகடனம் - 2006



தலித் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கை குழுவின் சார்பாக, தலித் மக்கள் பிரகடனம் - 2006 வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. கடந்த 60 ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் தலித் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில், பின் வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன : பஞ்சமி நிலமீட்பு, தனியார் மற்றும் சுயநிதி பள்ளி, கல்லூரிகளில் இடஒதுக்கீடு, மகளிருக்கு தேசிய அளவில் 33 சதவிகித இடஒதுக்கீடும், அதில் சரிபாதி 50 சதவிகிதம் தலித் பெண்களுக்கு உள் ஒதுக்கீடு, அரசுத் துறைகளில் காலியாக



உள்ள பணியிடங்கள் குறித்த வெள்ளை அறிக்கை, பொது வளங்களில் தலித்துகளுக்கு சமபங்கு, இரட்டை வாக்குரிமை, தலித் குடும்பங்களுக்கு தலா 5 ஏக்கர் விவசாய நிலம், தலித் மக்கள் மேம்பாட்டுக்கென அம்பேத்கர் வங்கி ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி, இப்பிரகடனம் வெளியிடப்பட்டது. இம்மாநாட்டில் ஆர்.எல். ரொசாரியோ, ப. சிவகாமி, வே. வசந்திதேவி, அ. வினோத், ஆ. சக்திதாசன், எஸ். நடராசன், வி. கருப்பன் ஆகியோர் பங்கேற்றனர். •

## பண்பாட்டுக் கூடல்

பவுத்த பண்பாட்டு அடிப்படையில் தலித் மக்களை ஒன்றிணைக்கும் நோக்கத்தோடு - 'துடி' அமைப்பும், 'பாலம்' அமைப்பும் கடந்த மூன்று ஆண்டுகளாக தலித் பண்பாட்டுக் கூடலை அம்பேத்கர் பிறந்த நாளில் சிறப்பாக நடத்தி வருகிறது. தலித் பண்பாட்டுக் கூடல் மூன்று பறை இசைக் குழுவினரின் இசைஅதிர்வுகளால் நிறைந்திருந்தது. அம்பேத்கர் மணிமண்டபத்தில் அம்பேத்கர் மற்றும் புத்தர் ஓவியங்களை ஓவியக் கல்லூரி மாணவர்கள் வரைந்தனர். இவ்வோவியங்கள் தலித் பண்பாட்டுக் கூடலின் கலைத் தன்மையையும், விடுதலைக் கூற்றினையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது. இவ்விழாவில் கிருத்துதாசு காந்தி, குமார், அமீர், பாரதி பிரபு மற்றும் பொதுமக்கள் பலரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர். •

தோழர் யாக்கன் எழுதும் 'ஜனநாயக இருள்' தொடர் அடுத்த இதழில் இடம் பெறும்.

## அம்பேத்கர் பிறந்த நாளை - சாதி ஒழிப்பு நாளாக அறிவிக்க வேண்டும்

தீண்டாமை ஒழிய காந்தி பாடுபட்டார் என்று கூறி, அவருடைய பிறந்த நாளை தீண்டாமை ஒழிப்பு நாளாக அரசு கடைப்பிடித்து வருகிறது. காந்தியின் சமகாலத் தலைவரும் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒப்பற்ற தலைவரும், இந்தியக் குடியரசின் தந்தையுமான புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள், சாதி ஒழிந்தால் தான் தீண்டாமை முற்றிலுமாக ஒழியும்; எனவே சாதி ஒழிக! என தன் வாழ்நாள் முழுவதையும் சாதி ஒழிப்புக்காக அர்ப்பணித்தார். அத்தகு ஒப்பற்ற தலைவரின் பிறந்த நாளை - சாதி ஒழிப்பு நாளாக மத்திய / மாநில அரசுகள் அறிவிக்க வேண்டும் என்று திருவண்ணாமலையைச் சேர்ந்த 'தமிழ் நாடு பாரம்பரிய பறை இசைக் கலைஞர்கள் நலச் சங்கம்' வேண்டுகோள் விடுத்துள்ளது.



இந்தியாவில் பிறந்த, சமத்துவத்தை விரும்புகிற ஒவ்வொருவரும் அம்பேத்கர் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும். குறிப்பாக, தலித் மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில் விடுதலை ஒளியை ஏற்றி, சாதி ஒழிப்பு உறுதி மொழி எடுக்க வேண்டும். தமிழ் நாடு பாரம்பரிய பறை இசைக் கலைஞர்கள் நலச்சங்கத்தினர் - அம்பேத்கர் பிறந்த நாளை, சாதி ஒழிப்பு நாளாகப் பறை இசை முழங்கி அறிவித்தனர். 14.4.2006 அன்று அ.மு. முருகராகன் திருவண்ணாமலையில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்தார். விழாவில் அ. முகமது அலி, எம். அம்பேத்கர், டி. சம்பத், வ. விஜயசாரதி, ஆனந்தராகம் ஆனந்தன், அருண்குமார், எஸ். தேவகி, எம். பாபு, வி. சசிக்குமார், எஸ். சுந்தரேசன், தே. மணிகண்டன், ப. கேசவன், எஸ். சண்முகமணி, ரா. முருகன் ஆகியோர் பங்கேற்றனர். •



படிப்பகம்

www.padippakam.com

# இட ஒதுக்கீடு × ஒரு ஜாதி ஆதிக்கம்

■ ஜி.ஆர். ரவீந்திரநாத்

அண்மையில் மத்திய அரசு, சமூக நீதி தொடர்புடைய இரண்டு முக்கிய முடிவுகளை எடுத்தது. தனியார் தொழிற் கல்வி நிறுவனங்களில் தலித், பழங்குடியினர் மற்றும் பிற் படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீட்டை உறுதிப்படுத்திட, 104ஆவது அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. மத்திய அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங் களில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகித இடஒதுக் கீட்டை நடைமுறைப்படுத்திட அறிவிப்பு வெளியிடப் பட்டது. மத்திய அரசின் இந்த இரண்டு அறிவிப்புகளையும் எந்தப் பெரிய அரசியல் கட்சிகளும் எதிர்க்கவில்லை.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கல்வியில் 27 சதவிகித இட ஒதுக்கீடு மத்திய அரசின் கல்வி நிறுவனங்களில் வழங்கப் படும் என்ற அறிவிப்பு, ஆதிக்க சாதியினரிடையே ஆத்திரத் தையும் - அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. வெறும் 15 சத விகித மக்கள் தொகை கொண்ட ஆதிக்க சாதியினர் கூட்டம், 85 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட உயர் பதவிகளையும், உயர் கல்வி இடங்களையும் இதுநாள்வரை ஆக்கிரமித்து வருகின்றனர். அவர்களின் இந்த அபகரிப்புக்கு புதிய ஆபத்து வருகிறது என்பதாலேயே, அவ்வப்பொழுது சமூக நீதிக்கு எதிரானப் போரைத் தொடங்கி வருகின்றனர்.

1990 இல் மண்டல் குழு பரிந்துரைகளின் அடிப்படையில், வேலைவாய்ப்பில் 27 சதவிகித இடஒதுக்கீட்டை நடைமுறைப் படுத்திட முன்னாள் பிரதமர் வி.பி. சிங் அறிவித்தபொழுது, அதை அன்று ராஜிவ் காந்தி கடுமையாக எதிர்த்தார். மண்டல் குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக 2 மணிநேரம் நாடாளுமன்றத்தில் பேசினார். அப்பொழுது காங்கிரஸ், ஜனதா தளம் உட்பட பல கட்சிகளின் தலைவர்களி டையே இப்பிரச்சினையில் எதிர்மறையான போக்குகள் நிலவின. தலைவர்கள் பிளவுபட்டு நின்றனர். இதனால் அன்று, மண்டல் குழு பரிந்துரை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிரான போராட்டமும் கடுமையாக இருந்தது. இன்று அந்த நிலை இல்லை. மண்டல் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்துவதை அன்று எதிர்த்த காங்கிரஸ், இன்று அதன் மற்றொரு முக்கிய பரிந்துரையை நடைமுறைப்படுத்துகிறது. இது 2006; 1990 அல்ல! இது சமூக நீதிக்கான காலம். கல்வியில் பிற்படுத்தப்பட்ட வர்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதை பா.ஜ.க.வால்கூட நேரடியாக எதிர்க்க முடியவில்லை.

இருப்பினும், வலுவான மின்னணு ஊடகங்களையும் பத்திரிகைகளையும் கைப்பற்றியுள்ள ஆதிக்க சாதியினர், இட ஒதுக்கீட்டிற்கு எதிரான நச்சுப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்து வருகின்றனர். டில்லி மற்றும் பெங்களூரில் மருத்துவ மாண வர்கள், இடஒதுக்கீட்டிற்கு எதிராகப் போராடுகிறார்கள். அதை சில ஆங்கிலத் தொலைக்காட்சிகள் முன்னுரிமை அளித்து செய்தி வெளியிடுகின்றன. சில ஆதிக்க சாதி மாணவர்கள் செய்யும் இந்தப் போராட்டத்தை ஒளி பரப்பி ஊதி பெரிது படுத்துகின்றன. தகுதி உள்ள மருத்துவர்கள் வேண்டும், திறமையான மருத்துவர்கள் வேண்டும் என உள்நோக்கத் துடன் பிரச்சாரம் செய்யப்படுகிறது. அறிவியல் பூர்வமற்ற, உண்மைக்கு மாறான, வரலாற்றைத் திரித்து பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.




இடஒதுக்கீட்டை ஆதரிக்கும் தமிழகம் : அகில இந்திய மருத்துவ அறிவியல் மய்யம், ஜிப்மர் உள்ளிட்ட மருத்துவக் கல்வி நிறுவனங்களில், உயர் மருத்துவப் படிப்புகளுக்கு 27 சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் மத்திய அரசின் முடிவை ஆதரித்து, சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 1.5.2006 அன்று ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்

இடஒதுக்கீட்டால் தகுதி, திறமை போகாது என்பது, வர லாற்று ரீதியாக இடஒதுக்கீடு நடைமுறையில் உள்ள பல மாநிலங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. வாய்ப்பு அளிக்கப் பட்டால் ஒடுக்கப்பட்ட மக்களும் திறமையை நிரூபிப்பார்கள். சமைக்க வாய்ப்பு கொடுக்காமலேயே அவர்களுக்கு சமைக்க வராது என்று குற்றம் சாட்டுவது மோசடித்தனமானது. கடந்த ஆண்டு 300 க்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், பதிமூன்றுக்கும் மேற்பட்ட தலித் மாணவர்கள், திறந்த (Open) போட்டியில் மருத்துவக் கல்லூரியில் இடம் பிடித்துள்ளனர். திறமையும் - தகுதியும் இல்லாமலா இது சாத்தியமானது?

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு பற்றி அறிவிப்பு கள் வரும்பொழுதெல்லாம் தகுதி, திறமை பற்றி வாய் கிழியப் பேசப்படுகிறது. தகுதியான - திறமையான ஆகம விதிகளையும் வேதங்களையும் நன்கு கற்றுத் தேர்ந்த பார்ப்பனர் அல்லாத மக்களை அர்ச்சகராக்க வேண்டும் எனக் கோரிக்கை எழுந்தால், இதற்கு ஒரே தகுதியாக கூறப்படுவது பார்ப்பனராகப் பிறக்க வேண்டும் என்பதுதான். பார்ப்பனராகப் பிறந்திருக்க வேண்டும் அப்படி இருந்தால், பைத்தியம் பிடித்த பார்ப்பனர்கூட அர்ச்ச



படிப்பகம்

www.padippakam.com



கராகலாம். தகுதிமிக்கவராக இருந்தாலும் பார்ப்பனரல்லாதவரால் அர்ச்சகராக முடியாது. கருவறைக்குள் நுழைவதற்கு மட்டும் இந்த ஆதிக்கவாதிகள் பரம்பரை இடஒதுக்கீட்டை வலியுறுத்துவது ஏன்? முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக திராவிட இயக்கங்கள் போராடினாலும், இன்னும் இங்கு ஒரு ஜாதி ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டுவர முடியவில்லையே!

'தகுதி - திறமை' பற்றி பேசுவது தலித் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களை இழிவுபடுத்துவதாகும். தகுதி, திறமை எனப் பேசி 27 சதவிகித இடஒதுக்கீடு வரவிடாமல் தடுத்துவிட்டால், மக்கள் தொகையில் 15 சதவிகிதமாக உள்ளவர்கள் 77.5 சதவிகித (எஸ்.சி./எஸ்.டி. இடங்கள் 22.5 போக) உயர்கல்வி வாய்ப்புகளையும் அபகரிக்கவே இம்முயற்சி. எஸ்.சி./எஸ்.டி.க்கான 22.5 சதவிகித இடஒதுக்கீட்டையும் முழுமையாக நடைமுறைப்படுத்தாமல், அந்த இடங்களையும் இந்தக் கூட்டம் கொள்ளையடிக்கப் பார்க்கிறது. சென்னை அய்.அய்.டி. இல் உள்ள 450 துறைத் தலைவர்களில் 2 பேர் மட்டுமே தலித்; 50 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள். அங்கு தலித் / பழங்குடியினர் இடஒதுக்கீடு 22.5 சதவிகிதத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தியிருந்தால், 103 இடங்களுக்கு தலித் / பழங்குடியினர் பிரதிநிதித்துவம் இருந்திருக்க வேண்டும். 27 சதவிகித இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தியிருந்தால், 121 பேருக்கு மேல் பிற்படுத்தப்பட்டோர் இருந்திருக்க வேண்டும்.

தலித், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கப்படுவதால்தான் இந்த நாடு Reserved Nation ஆக மாற்றப்பட்டுவிட்டதாகக் கதைக்கிறார்கள். 2500 ஆண்டுகளுக்கு மேலாகவே இந்த நாடு பார்ப்பனர்களின் நலன்களுக்காக மட்டுமே Reserved செய்யப்பட்ட நாடாக இருக்கவில்லையா? மநுதர்மம் தானே இந்நாட்டின் முதல் இடஒதுக்கீடு. சமூக அநீதியான, சாதி ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கான, கொடுமையான சட்ட திட்டங்களை, தண்டனைகளைக் கொண்ட இடஒதுக்கீடு! ஏகலைவனின் கட்டை விரலையும், சம்பூகனின் தலையையும் பறித்துக் கொண்ட இடஒதுக்கீட்டை மறைத்துவிட முடியுமா? இன்றளவும் முன்னுரிமை கொடுத்து வெளியிடப்படும் ராமாயண, மகாபாரதத் தொடர்கள் இதற்கு சாட்சியாக விளங்கவில்லையா?

**❝ மக்கள் வரிப்பணத்தில் படித்த 36,000 பேர் வளர்ச்சியடைந்த நாடான பிரிட்டனில், பணக்கார நோயாளிகளுக்கு சேவை செய்து கொண்டிருக்கின்றனர். 4000 பேர் பிரிட்டனில் புதிய வேலை வாய்ப்புக்காக காத்துக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்காவில் உள்ள மருத்துவர்களில் அய்ந்தில் ஒருவர் இந்தியர். ❞**

'மநுதர்ம இடஒதுக்கீடு' - சாதிய ஏற்றத்தாழ்வை, சமூக அநீதியை நோக்கமாகக் கொண்டது; சுரண்டலையும் - ஒடுக்குமுறையையும் நோக்கமாகக் கொண்டது; ஆதிக்க சாதியினரின் நலன்களை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்டது; பெண்களை அடிமைப்படுத்தும் நோக்கம் கொண்டது. ஆனால், அரசமைப்புச் சட்டத்தின்படி வழங்கப்படும் இடஒதுக்கீடு - சமூக சமத்துவத்தையும், சாதி ஒழிப்பையும் நோக்கமாகக் கொண்டது; ஆதிக்க சாதியினரின் ஆக்கிரமிப்பை அகற்றி, மக்கள் தொகைக்கேற்ப பிரதிநிதித்துவம் அளிப்பதையே நோக்கமாகக் கொண்டது; பெண்ணடிமைத் தனத்தை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டது; ஜனநாயகத் தன்மையும் பன்முகத் தன்மையும் கொண்டது.

மருத்துவக் கல்வியில் இடஒதுக்கீடு என்பது, நாட்டில் சுகாதாரத்துறையைப் பாழ்படுத்திவிடும்; திறமைமிக்க மருத்துவர்கள் இல்லாமல் போய் விடுவார்கள் என இந்திய மருத்துவச் சங்கம் இடஒதுக்கீட்டிற்கு எதிராகப் பேசுகிறது. தமிழகத்தில் 1927 முதல் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதால் - தலித், பிற்படுத்தப்பட்ட பிரிவினரில் மிகத் திறமையான மருத்துவர்கள் உருவாகியுள்ளனர். இந்தியாவின் மருத்துவத்தலைநகரமாக சென்னை திகழ்கிறது. சென்னை நகரில் உள்ள பெரும்பாலான மருத்துவர்கள் - பிற்படுத்தப்பட்ட, தலித் வகுப்பினர்தான். மேலும் பிற்படுத்தப்பட்ட, தலித் வகுப்பைச் சார்ந்த மருத்துவர்கள்தான் படிப்பை முடித்தவுடன் இந்திய மக்களுக்காக இங்கு சேவை செய்கிறார்கள். பெரும்பாலான ஆதிக்கச் சாதி மருத்துவர்கள் படிப்பை முடித்ததும் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்துக்குப் பறந்துவிடுகிறார்கள்.

இந்தியாவில் 44.6 சதவிகித மக்கள், தங்களது மருத்துவ சிகிச்சைகளுக்காக எம்.பி.பி.எஸ். படிப்பே படிக்காத போலி மருத்துவர்களையே நம்பியுள்ளனர். தகுதி - திறமை படைத்த மருத்துவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஆதிக்கச் சாதி மருத்துவர்கள், கிராமப்புற மக்கள் பற்றி கவலைப்படுவதே இல்லை. மக்கள் வரிப் பணத்தில் படித்த 36,000 பேர், வளர்ச்சியடைந்த நாடான பிரிட்டனில், பணக்கார நோயாளிகளுக்கு சேவை செய்து கொண்டிருக்கின்றனர். 4000 பேர் பிரிட்டனில் புதிய வேலைவாய்ப்புக்காக காத்துக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்காவில் உள்ள மருத்துவர்களில் அய்ந்தில் ஒருவர் இந்தியர். அதிலும் பெரும்பாலானோர் ஆதிக்க சாதியினரே. இந்திய மக்களைப் பற்றி கவலைப்படாமல் வளர்ச்சியடைந்த நாடுகளில், பணத்திற்காக சேவை செய்து கொண்டிருக்கும் மருத்துவர்களின் பிரதிநிதிகளான இவர்கள், இந்திய மக்களின் நலத்தைப் பற்றி கவலைப்படுவது கேலிக்கூத்தானதாகும்.

எனவே, இவர்களின் இது போன்ற பிரச்சாரங்களை பிற்படுத்தப்பட்ட, தலித் மக்கள் ஒன்றுபட்டு போராடி முறியடிக்க வேண்டும். இவர்களின் போராட்டங்களுக்கு எதிராக ஒன்றுபட்ட போராட்டத்தை நடத்த வேண்டும். அதுவே மத்திய அரசு தனது இடஒதுக்கீடு வழங்கிடும் முடிவிலிருந்து பின்வாங்கி விடாமல் தடுத்திட உதவும். அந்த வகையில், மத்திய அரசின் அகில இந்திய மருத்துவ அறிவியல் மய்யம், ஜிப்மர் உள்ளிட்ட மருத்துவக் கல்வி நிறுவனங்களில் உயர் மருத்துவப் படிப்புகளுக்கு 27 சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் மத்திய அரசின் முடிவுக்கு ஆதரவு தெரிவித்து, சென்னையில் 1.5.2006 அன்று, சமூக சமத்துவத்திற்கான மருத்துவர் சங்கம் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நிகழ்த்தியது. ●

இக்கட்டுரையாளர் 'சமூக சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்க'த்தின் பொதுச் செயலாளர்



படிப்பகம்

www.padippakam.com

■ அழகிய பெரியவன்

## ஜெ.ஜெ. தாஸ் - II



ஜெ.ஜெ. தாஸ்

> ஜெ.ஜெ. தாஸ் படித்தவர், பண்பாளர் என்று கேள்விப் பட்டேன். அவர் தன் சுகத்தை நாடாமல் தொழிலாளர் வர்க்க நலனுக்காக, அதுவும் இதுவரை கேட்பாரற்று இருந்த தொழிலாளர் நலனில் ஈடுபட்டிருக்கிறார் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். இவரைப் போன்ற தொழிற் சங்கத் தலைவர்கள், நாட்டில் இருக்கின்ற பெரிய பெரிய தொழில் நிறுவனங்களுக்குத் தலைவராக வர வேண்டும்.
>
> - பெரியார்

தொழிலாளர் நல அதிகாரிகளிடமும், முதலாளிகள் சங்கத்திடமும், முதலாளிகளிடமும் பேச்சு வார்த்தைக்கென்று சலிக்காமல் நடந்திருக்கின்றார், ஜெ.ஜெ. தாஸ். கூலி உயர்வு கேட்டும், போனஸ், பஞ்சப்படி போன்ற பிற நலன்களுக்காகவும் இடையறாது போராட்டங்கள் நடந்திருக்கின்றன. 1943 ஆம் ஆண்டில் மாஜிஸ்ட்ரேட் தலைமையிலான குழுவிடம் பேசி, முதன் முதலாக இரண்டு ரூபாயை பஞ்சப்படியாகப் பெற்றுத் தந்திருக்கிறார் ஜெ.ஜெ. தாஸ். மூன்று அணா என்ற அளவில் அதற்கு முன்னர் வழங்கப்பட்டு வந்த கூலி உயர்வு தொடர்பான உடன்படிக்கையும் அப்போது ஏற்பட்டிருக்கிறது. அவர் பெற்றுத் தந்த கூலி உயர்வுக்கு நன்றி கூறும் வகையில், தொழிலாளர்கள் எல்லோரும் சேர்ந்து அய்ந்து ரூபாயைத் திரட்டி - வெகுமதியாக அளித்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

ஜெ.ஜெ. தாஸ் அவர்களின் தலைமையில் வார விடுமுறைகள், தேசிய விடுமுறைகள் ஆகியவற்றையும் தொழிலாளர்களின் பணியையும் முறைப்படுத்தும்படி போராட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. தொழிலாளர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த ஜெ.ஜெ. தாஸ், தொழிலாளர் போராட்டங்களின்போது சிறை சென்றிருக்கிறார். நூல் 'கோட்டா' உரிமத்தை அவர் பெற்றிருந்ததால் அவ்வப்போது மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி, தொழிலாளர்களுக்கென இலவச துணிகளையும், உணவுப் பொருட்களையும் வாங்கித் தந்துள்ளார். 1947, 48 களில் தோல்பதனிடும் தொழிலாளர்கள் வேலையின்றித் தவித்தபோது, 'கஞ்சித் தொட்டி' வைக்கக் கோரி அரசை பலர் நாடியிருக்கிறார்கள். ஜெ.ஜெ. தாஸ் அவர்கள், அப்போதைய மாவட்ட ஆட்சித்தலைவரிடம் பேசி ஏரியில் தூர்வாரும் பணியை 'வேலைக்கு உணவு' திட்டத்தின் கீழ் பெற்றுத்தந்து தொழிலாளர் பசியாற உதவியிருக்கிறார்.

ஜெ.ஜெ. தாஸ் அவர்களைப் பற்றி நினைவுகூர்பவர்கள், அவரின் உணர்ச்சி மிக்க பேச்சையும், அவருடைய பெரும் முயற்சியால் வெளிவந்த 'உதய சூரியன்' இதழையும் முதன்மையானவைகளாகக் குறிப்பிடுகிறார்கள். அவருடைய உயரமான உடலமைப்பும், நாகரிகமாக உடை உடுத்தும் பாங்கும், தொழிலாளர்கள் இடையில் பெரும் ஈர்ப்பை ஏற்படுத்தி இருக்கின்றன. அவர் பேசும் சரளமான ஆங்கிலம் பிரமிப்பை உண்டாக்கியுள்ளது. 'தோழா தோழா' என்றே எப்போதும் தொழிலாளர்களை அவர் அழைத்திருக்கிறார். அவர் பேச்சைக் கேட்ட தொழிலாளர்கள் சுயமரியாதையையும், வீரத்தையும் பெற்றிருக்கிறார்கள். 'முதலாளிகள் தாக்கினால் அவர்களைத் திருப்பித் தாக்கு' 'அடிக்க வந்தால் திருப்பி அடி' - என்ற முழக்கங்களுடன் குருதியைச் சூடேற்றும் உரையாக அவரின் உரைகள் அமைந்திருக்கின்றன.

'யாராவது ஒரு இசுலாமியர் தாக்கப்பட்டால், இந்தியா முழுவதிலிருந்தும் இசுலாமியச் சமூகம் ஒன்றுபட்டு குரல் கொடுக்கிறது. தலித் தொழிலாளி தாக்கப்பட்டால் மட்டும் ஏன் அந்த ஒற்றுமை இருப்பதில்லை?' என்ற எடுத்துக்காட்டுகளோடும் 'குமுறும் எரிமலைப் பாட்டாளி, ஒரு நாள் குமுறியே தீருவான்' என்ற உணர்வுப் பிரவாகத்தோடும், Cant you do it? என்ற ஆங்கில இடையீடுகளோடும் அவர் நிகழ்த்தும் உரையை ஒருமுறை கேட்டால் போதும், அந்தத் தொழிலாளி போராளியாகிவிடுவான்.

யாருக்கும் அஞ்சாத உரை, ஆற்றொழுக்கான உரை, கம்பீரமான உரை, உணர்



'உதய சூரியன்' ஏடு

## மின்கோணம்



படிப்பகம்

www.padippakam.com

வுத்தீயின் அனலைக் கக்கும் உரை அவரின் உரை என்கிறார்கள். இதனாலலேயே அவருக்கு தொழிலாளர் மத்தியில் 'மாவீரன்' என்ற பட்டப் பெயர் வழங்கியிருக்கிறது.

ஜெ.ஜெ. தாஸ் அவர்களின் பேச்சுத் திறனை வியந்து, அதனால் ஈர்க்கப்பட்டு என்பேச்சுத் திறனை வளர்த்துக்கொண்டேன் என்கிறார், பேரணாம்பட்டின் சமூகச் சீர்திருத்த மேடைகளில் வெடிப்புறப்பேசும் சிறந்த பேச்சாளரான ஆசிரியர் சவுந்தர பாண்டியன். ஜெ.ஜெ. தாஸ் அவர்களின் தொழிலாளர் நலப் பணிகள், வடஆர்க்காடு மாவட்டத்தோடு சுருங்கிப் போய்விடவில்லை. வடஆர்க்காடு மாவட்ட பட்டியல்சாதியினர் கூட்டமைப்பின் முன்னணித் தலைவராகயிருந்த ஜெ.ஜெ. தாஸ், தமிழக அளவில் தோல் பதனிடும் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகவும் விளங்கியவர். இச்சங்கத்தின் துணைத் தலைவர்களாக சென்னை சைமன் பாலுவும், எல்லூர் டிட்டோவும் இருந்திருக்கிறார்கள். பொதுச் செயலாளராக சென்னை வி.பி. முருகையனும், உதவி செயலர்களாக திண்டுக்கல் ஏ.எஸ். துரை ராசும், திருவெற்றியூர் ஞானசாமியும் இருந்துள்ளனர். நிர்வாகக்குழு உறுப்பினர்களாக சேலம், கோவை, திருச்சி, பெங்களூர், பெசவாடா, சென்னை, திண்டுக்கல், செம்பியம் ஆகிய ஊர்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருந்திருக்கிறார்கள் ('தென்னாட்டு அம்பேத்கர் தளபதி கிருஷ்ணசாமி' - ஏபி. வள்ளி நாயகம்; பக்கம் 163).

பட்டியல் சாதியினர் கூட்டமைப்பினைச் சேர்ந்த தலைவர் தளபதி பள்ளிகொண்டா கிருஷ்ணசாமி அவர்களோடும் பிற மாநிலத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனும் அவருடைய தொடர்பு நெருக்கமாக இருந்துள்ளது. 1942 இல் சென்னையில் கூடிய தோல்பதனிடும் தொழிலாளர்களின் மாநாட்டில் ஜெ.ஜெ. தாஸ் அவர்கள் பங்கேற்றிருக்கிறார். இம் மாநாட்டில் ஆந்திரம், கர்நாடகம் ஆகிய பகுதிகளிலிருந்து தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றிருக்கின்றனர். தொழிலாளர்களின் தொழில் தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வு காண முயல்வதோடு மட்டும் நின்றுவிடாமல், அவர்தம் சமூகப் பிரச்சினைகளுக்கும் சேர்த்தே எழுந்திருக்கிறது ஜெ.ஜெ. தாஸ் அவர்களின் குரல். 'அரிசன' முன்னேற்ற மாநாடுகள், ஆம்பூர் உள்ளிட்ட பல பகுதிகளில் பிற தலைவர்களுடன் இணைந்த இவரின் முயற்சியால் நடத்தப் பட்டிருக்கின்றன.

பெரியார், அம்பேத்கர் ஆகியோரின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டிருந்த தாஸ், அண்ணல் தங்கோ, சி.பி. சிற்றரசு, பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின் தலைவர்களான அன்னை மீனாம்பாள், சிவராஜ் போன்றோர்களையெல்லாம் அழைத்து வந்து, தொழிலாளர்கள் இடையிலே உரையாற்றச் செய்திருக்கிறார். ஜெ.ஜெ. தாஸ் அவர்களின் மக்கள் தொண்டைப் பாராட்டும் விதத்தில் தொழிலாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில், 1947இல் பெரியார் வாழ்த்துரை வழங்க அழைக்கப் பட்டுள்ளார். ''ஜெ.ஜெ. தாஸ் படித்தவர், பண்பாளர் என்று கேள்விப்பட்டேன். அவர் தன் சுகத்தை நாடாமல் தொழிலாளர் வர்க்க நலனுக்காக, அதுவும் இது வரை கேட்பாரற்று இருந்த தொழிலாளர் நலனில் ஈடுபட்டிருக்கிறார் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். இவரைப் போன்ற தொழிற்சங்கத் தலைவர்கள் நாட்டில் இருக்கின்ற பெரிய பெரிய தொழில் நிறுவனங்களுக்குத் தலைவராக வரவேண்டும்'' என்று அக் கூட்டத்தில் பெரியார் பேசியிருக்கிறார்.

**''குடும்பத்தையும், சொந்த நலனையும் பாராமல் தன் சமூகத்துக்காக உழைத்தவர் என் சித்தப்பா.''**

தே. சுந்தரேசன்





**''ஜெ.ஜெ. தாஸ் அவர்கள் அமைத்துத் தந்த அடித்தளத்தில் தான் எங்கள் பகுதியில் சமூக சீர்திருத்த இயக்கம் கட்டப்பட்டது.''**

சவுந்தர பாண்டியன்

தலித் தொழிலாளர்களின் நாயகனாக மட்டுமின்றி, ஒரு புரட்சியாளனாகத் திகழ்ந்திருக்கும் ஜெ.ஜெ. தாஸ் அவர்களின் மற்றொரு முக்கியப் பரிமாணம் அவர் ஒரு இதழாசிரியர் என்பதுதான். 'உதயசூரியன்' என்ற பெயரில் அவர் வெளியிட்ட இதழின் விலை இரண்டு அணா. இரண்டு காளை மாடுகளைப் பூட்டி நிலத்தை உழும் ஏர் உழவனின் பின்னணியில், உதித்து எழும்பும் சூரியனின் கதிர்கள் தெரிவது போன்ற சின்னத்தைத் தாங்கி வெளிவந்துள்ளன அவ்விதழ்கள். இதழின் முகப்பு அட்டைகளில் தொழிலாளர் நிலைகுறித்த கருத்துப் படங்கள் வெளியிடப் பட்டுள்ளன. பிற்காலத்தில் 'உதய சூரியன்' என்ற பெயரும், சின்னமும் திராவிடக் கட்சியால் பயன்படுத்தப் படுவதற்கு முன்னமே ஜெ.ஜெ. தாஸ் அவர்கள், அதை தலித் தொழிலாளர்களின் விடுதலைக் குறியீடாய்ப் பயன்படுத்தி இருக்கிறார்.

தொழிலாளர்களிடையே கருத்துப்பரப்பலை செய்வதற்கு, இந்த இதழ் தாஸ் அவர்களுக்கு காத்திரமாக உதவியுள்ளது. தொழிலாளர்களின் நிலையைப் பற்றி கட்டுரைகள் இவ்விதழில் எழுப்பப்பட்டுள்ளன. சமூகச் சீர்திருத்தக் கருத்துகளும், தலித் மக்களின் நிலைபற்றிய செய்திகளும் இதழில் தொடர்ந்து வெளிவந்துள்ளன. குடியாத்தம் நகரின் சந்தைப்பேட்டை பகுதியில் இதழ் அலுவலகம் இருந்திருக்கிறது. அலுவலகத்துக்குப் பக்கத்திலேயே இருந்த 'கந்தசாமி முடி திருத்தக'த்துக்கும், 'ராமசாமி தையல் கடை'க்கும் தாஸ் அவர்கள் அவ்வப்போது மாலை நேரங்களில் வருவது வழக்கமாம். அப்போது அவரை சந்திக்கவும், பேசவும் கொஞ்சம் பேர் அங்கு காத்திருப்பார்கள்.

1941 சனவரியில் 'உதய சூரியன்' முதல் இதழ் வெளியானது. இதன் உதவி ஆசிரியராக தளபதி கிருஷ்ணசாமி இருந்தார். முதலில் வார இதழாகவும், 1946இல் மாதம் இருமுறை இதழாகவும், 1947 இல் மாத இதழாகவும் வெளியானது இந்த இதழ். வேலூர் விக்டோரியா அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்ட இவ்விதழ், சற்றேறக்குறைய தமிழகம் முழுவதும் விநியோகிக்கப்பட்டு வந்தது. தொழிலாளர் நலச் செய்திகள், பட்டியல் சாதியினர் கூட்ட



படிப்பகம்

www.padippakam.com

மைப்பின் செய்திகள், அம்பேத்கர், பெரியார் தொடர்பான செய்திகள் போன்றவைகளை, தாங்கி வந்தது (தெ.அ.தா. கிருஷ்ணசாமி. பக். 67) இதழ். இவ்விதழின் வளர்ச்சிக்கு தாராளமாய் நிதி வழங்கும்படி, தாத்தா ரெட்டமலை சீனிவாசன் துண்டறிக்கை மூலம் தமிழக ஒடுக்கப்பட்ட மக்களை கேட்டுக் கொண்டுள்ளார். தொழிற்சங்க வேலை களுடன் இதழுக்காகவும் ஜெ.ஜெ. தாஸ் உழைக்க வேண்டியிருந்தது. 'எப்போதும் படித்த படியும், எழுதியபடியுமே இருப்பார் சித்தப்பா' என்கிறார் தாஸ் அவர்களின் அண்ணன் மகன் சுந்தரேசன். 'உன் சித் தப்பா மாதிரி படித்து பெரிய ஆளாக வரவேண்டும்' என்றுதான் அவ்வப் போது சுந்தரேசனிடம் அவருடைய அம்மா சொல்வார்களாம்.

'தொழிலாளர்களை வெறுமனே கூலிக்காகப் போராடும் வயிற்று ஜீவி களாக தாஸ் அணுகவில்லை. அவர்களை கருத்தியல் தெளிவுடனும், உணர்வுட னும் வளர்த்தெடுக்க வேண்டும் என்று விரும்பியவர் தாஸ். எங்கள் வீட்டில் 'உதய சூரியன்', 'உரிமை', 'சமத்துவச் சங்கு' போன்ற இதழ்களே எங்கும் இருக்கும் என்கிறார் ஆசிரியர் சவுந்தர பாண்டியன். இவரின் தந்தையார் பெ. பெருமாள், ஜெ.ஜெ. தாஸ் அவர் களோடு நெருக்கமாக இருந்தவர். பிற் காலத்தில் தோல்பதனிடும் தொழிற் சங்க மாவட்டச் செயலாளராகப் பதவி வகித் தவர். 'உரிமை' இதழிலும், 'உதய சூரி யனி'லும் வரும் க. மாணிக்கவாசகம் போன்றோர் எழுதிய கவிதைகளை மனப்பாடமாக வீட்டிலிருக்கும்போதும், மேடைகளிலும் பெருமாள் அவர்கள் சொல் வாராம். இப்படி ஒவ்வொரு பொறுப்பாளர் களும், தொழிலாளர்களும் படித்துத் தெளி வடையும் விளக்காக 'உதய சூரியன்' விளங்கி யிருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

> பிற்காலத்தில் 'உதய சூரியன்' என்ற பெயரும், சின்னமும் திராவிடக் கட்சியால் பயன்படுத்தப்படுவதற்கு முன்னமே ஜெ.ஜெ. தாஸ் அவர்கள், அதை தலித் தொழிலாளர்களின் விடுதலைக் குறியீடாய்ப் பயன்படுத்தி இருக்கிறார்.


ஜெ.ஜெ. தாஸ் அவர்களுக்காக பள்ளிகொண்டா மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூண்

ஜெ.ஜெ. தாஸ் எந்த அரசியல் அமைப் பையும் சாராதவராக இருந்திருக்கிறார். ஆனால் அம்பேத்கர்; பெரியார் கருத்து களைப் பின்பற்றுபவராகவும் பகுத்தறிவா ளராகவும் திகழ்ந்திருக்கிறார். காங்கிரஸ் எதிர்ப்பு உணர்வு அவரிடம் மேலோங்கி இருந்திருக்கிறது. தாழ்த்தப்பட்டோர் கூட்ட மைப்புடன் மிக நெருக்கமான உறவை வைத்துக் கொண்டிருந்துள்ளார். அவரு டைய இறுதிக் காலங்களில் அரசியல் சிந் தனை அவரிடம் அதிகரித்திருக்கும்போல் தெரிகிறது. 1954 ஆம் ஆண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குடியாத்தம் இடைத்தேர்தலில் தனி வேட்பாளராக வில், அம்பு சின்னத்தில் போட்டியிட்டிருக்கிறார். இந்தத் தேர்தலில் பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின் சார்பாக பள்ளிகொண்டா தளபதி கிருஷ்ணசாமி அவர்களும், பொதுவுடைமை இயக்கம் சார்பில் வி.கே. கோதண்டராமனும் நின்றார்கள். காமராசர் காங்கிரஸ் சார்பில் நின்றார். அவரை பெரி யாரும், தி.மு.க., தமிழரசுக் கழகம், பிரபா - சோசலிஸ்ட், முஸ்லிம் லீக் ஆகிய கட்சி களும் ஆதரித்தன. இத்தேர்தலில் காம ராசர் வெற்றி பெற்று, முதலமைச்சராக ஆனார் என்பது அறிந்த செய்தி. காமராசர் முதல்வரான பிறகு ஜெ.ஜெ. தாஸ் அவர்களை 'தொழிலாளர் ஊதிய நிர்ணய வாரிய'த் தின் உறுப்பினராக நியமித்திருக்கிறார்.

ஜெ.ஜெ. தாஸ் அவர்களின் இறுதிக் காலத்தில் அவரின் வயிற்றுக் கோளாறு தீவிரமடைந்திருக்கின்றது. உணவுக் கட்டுப் பாடின்றி அதிகம் இறைச்சி உண்பவரா கவும், புகைப்பவராகவும், தொழிலாளர் பிரச்சினைகளுக்காக ஓய்வு ஒழிச்சலின்றி சுற்றுபவராகவும் இருந்தது, அவருடைய வயிற்றுப் புண்ணை அதிகப்படுத்தியிருக் கிறது. தனது 52 ஆவது வயதில் 1954 ஆம் ஆண்டு ஜெ.ஜெ. தாஸ் இறந்திருக் கிறார். அவருடைய இறுதி நாட்கள் கழிந்த பள்ளிகொண்டாவிலே, அவருடைய மனைவியின் விருப்பப்படி, அடக்கம் நடந்திருக்கிறது. பதினைந்து ஆண்டுகளாக (1933 - 54) தொழிலாளர்களின் வாழ்வு ரிமைக்கும், மனித உரிமைகளுக்கும் ஓய்வு ஒழிச்சலின்றி பாடுபட்ட அந்த மனிதருக்கு அஞ்சலி செலுத்த, சுமார் ஏழாயிரம் தோல் பதனிடும் தொழிலாளர்கள் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றிருக்கிறார்கள்.

ஜெ.ஜெ. தாஸ் அவர்களைப் பற்றிய தகவல்களை சேகரிக்க ஆம்பூர், குடி யாத்தம், வாணியம்பாடி என்று சுற்றிய போது 'அழிந்த பிறகு' என்ற சிவராம காரந்தின் கன்னட நாவல் என் நினை வுக்கு வந்தது. ஒரு மனிதன் இறந்து போன பிறகு அம்மனிதனின் நண்ப னொருவன், இறந்து போனவனின் நண்பர்களையும், ஊரையும் தேடிப்போய் அவரைப் பற்றிய ஞாபகப் பதிவுகளை அறிந்து கொள்ள முயற்சிப்பதே அந் நாவல். ஜெ.ஜெ. தாஸ் அவர்களைப் பற்றித் தேட முனைந்தபோது, நாவலில் வரும் நண்பனுக்கு ஒப்ப கசப்பான அனுபவங்களே கிடைத்தன.

அய்ம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு போராட்டவாதியைப் பற் றிச் சொல்வதற்கு யாரும் இல்லை. 'உதய சூரியன்' இதழ்களோ, தொழிற் சங்க நட வடிக்கை குறித்த எழுத்துப் பதிவுகளோ, புகைப்படங்களோ இல்லை. அவரு டைய கல்லறையிலும் கூட பிறந்த தேதி யும், இறந்த தேதியும் குறிப்பிடப்படாம லேயே நினைவுத்தூண் எழுப்பப்பட்டுள்ளது. ஜெ.ஜெ. தாஸ் அவர்களுக்கு குழந்தைகள் கிடையாது. வயதான அவருடைய அண் ணன் மகன் தவிர, இப்போது யாரும் இல்லை. இப்படியாக ஒரு போராளியைப் பற்றிய நினைவுகள் துடைத்து அழிக்கப் பட்டுக்கிடக்கின்றன. ஒரு போராளிக்குச் செய்யும் பெரும் துரோகம், அவருடைய நினைவுகளை அழித்தொழிப்பதுதான். இது அவர் உழைத்த சமூகத்திற்கு நித்திய அவமானம். ●



படிப்பகம்

www.padippakam.com



து. ராஜா

# மூர்க்கமான கருத்தியல் தேவை

...''எப்போதெல்லாம் காந்தி பிரிட்டிஷாருக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கம் நடத்தினாரோ, அப்போதெல்லாம் இந்து முஸ்லிம் மோதல் நடைபெறவில்லை. காந்தி தலைமையில் ஒன்றுபட்டு நின்றார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சியில் எப்போதெல்லாம் பார்ப்பனர்கள் ஆதிக்கம் ஏற்பட்டதோ, அப்போதெல்லாம் தான் இந்து - முஸ்லிம் மோதல் ஏற்பட்டது'' என்று பெரியார் குறிப்பிடுகிறார். இன்னொரு கோணத்தில் சொல்ல வேண்டுமானால், இன்றைய 'இந்துத்துவா' தான் அன்றைய பார்ப்பனியமாக இருந்திருக்கிறது. கோல்வால்கர் உள்பட பல தலைவர்கள், இந்தியாவுக்கு ஒரு புது வரையறையை உருவாக்குகிறார்கள்.

இந்தியாவின் கலாச்சார தேசியம் என்று பேசத் தொடங்கி, இந்தியா என்பது இந்துக்களின் நாடு என்றார்கள். இந்து ராஷ்டிரம் அமைய வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், இந்து என்பதற்கு அவர்கள் கொடுத்த விளக்கம் - அர்த்தம் பெரியார் கூறியது போல, பார்ப்பனியம் என்பதுதான். அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, 'இந்துத்துவா' என்பது வர்ணாசிரம தர்மத்தைக் கட்டிக் காப்பாற்றுகின்ற ஓர் அமைப்பாகும்.

பெரியாரை முறையாகக் கற்பவர்கள் - ஆர்.எஸ். எஸ்.அய் ஒழுங்காகப் புரிந்து கொள்ள முடியும். இன்றைக்கு இந்தியாவின் வளர்ச்சிக்கு மிகப் பெரும் சவாலாக இருப்பது ஆர்.எஸ்.எஸ். இயக்கம்தான்; இந்துத்துவா கொள்கைதான். இந்த அடிப்படையிலேதான் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கும் - பெரியார் இயக்கத்துக்கும் நெருக்கம் அதிகமாகிறது. இன்றைக்குப் பார்ப்பனியம் என்ற கருத்தாக்கம் முறியடிக்கப்பட்டாக வேண்டும். அதில் யாருக்கும் இரண்டு கருத்துகளுக்கு இடமிருக்கவே முடியாது.

பெரியார் நம்மை விட்டுப் பிரிந்து 32 ஆண்டுகளாகி விட்டன. இப்போது என்ன நடைபெறுகிறது? சாதிகள் ஒழிந்திருக்கின்றனவா? சாதிக் கொடுமைகள் ஒழிந்திருக்கின்றனவா? தீண்டாமை, அரசியல் சட்டத்தில் குற்றம் என்று சொன்னாலும் நடைமுறையில் கண்ணுக்குத் தெரிந்த - கண்ணுக்குத் தெரியாத பல்வேறு வடிவங்களில் பின்பற்றப்படுகிறது. மதத்தின் பெயரால் மூடநம்பிக்கைகள் மீண்டும் ஒரு மூர்க்கத்தனத்தோடு வளர்க்கப்படுகின்றன. பெருந்தெய்வங்களை நிராகரிக்கிறோம் என்ற பெயரால், பெரும் எண்ணிக்கையில் சிறு தெய்வங்கள், தமிழ் நாட்டில் உருவாகியிருக்கின்றன. மூலை முடுக்கெல்லாம் கோயில்கள், நடைபாதைகளில் எல்லாம் வழிபாட்டுத் தலங்கள்! எல்லா மதங்களும் இதைச் செய்கின்றன. அய்யப்ப பக்தர்களின் எண்ணிக்கை, தென்னிந்தியாவில்தான் அதிகம் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

> மார்க்ஸ் - பெரியார் - அம்பேத்கர் இம்மூவருக்கும் இடையேயான தத்துவார்த்த அரசியல் உறவுகள் பற்றிய தெளிவு வேண்டும். ஒன்றுபட்ட இயக்கமே தமிழகத்துக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் அடிப்படையான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான ஆதாரமாக அமையும்.

இந்த மத மூடநம்பிக்கைகள் திட்டமிட்டு வளர்க்கப்படுகின்றன. அதற்கு ஒரு காரணம், உலகமயமாதல் கொள்கை. இந்த உலகமயமாதல் கொள்கை வந்தபிறகு, ஏழைகளும், ஏழை நாடுகளும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்; வஞ்சிக்கப்படுகிறார்கள். வஞ்சிக்கப்படுகிற இந்த ஏழை மக்கள், வாழ்வுரிமைக்காகப் பல்வேறு போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். அதற்காக அவர்கள் ஒன்றுபடுகிறார்கள். அப்படி அவர்கள் போராடுவதற்கு ஒன்றுபடாமல் தடுக்க வேண்டுமானால், மத அடிப்படைவாதத்தை அவர்களிடம் ஊக்குவிக்க வேண்டும். மதத்தின் பெயரால், மக்களைப் பிளவுபடுத்தும் தந்திரங்களை ஆதரிக்க வேண்டுமென்று உலகமயமாதல் சொல்லுகிறது. சாதி உணர்வுகள் இப்போது ஏன் வலிமையாக இருக்கிறது? கடவுள் மறுப்பு, மத மறுப்புகள் பெரியாரால் தொடர்ந்து பேசப்பட்ட பிறகும், அந்த நம்பிக்கைகள் ஏன் வலிமையடைந்துள்ளன? இது பற்றி ஆழமான பரிசீலனை தேவைப்படுகிறது.

கருத்துக் களத்தில் - பார்ப்பனியத்தை முறியடித்தாக வேண்டும். ஆனால், நடைமுறையில் பார்ப்பனரல்லாத 'மேல் சாதி'க்காரர்களுக்கும், பார்ப்பனரல்லாத 'கீழ் சாதி'க்காரர்களுக்கும் இடையே எப்படி இணக்கத்தை உருவாக்குவது? இது, பெரியார் இயக்கத்துக்கும், பொதுவுடைமை இயக்கத்துக்கும் முன்னுள்ள ஒரு முக்கியமான சவால். நாம் இதை எதிர்கொண்டாக வேண்டும். இன்னொரு கோணத்தில் சொல்ல வேண்டுமானால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இடையே நாம் எதிர்பார்க்கக்கூடிய ஒற்றுமையை ஏன் இன்னும் உருவாக்க முடியவில்லை?

தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் ஒன்று சேரும்போது, இந்துத்துவ சக்திகள் முறியடிக்கப்படுகின்றன. உத்திரப் பிரதேச அரசியலை நீங்கள் பார்க்க வேண்டும். வட மாநிலங்களில் நடக்கும் அரசியலை நீங்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். எப்பொழுதெல்லாம், பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் ஒன்றுபட்டார்களோ, அப்போதெல்லாம் பா.ஜ.க. தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் பிளவுபட்டு நிற்கும் போது பா.ஜ.க. - இந்துத்துவ சக்திகள் வெற்றி பெற்று புதுபலம் பெறுகிறார்கள். இதைத்தான் வட மாநிலங்களில் பார்க்கிறோம். தமிழ் நாட்டில், இந்தப் பிரச்சினையில், ஒரு புதிய அணுகுமுறை தேவைப்படுகிறது.

இந்த நேரத்தில் மற்றொரு கருத்தையும் நான் சுட்டிக்காட்டியாக வேண்டும். இந்தியாவில் தந்தை பெரியாரை நாம் குறிப்பிட்டுப் பேசுவதைப் போல், டாக்டர் அம்பேத்கரையும் குறிப்பிட்டுப்



படிப்பகம்

www.padippakam.com

பேச வேண்டும். இந்திய வரலாற்றில் டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு ஒரு முக்கிய பங்கும், இடமும் இருக்கிறது. சமூக மாற்றத்துக்கானப் போராட்டம் என்று சொன்னால், அம்பேத்கரை ஒதுக்கி வைத்துவிட்டு, யாரும் சமூக மாற்றத்தைப் பேசிவிட முடியாது. 'இந்தியாவை ஒரு நவீன இந்தியாவாக நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால், இங்கே இருக்கும் சாதியமைப்புதான்' காரணம் என்று டாக்டர் அம்பேத்கர் கூறினார். 'உளவியல் அர்த்தத்தில் பார்த்தால் சாதிகள் இருக்கும்வரை, இந்தியா ஒரு நவீன இந்தியாவாக உருவாக முடியாது. ஏனென்றால், சாதிகள் எல்லாம் தேச விரோதமானவை' என்று சொன்னவர் டாக்டர் அம்பேத்கர். "நீங்கள் பொருளாதார சீர்திருத்தம் செய்ய முயன்றாலும், அரசியல் சீர்திருத்தம் செய்ய முயன்றாலும், ஒரு 'பேயை' சந்தித்தாக வேண்டும். அதுதான் 'சாதிப்பேய்' என்று குறிப்பிடுகிறார் அம்பேத்கர்.

மண்டல் குழு அறிக்கை கொடுத்து பல ஆண்டுகளுக்குப் பிறகு, வி.பி. சிங் அவர்களால்தான் ஓர் ஆணை பிறப்பிக்கப் பட்டது. அதற்கு வி.பி. சிங் கொடுத்த விலை சாதாரணமானது அல்ல. ஆட்சியையே அவர் பறி கொடுக்க வேண்டியிருந்தது. சென்ற வாரம் – வி.பி. சிங்கும் நானும் அலகாபாத்தில் ஒரு பேரணியில் கலந்து கொள்வதற்காக, ஒரே ரயிலில் பயணம் செய்தோம். அப்போது நான் அவரிடம், 'மண்டல் கமிஷன் பற்றி இப்போது உங்கள் கருத்து என்ன?' என்று கேட்டேன். வி.பி. சிங் இயல்பாகவே ஒரு கவிஞர்; அவர் சொன்னார், "மண்டல் கமிஷன் பரிந்துரையை நான் நடைமுறைப்படுத்தினேன். அதை ஒரு 'குற்றம்' என்று சொன்னார்கள். இன்றைக்கு எல்லோரும் அந்தக் 'குற்றத்தை' செய்கிறார்கள். ஆனால், தண்டிக்கப்படுபவன் நான் மட்டும்தான்' – இப்படி ஒரு கவிஞருக்கே உரிய மொழியில் வி.பி.சிங் கூறினார். அதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.









உலகமயமாதலை எதிர்த்தும் நாம் போராட வேண்டும். நான் மீண்டும் பெரியாரைப் பற்றிக் கூற விரும்புகிறேன். பெரியாரைப் போல், சிங்கார வேலரைப் போல் பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்தவர்கள் வேறு யாருமில்லை. பெண்கள், ஏன் இவ்வளவு நகைகளை மாட்டிக் கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டார். 'கணவன் மனைவியைக் கன்னத்தில் அறையும்போது, காதிலே மாட்டியுள்ள கம்மல் போய்விடக்கூடாதே என்று மனைவி குனிந்துதான் போக வேண்டும். அதற்காகவே காதிலே கம்மலைப் போட்டார்கள்' என்று பெரியார் காரணம் கூறுகிறார். பெண்களை அடித்துத் துவைப்பதற்காகவே, அவர்களுக்கு நகைகளை மாட்டி விட்டிருக்கிறார்கள் என்ற அர்த்தத்தில்தான் பெரியார் சொல்கிறார். நான் இன்றைக்கும் சொல்கிறேன், உலகமயமாதலில் இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது? உலக வர்த்தக நிறுவனத்தின் சார்பில், வர்த்தக அமைச்சர்கள் பங்கேற்ற மாநாடு இப்போது ஹாங்காங்கில் நடந்து முடிந்திருக்கிறது. அந்த உலக வர்த்தக நிறுவனம் – 'நாகரீக மாடல்' என்றால், அதற்கு தாராளமாகச் சலுகைகளை வழங்க வேண்டும் என்கிறது. அதன் காரணமாக, 'அழகுக் கலை தொழில் நுட்பம்' தொடர்பான தொழில்கள் ஏராளமாக வளர்ந்து வருகின்றன.

ஆக, உலகமயமாதல் பெண்களை வெறும் போகப் பொருளாகவே பார்க்கிறது. உலகமயமாதல் மட்டுமல்ல; 'இந்துத்துவா'வும் பெண்களை அப்படித்தான் பார்க்கிறது. பெண்களைப் பிள்ளை பெற்றுத் தரும் எந்திரமாகத்தான் 'இந்துத்துவா' கருதுகிறது. ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுதர்சன் இப்போது என்ன கூறி வருகிறார்? 'இந்துக்கள் எல்லாம் அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்' என்கிறார். நாம், ஒரு ஜனநாயக நாட்டில்தான் வாழ்கிறோமா என்று கேட்க வேண்டியிருக்கிறது. பிள்ளை பெறுவது என்பது ஒரு பெண்ணின் – மனநலம், உடல்நலம் சார்ந்த ஒரு பிரச்சனை. பெண்ணை ஒரு மனித ஜீவனாகக்கூட பார்க்காமல், பிள்ளை பெற்றுத் தரும் எந்திரமாகவே பார்ப்பது ஒரு பாசிஸ்ட் கண்ணோட்டம். அந்த பாசிஸ்ட் கண்ணோட்டத்தில்தான் 'இந்துத்துவா' பெண்களைப் பார்க்கிறது. அதே கண்ணோட்டத்தைத்தான் உலகமயமாதலும் கொண்டிருக்கிறது. இங்கேதான் நாம் பெரியாரைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

உலகமயமாதல் என்ற பெயரால் நம் சமூகத்தில் திணிக்கப்படுகிற கலாச்சாரத் தாக்குதல்கள், நம் சமூகத்தில் மதிப்புகள் மீது நடத்தப்படுகிற தாக்குதல்கள் ஆகியவைகளை நாம் எதிர்கொள்ள வேண்டும். பெரியார் சொல்வது போல், நாம் கருத்துக் களத்தில் மூர்க்கத்தனத்தோடு செயல்பட வேண்டும். இங்கேதான் பெரியாருக்கும், காரல் மார்க்சுக்கும் மிகுந்த ஒற்றுமையை நான் காண்கிறேன். அவர்களிடம் ஒரு தீவிரத்தன்மை இருந்திருக்கிறது. தீவிரத்தன்மையோடு அவர்கள் போராடியிருக்கிறார்கள். காரணம் – இரண்டு பேருக்குமே அடிப்படையாக இருந்தது மனித நேயம்தான். எனவேதான், பெரியார் இன்றைக்கும் வரலாற்றில் வாழ்கிறார். பெரியாருக்கு மரணமில்லை.

இதே 'குடி அரசு' தொகுப்பில் வெளிவந்துள்ள ஒரு சிறிய குறிப்பை நான் பார்த்தேன். அயோத்திதாசப் பண்டிதர் தொடங்கிய 'தமிழன்' பத்திரிகை பற்றிய குறிப்பு வந்திருக்கிறது. அந்தக் காலத்திலேயே ஆங்கிலம், சமஸ்கிருதம், பாலி மொழியில் ஞானம் பெற்றவர். பவுத்தத்தை முழுமையாக அறிந்தவர். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் – நாம் பேசுகிற பகுத்தறிவு – பொதுவுடைமை – சுயமரியாதை இயக்கங்களுக்கெல்லாம், அயோத்திதாசப் பண்டிதர் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார்.

இப்படி நமது தமிழ் நாட்டுக்கு – ஒரு புகழ் மிக்க நீண்ட பாரம்பரியம் இருக்கிறது. இந்தப் புகழ் மிக்கப் பாரம்பரியத்தை அடுத்த கட்டத்துக்கு நாம் எப்படி எடுத்துச் செல்லப் போகிறோம்? இதற்கு விடை தேட வேண்டுமானால், மார்க்ஸ் – பெரியார் – அம்பேத்கர் இம்மூவருக்கும் இடையேயான தத்துவார்த்த அரசியல் உறவுகள் பற்றி நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இவர்களைப் பின்பற்றுகிறவர்கள் ஒன்றுபட்ட இயக்கமாகச் செயல்பட வேண்டும். அந்த ஒற்றுமைதான் – அந்த ஒன்றுபட்ட இயக்கம்தான், தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் அடிப்படையான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான ஆதாரமாக அமையப் போகிறது. ●

---

*இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் து. ராஜா, 24.12.2005 அன்று சேலத்தில், பெரியார் திராவிடர் கழக மாநாட்டில் 'குடி அரசு' தொகுப்பை வெளியிட்டுப் பேசிய உரையின் ஒரு பகுதி. இம்முழு உரையை 'கலை' சிறு நூலாக வெளியிட்டுள்ளது.*



படிப்பகம்

www.padippakam.com

பெரியார் பேசுகிறார்

# தொழிலாளர்கள் விடுதலை பெற முதலில் மானம் வரவேண்டும் !

தொழிலாளி என்கிற பதத்துக்கு அர்த்தம் என்ன? வேலை செய்கிறவன் என்று அர்த்தமாகும். 'யாவருந்தான் வேலை செய்கிறார்கள். அப்படி இருக்க ஒரு கூட்டத்திற்கு மாத்திரம் தொழிலாளி என்று பெயர் கொடுக்கப்பட்டிருப்பானேன்?' என்றால், பிறருக்கு ஆக தொண்டு செய்து மநுதர்ம சாஸ்திரப்படி, தொழிலாளியாகவே வாழ்பவர்கள், தொழிலாளி என்று அழைக்கப்படுகிறார்கள். அந்தக் கருத்தில் பார்த்தால், திராவிடர்களாகிய நாம் யாவரும் தொழிலாளிகள் அல்லவா என்று கேட்கிறேன்.

எந்திரங்களின் முன்னால் நிற்பவர்கள் மாத்திரம் தானா தொழிலாளர்கள்? வண்டி ஓட்டுகிறவர்கள், வண்டி இழுக்கிறவர்கள், வீதி கூட்டுகிறவன், கக்கூசுக்காரன், வண்ணார், நாவிதர், குயவன், உழுபவன், விதைப்பவன், தச்சன், கொல்லன், சக்கிலி, பறையன், செக்கு ஓட்டுகிறவன், நெசவு நெய்பவன் முதலிய சரீரத்தால் உழைத்து - வயிற்றுக்கு, வாழ்வுக்கு மாத்திரம் சம்பாதித்து அன்றாட வாழ்க்கைக்கு, அன்றாடம் வரும்படி எதிர்பார்த்து நிற்கும் யாவரும் தொழிலாளி அல்லவா?

இன்று இந்த மாதிரி தொழிலாளிகள் யார்? பார்ப்பனர்களா?சத்திரியர்களா? அல்லவே! சூத்திரர்கள்தானே இந்த மாதிரியான தொழிலாளிகளாய் இருக்கிறார்கள். அந்தச் 'சூத்திரர்' என்கின்ற பட்டியலில் சட்டப்படியும், சாஸ்திரப்படியும், கடவுள் சிருஷ்டிப்படியும், காரியத்தில் நடப்புப்படியும் இருந்து வருகிறோம்! இதை எந்தத் தொழிலாளியாவது மறுக்க முடியுமா? நான் மேலே சொன்ன தொழில்களில் ஒரு 'பிராமணன்' இருக்கிறானா? ஆகவே, சரீரத்தினால் பாடுபடும் வேலை அவ்வளவும் சூத்திரர்கள் என்று அழைக்கப்படும் - ஆக்கப்பட்டிருக்கும் திராவிடர்களாகிய நம் கையிலேயே இருப்பதால், திராவிடர் இயக்கம் தொழிலாளிகள் இயக்கம் என்று சொல்லுகிறேன்.

ஆகவே திராவிடர் கழகம் என்பது, 4 ஆவது வர்ணத்தாராக ஆக்கப்பட்டு, சமுதாயத்தில் இழிவுபடுத்தி, சரீரப்பாடுபட வேண்டியதாகக் கட்டாயப்படுத்தித் தாழ்த்தி வைத்திருக்கும் ஒரு 4 கோடி மக்கள் கொண்ட சமுதாயத்தின் விடுதலைக் கழகம் என்றுதான் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட விடுதலைக் கழகத்தைத் தொழிலாள மக்கள் உணர்ந்து கொள்ளாமல், திராவிடர்களின் எதிரிகளின் ஆதிக்கத்திற்காக ஏற்பட்டிருக்கும் காங்கிரசிலும், திராவிட எதிரிகள் தலைமை வகித்து நடத்தும் கம்யூனிஸ்ட் கட்சியிலும் சார்ந்திருப்பதோடு, திராவிடர்களின் எதிரிகளுக்கு அடிமைகளாகவும் ஒற்றர்களாகவும் இருக்கும் புராணப் பிரசங்க, புராண வாழ்வுக்காரர்களுக்குச் சிஷ்யர்களாகவும் இருப்பது - எவ்வளவு அறியாமை, மானக்கேடு என்று பாருங்கள்.


கவலையுள்ள எங்களைப் போன்றவர்களையும் திராவிடப் பிள்ளைகள் பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டு அடிக்கிறார்கள், உதைக்கிறார்கள், காலித்தனம், காலடித்தனம் செய்கிறார்கள் என்பதல்லாமல் வேறு என்ன? இப்படிப்பட்ட மானம் கெட்ட மானத்தில், ஈனத்தில் கவலையில்லாத ஜாதி எந்தக் காலத்திலும் முன்வர முடியாது. ஆகவே நம் திராவிடர்களுக்கு, தொழிலாளர்களுக்கு, சூத்திரர்களுக்கு விடுதலை, மாறுதல் வேண்டுமானால் முதலில் மானம் வரவேண்டும். எதிரிக்கு விபீஷணனாய், அனுமாராய் இருப்பதைப் பற்றி வெட்கப்பட்டு எதிரியை, எதிரி ஆயுதத்தை வெறுக்க வேண்டும். தனது இழிவுக்கு அடிப்படை எது என்று பார்த்து அதைப் பெயர்த்து தகர்த்தெறிய வேண்டும்.

சில தொழிலாளர் தலைவர்கள் என்பவர்கள் என்மீது குரோதம் கொண்டிருக்கிறார்கள். என்னைப் பற்றி விஷமப் பிரச்சாரம் செய்கிறார்கள். 'ராமசாமி நாயக்கர் மதத்தில், கடவுளில் பிரவேசிக்காவிட்டால் - நான் அவருடன் நேசமாக இருப்பேன். ஆனால், அவர் நாத்திகம் மதத்துவேஷம் பேசுகிறார். ஆகையால் ஜாக்கிரதையாக இருங்கள்' என்று உங்கள் தலைவர்களில் சிலர் சொல்லி, உங்களை என்னிடம் அணுகவிடாமல் செய்கிறார்கள். அதைப் பற்றி எனக்கு கவலையில்லை.



எது மதம், எது கடவுள் என்பது இந்த அன்னக் காவடிகளுக்குத் தெரியுமா? நான் எந்த மதத்தை, எந்தக் கடவுளை ஒழிக்க வேண்டும் என்று சொல்லுகிறேன் என்பது, இந்தத் தற்குறிகளுக்குத் தெரியுமா என்று கேட்கிறேன். எந்த ஒரு மதம் ஒரு மனிதனை, 'பிராமணனாக'வும் ஒரு மனிதனைச் சூத்திரனாகவும் அதாவது தொழிலாளியாகவும் - பாட்டாளியாகவும், பறையனாகவும் உண்டு பண்ணிற்றோ, அந்த மதம் ஒழிய வேண்டும் என்று சொல்லுகிறேன். ஒழிய வேண்டுமா வேண்டாமா? (ஆம், ஒழிய வேண்டும் என்னும் பேரொலி).

எந்தக் கடவுள் ஒருவனுக்கு நிறையப் பொருள் கொடுத்தும், ஒருவனுக்குப் பாடுபடாமல் ஊரார் உழைப்பில் வாழ உரிமை கொடுத்தும் மற்றொருவனை உழைத்து உழைத்து ஊரானுக்குப் போட்டுவிட்டுச் சோற்றுக்குத் திண்டாடும்படியும், ரத்தத்தை வேர்வையாய்ச் சிந்தி உடலால் உழைத்த வண்ணம் இருந்து - கீழ் மகனாய் வாழும்படியும் செய்கிறதோ, அந்தக் கடவுள் ஒழிய வேண்டும் என்று சொல்லுகிறேன். அந்தக் கடவுள் ஒழிய வேண்டுமா, வேண்டாமா? ஆகவே தோழர்களே! இது சொன்னால் நான் நாத்திகனும், மதத்துவேஷியுமா? 'ஆம் ஒழிய வேண்டும்' என்று சொன்ன நீங்கள் மதத்துவேஷியா, நாத்திகர்களா?



*சென்னை 'பி அண்ட் சி மில்' தொழிலாளர்கள் கூட்டத்தில் 30.6.1946 அன்று ஆற்றிய உரை*

"எது மதம், எது கடவுள் என்பது இந்த அன்னக் காவடிகளுக்குத் தெரியுமா? நான் எந்த மதத்தை, எந்தக் கடவுளை ஒழிக்க வேண்டும் என்று சொல்லுகிறேன் என்பது, இந்தத் தற்குறிகளுக்குத் தெரியுமா? எந்த ஒரு மதம் ஒரு மனிதனை, 'பிராமணனாக'வும் ஒரு மனிதனைச் சூத்திரனாகவும் அதாவது தொழிலாளியாகவும் - பாட்டாளியாகவும், பறையனாகவும் உண்டு பண்ணிற்றோ - அந்த மதம் ஒழிய வேண்டும் என்று சொல்லுகிறேன். ஒழிய வேண்டுமா, வேண்டாமா?"



படிப்பகம்

www.padippakam.com

Dalith Murasu, Tamil Monthly Regd. No. TN/CH(C)/43/04-06 Posted at Patrika Channel Egmore RMS/1 Periodicals. Registered with the Registrar of News Papers for India Under No. TNTAM/2003/11948. Licensed to Post without Prepayment Licence No. 32

மதம் மாறும் உரிமை, அடிப்படை மனித உரிமை.
அதை மறுக்கும் சட்டத்தை நீக்கு.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை
வன்மையுடன் செயல்படுத்து.

கருவறையில் உருவெடுக்கும் சாதியத்தைக் கருவறுக்க,
அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்கு.

தலித் கிறித்துவருக்கும், இசுலாமியருக்கும்
இடஒதுக்கீட்டினைத் தட்டாமல் வழங்கு.

பெண்களுக்கு அரசியலில் 33 சதவீதம்
இடஒதுக்கீட்டை உள்ஒதுக்கீட்டுடன் கொடு.

உயர் கல்வி பயிலும் தலித் மாணவர்களுக்கு
கல்வி உதவித் தொகையை உறுதி செய்.

பழங்குடியினரின் நிலம் மற்றும் காடுகள் மீதான உரிமையை
மதித்து, அவர்களின் பண்பாட்டைக் காப்பாற்று.

பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம்,
கொட்டக்காச்சியேந்தல் - ஜனநாயகத்தின் அவமானச்
சின்னங்கள். இங்கெல்லாம் சட்டமன்றத் தேர்தலை நடத்த முடிகிறது!
உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியவில்லையா?

இவை -
தலித் மக்களால் இடையறாது
எழுப்பப்படும் முழக்கங்கள் மட்டுமல்ல;

அரசமைக்கப் போகும் கட்சி
நிறைவேற்ற வேண்டிய கடமைகள்;

தலித் இயக்கங்கள் வென்றெடுக்க
வேண்டிய சவால்கள் !

படிப்பகம்